271

உ
கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—(திருக்குறள்)

தொகுதி ௰.	காளயுக்தி௵ ஆவணி-புரட்டாசி௴	பகுதி அ—கூ.
Vol—X.	SEPTEMBER & ACTOBER 1918.	No. 8—9.

கல்வி பயிற்றுவதன் கருத்து.

தற்போது தேசியக்கல்விச் சங்கத்தார், கல்வி விஷயமாகக் கொண்டு வந்திருக்கும் சீர் திருத்தங்களில் முக்கியமானதாவது, பாடசாலைகளில் சன்மார்க்கோபதேசமும் வினயசம்பத்துப் பழக்கமும் அதிகமான கவனத்துடன் கற்பிக்கப்படவேண்டியவைக ளென்பதேயாம். இக்காலத்துப் பாடசாலைப் பாடங்களிலெல்லாம் புத்திநுட்பத்துக்கு வேண்டியவற்றை மாத்திரம் மிகுதியும் கவனித்துக்கொண்டு வருகிறபடியால் இதனுடன் சன்மார்க்கோபதேசமும் அடக்கமும் அவசியம் போதிக்கப்பெற்று அநுபவத்திலும் கொண்டுவரத் தக்கனதாம் என்று அவர்கள் வற்புறுத்தியிருக்கின்றார்கள். மாணவரது புத்தி நுட்ப விசேஷங்களெல்லாம், பரீக்ஷையில் தேறினபடியிலிருந்து கவனிக்கப்படுகின்றன. ஆளுக்குரிய முற்போக்கை மட்டும் கவனித்தவர்களாகி, மாணவர்களின் தாரதம்மியத்தைப் பாடசாலைகளில் கவனிக்கின்றார்களே யன்றி, ஆத்மதர்ம முன்னேற்றத்தைப் பற்றி விசேஷ கவனஞ்செலுத்துகின்றார்களில்லை. ஆனால், இந்த அற்பமான எண்ணம் நமது இந்தியநாட்டில் மாத்திரந்தான் பரவியிருக்கின்றது. என்று எண்ணுவதற்கு இடமில்லை; முற்போக்கில் முன்போகியதாகக் கருதப்படும் ஜர்மனியிலுங்கூடப் பரவியிருக்கின்றது. கல்வியிலாகாவில் மிகத் தேர்ச்சி பெற்ற ஒருவரால்

ஆறுவருஷங்கட்கு முன்னால் எழுதப்பெற்ற ஒரு புஸ்தகத்திலிருந்து இது நன்றாகப் புலனாகின்றது. "மாணவனுடைய புத்திநுட்ப வளர்ச்சியால் தோன்றும் ஆளுக்குரிய முன்னேற்றத்தின் வெற்றியே. பாடசாலையை நீடித்து நடத்தும் ஒரு திவ்ய சக்தியாக இருக்கின்றது." என்று அவர் சொல்லுகிறார். ஆனால், ஐரோப்பாவின் முக்கியமான தேசங்களிலும் அமெரிக்காவிலும் உள்ள ஜனப்பெருந்தொகையார் இப்போது தெளிவடைந்து, "பாடசாலைகளில் மாணவரது ஒழுக்கங்களை மிகுதியும் கவனிக்கவேண்டுவதே பாடசாலை நடத்தப்பெறுவதன் முக்கியநோக்கமாக இருக்கவேண்டும்" என்று கருதுகின்றார்கள். "சிறுவர்களின் மனதில் தேச க்ஷேமத்துக்கு வேண்டியவைகளை விதைத்தலே தேசமுன்னேற்றத்துக்கு நல்ல உதவியாகும்" என்றும் சொல்லுகிறார்கள். சில வருஷங்கட்கு முன்னரே இந்த உயர்ந்த எண்ணம் அவர்கட்குத் தோன்றியுள்ளதாயினும் தற்போது நடந்துகொண்டிருக்கும் யுத்தமானது, அதன் ஆவசியகத்தை நன்றாக வற்புறுத்திக்கொண்டிருக்கின்றது. ஆகையினால், மேல்நாடுகளில், தேசசுதந்தரத்தில் பழகிவரவேண்டிய நற்பழக்கமே பொதுப்பாடசாலைகளின் முக்கிய நோக்கமாகக் கவனிக்கப்பட்டு வருகின்றது.

1907-ம் வருஷத்தில் லண்டன் மாநகரில், கல்வியில் கவனஞ் செலுத்தும் பெருந்தகையாளர்களின் பெருந்தொகையோரது பிரதிநிதிக்கூட்டமொன்று கூட்டப்பெற்று, பலவகைப்பட்ட தேசங்களிலுள்ள பாடசாலைகளில் நடந்தேறிவரும் பலவகைப்பட்ட சன்மார்க்கோபதேச முயற்சிகளின் பயனைப்பற்றிய பொதுவிசாரணையொன்றும் செய்யப்பெற்றது. அந்த விசாரணையின் முக்கிய அம்சமானது "பிரான்சு ஜப்பான் முதலிய தேசங்களின் பள்ளிக்கூடங்களில் போதிக்கும் முறைப்படி போதித்து வருவோமானால் அந்தவிதமான சன்மார்க்கோபதேச பலத்தினால் மாணவர்கட்குத் தேசக்ஷேமத்திலும் உலகக்கூட்டுறவிலும் கவனம் அதிகமாகச் செலுத்துவதற்குத் தக்க காரணங்கள் இருக்கின்றனவா? என்பதாகயிருந்தது." பள்ளிக்கூடங்களில் போதிக்கப்பெறும் சன்மார்க்கோபதேசமே மாணவர்க்கும் மகாநாட்டுக்கும் மன்னவர்க்கும் மன்பதைக்கும் மாட்சிமையைப்

பிற்காலம் தருவதிற் சிறந்த உபதேசமுறையாகும் " என்பது அந்த விசாரணையினல் தெளியப்பெறப்பட்டது. மதோபதேசம் சன்மார்க் கோபதேசம் ஆகிய இவ்விரண்டினுமிருந்த பேதபுத்தியானது அது முதலே நீங்கத்தலைப்பட்டது. மதக்கொள்கைகளில் சன்மார்க்கோப தேசங்களே மிகுதியும் ஊன்றியிருக்கின்றனவாகினும் மதாசாரியர்கள் அவ்வுபதேசத்தை வேறுபிரித்துக்காட்டிவந்தபடியால், சிலர் அவ்வி ரண்டினுமே வெறுப்புக்காட்டிக்கொண்டிருந்தார்கள். சிலர் மதோப தேசத்தையே பாடசாலையிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்றும் ஆலோசித்திருந்தார்கள். அவர்கள் அதற்குக்காரணஞ் சொன்னதா வது; பாடசாலைகளில் படித்துவரும் பலவகுப்பானபிள்ளைகட்கும் பொதுவாக இருக்கக்கூடிய மதப்படிப்பும் மதோபதேசமும் இல்லை யாகையாலும், ஒரே வகுப்புக்கு உரித்தான மதக்கொள்கைகளைப் பாடசாலைகளில் உபதேசிக்கப் புகுவதால், பல வகுப்புப்பிள்ளைகளையு முடைய பாடசாலையானது முற்போக்கை யடைவதற்குத்தடைபெற்று நிற்கின்றதாகையாலும், கூட்டுறவு சக்தியைப் பலப்படுத்துவதற்கே நாம் பலவகுப்புப் பிள்ளைகளையும் பல தேசமாணவர்களையும் கூட்டி யிருக்கின்றோமாகையாலும் இந்த ஆலோசனையை செய்கின்றோமென் றூர்கள். ஆனல், சிலர், சன்மார்க்கோபதேசமானது, பொதுவான மாணவநீதிபோதனையாகுமேயன்றி ஒருவகுப்பாரது வேதக்கொள்கை களையே பின்பற்றி யிராதென்றும், இவ்வுபதேசமொன்றே மாணவர் களைக் கூட்டுறவிலும் தேசக்ஷேமத்திலும் கவனிக்கும்படியாகத் தூண்டிவிடுமென்றும், இதற்குப் பிரான்சும் ஜர்மனியுமே காட்டா நிற்கின்றனவென்றும், வாதித்தார்கள். மற்றும் சிலர், மதோபதேசங் களே சன்மார்க்கத்தையும் நல்லொழுக்கத்தையும் எழுப்பிவிடுகின்றன வென்றும், அதனல் சன்மார்க்கோபதேசமும் மதோபதேசமும் ஒரு போதும் வேருகப்பிரிக்கப்படக்கூடியன அல்லவென்றும் மன்றாடி னார்கள். எற்றசாக்ஷிகளும் " மதோபதேசமே சன்மார்க்கோபதேசத் தைத் திருந்தப்பெறுவதற்குத் தகுதியான பற்றுக்கோடாக இருக் கின்றது." என்பதை வற்புறுத்திக் காட்டின. " ஜப்பானிலும், மத சம்பந்தமில்லாது சன்மார்க்கோபதேசமட்டிலும் நடத்திவரப்பெறும் பாடசாலைகளைக்காட்டிலும், இரண்டும்கூடி உபதேசிக்கப்பெறும் பாட சாலைகளே மிகவும் திருப்திகரமாக அரசாங்கத்தாரால் கொள்ளப்பட்

டிருப்பதுடன், அவைகளே நல்லொழுக்கம் நிறைந்த பல மாணவர்களைத் தேச க்ஷேமத்தைக்கருதியுதவியிருக்கின்றன" என்றும் பலர் வாதுபுரிந்தனர். "மதசம்பந்தமான படிப்பு அவசியம் வேண்டுவது தான் என்று 1890–ம் வருஷத்தில் ஜப்பான் அரசர் வற்புறுத்தி வைத்தபிறகே சன்மார்க்கோபதேசம் பயன்பெற்றது" என்றும் "மதபோதனையே மாணவர் மாணவராதியரது இருதய ஸ்தானத்திற் புகுந்து மனேசலனத்தையுண்டுபண்ணி மனக்கடுமையை இளக்குகின்றது" என்றும் "மதசம்பந்தமில்லாத சன்மார்க்கோபதேசம் திருப்தியான பயனைத் தரமாட்டாது" என்றும் பலர் உறுதிகூறினர் "கூடுமானல் பொதுவான மதத்தையே உபதேசிக்கும் மார்க்கத்தை ஏற்படுத்திப் பாடசாலைகளில் அவசியம் மதபோதனையுடன் நீதிபோதனையும் கற்றுக்கொடுத்தலே சரியான வழியென்றும் தீர்மானிக்கலாயினர்.

போதகரின் தன்மை.

மேலே சொல்லப்பட்ட அந்த பெருங்கூட்டத்தின் தீர்மானத்தைப்பேசி முடிக்கும்போது, வித்யாபாரங்கதரான ஸாட்லர் என்பவர் மூன்று முக்யமான உருவாக்கும் சக்திகளை எடுத்துக்காட்டினர். அம்மூன்றனுள்ளும் போதகரின் தன்மையைப் பற்றியே விசேஷித்துப் பேசி முடித்தனர், "சன்மார்க்கப் படிப்புக்கு முக்யமான அம்சமாகிய நல்லபோதகரின் அமைப்பே பாடசாலையை ஒழுங்குபடுத்திக் கொடுக்கும்" என்று அவர் கூறினர். உபாத்தியாயரின் நல்லொழுக்கமே பள்ளிக்கூட ஒழுங்குக்கு முக்கியமான அறிகுறியாக இருக்கின்றது. அவரே பாடசாலைக்குக் குணத்தைப் படைத்துக் கொடுப்பவர். அவரது மனப்பாங்கே பள்ளிக்கூடத்தின் தொழிலனை யெல்லாம் இயக்குகின்றது. அவரது உயிர்போன்ற நன்னடத்தைகளே மாணவர் முகத்தின் முன்னர் எப்போதும் நின்று கொண்டிருக்கும். ஆகையால், ஒரு உபாத்தியாயர் அற்பமனதுடையவராக இருந்துவிடுவாரானல், அவரது அருவருக்கும் சக்தியே மாணவரையும் பற்றிக்கொண்டு பாழ்செய்யும். உபாத்தியாயர் ஆழ்ந்த புத்தியும்

கூட்டுறவிற் கலந்துழைக்கும் கூரிய அறிவும், பொதுக்காரியங்களான காரியங்களில் தன்னையும் மறுக்கக்கூடிய சக்தியும் உடையவராக இருப்பாரானால், மாணவரும் அவரைப் பின்பற்றி நடந்து நல்லொழுக்கங்களில் திருந்திவருவார்கள். அதிர்ஷ்டவசமாக, ஒரு பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் இலக்கியங்களிலும் சாஸ்திரங்களிலும் கைத்தொழில்களிலும் சித்திரவித்தையிலும் சங்கீதசாஸ்திரத்திலும் தேகாப்பியாஸத்திலும் பிரியமும் பழக்கமுமுடையவர்களாகி நல்லொழுக்கமுடையவர்களாகக் கிடைக்கப்பெறுமாயின், அந்தப் பாடசாலையானது மற்றப் பாடசாலைகளுக்கு நல்வழிகாட்டும் மாதிரிப் பள்ளிக்கூடமாகவே கருதப்படும் என்பதில் யாதொரு ஐயமுமிராது. இத்தன்மை வாய்ந்த மனிதனொருவனே பலராஜ்யங்களைச் சீர்திருத்தவும் அவைகட்குப் புகழினைத் தேடிக்கொடுக்கவும் வல்லவனாகின்றான். ஏனெனில், இவனொருவனே ஒரு தேசத்துப் பலவகுப்புப் பிள்ளைகளையும் ஒருமனப்படுத்தி உபகாரிகளாக்கி உலகக் கூட்டுறவில் உறுதியும் ஒற்றுமையுங் கூடியுழைப்பவர்களாக்கிவிடுகின்றான்.

மிஸ்டர் எப். ஜி. குட் என்பவர் தகுந்த வார்த்தைகளால் சொல்லுவதாவது:—"சந்யாஸிகள்போல் எப்போதும் ஒதுங்கியேயிருந்து நகரத்திற்குறிய கூட்டங்களிற் கூடாமலும் தமது அபிப்பிராயங்களை மற்றவர்க்குச் சொலலியும் மற்றவர் அபிப்பிராயங்களைத் தாம் தெரிந்துகொண்டும் தேசப் பொதுக்காரியங்களில் உழைக்காமலும் இருப்பது உபாத்தியாயர்கட்கு மிகவும் பாவகரமான செயலென்றே கருதப்படுகின்றது."

அயர்லாந்தைப்போலவே இந்தியாவிலும் மாணவர்களைத் தேசசுதந்தரவுணர்ச்சியுடையவர்களாகச் செய்யும் ஆயத்தத்திலிருக்கும் உபாத்தியாயர்கள், தாங்களும் தேசசுதந்தரவாளிகளைப்போலவே தேசப்பொதுவிஷயங்களிற் கலந்து உழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். தங்களுடைய உபாத்திமைத் தொழிலிலும் கலாசாலைகளின் அபிவிருத்தியிலும் கலாசங்க ஸ்தாபனங்களிலும் ஆகவேண்டிய காரியங்களில் ஆலோசனைகளைச் சொல்வதற்குக்கூடச் சுதந்தரமற்றுக் கேவலம் வித்யாகர்வத்துடன் மாத்திரம் தங்களது வாழ்நாட்களைக்

கழித்துக்கொண்டிருப்பது கற்றறிந்தடங்கிய உபதேசகர்கட்கு எத்துணை பாவச்செயலாக இருக்கின்றதென்று ஆலோசித்துப்பாருங்கள். ஜனப்பொதுநன்மையானது பொதுஜன க்ஷேமத்திலிருந்தும், பொதுஜன க்ஷேமமானது தேசசுதந்தரத்திலிருந்தும், தேசசுதந்தரமானது பொதுஜனக்கூட்டுறவிலிருந்தும், பொதுஜனக்கூட்டுறவு தேசாபிமானத்திலிருந்தும், தேசாபிமானமானது தேசப் பொதுஉணர்ச்சியிலிருந்தும் தோன்றுமாறிருக்க, அவ்வுணர்ச்சிக்கு முக்கிய சாதனமான கல்வியின் துறைகளிற் பாடுபட முன்வந்திருக்கும் உபாத்தியாயர்கள் புஸ்தகங்களிலுள்ளவற்றை மாத்திரம் மாணவர்க்குப் போதித்துவிட்டு அவற்றை அநுபவத்திற்குக் கொண்டுவரவேண்டிய முறையில் தாங்களும் கலந்துழைத்துக் காட்டாமலும் மாணவர்களையும் கலக்கவிடாமலும் சன்யாஸதர்மத்தையனுஷ்டித்துவந்தார்களானல் படித்த படிப்பிற்குப் படிப்பின்பயன் யாதாகுமோவென்று ஆலோசித்துப் பாருங்கள். ஆகையினுல், உபாத்தியாயர்கள் இனியேனும் விழித்தெழுந்து தங்கள் தேயத்திற்குரிய சுதந்தரமின்னதென்றும் பொதுஜனக்ஷேமம் இன்னதென்றும் தெளிந்து நகரப்பொதுக் கூட்டங்களிற் சேர்ந்துகொண்டு நாட்டுக்கு நாகரிகமும் நன்மையும் தோன்றும் வழியில் உழைத்துத் தாங்கள் படித்த கல்வியின் பயனைப் பெறுவார்களென்று வற்புறுத்துகின்றோம். தேசத்தின் பொதுநன்மை வளர்ச்சிக்கு முக்கியக் கொழுகொம்புபோன்றுள்ளவர்கள் எப்போதும் மாணவர்களேயாவர். ஏனெனில், அவர்களது தேசாபிமானவுணர்ச்சிதான் தேசத்தைப் பிற்காலத்தில் நல்ல ஸ்திதியில் கொண்டுசெலுத்தக்கூடியது. அத்தகைய மாணவர்களின் மனதுடன் மிகுதியும் பழக்கமுள்ளவர்கள் உபாத்தியாயர்களாகவே இருக்கின்றார்கள். உபாத்தியாயர்களுடைய நடத்தைகளைத்தான் மாணவர்களும் பின்பற்றக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஆகையினுல், தேசநன்மையைக்கருதி உபாத்தியாயர்கள் தாங்களும் பொதுக்கூட்டங்களிற் கலந்துழைத்தும் மாணவர்களையும் கலந்துறவாடவிட்டும் உதவுவார்களென்றும் நம்புகின்றோம். மாணவர்கள் தங்களது பாடசாலைப் படிப்புநிறுத்தப்பெற்று வெகுகாலங்களானபோதிலும், தங்கள் உபாத்தியாயர்களைக் கண்டவுடன் அன்பும் ஆதர

வும் காட்டக் காண்கின்றோமாதலால், உபாத்தியாயர்களுடைய தேசப் பொது உழைப்பே மாணவர்க்கு வழிகாட்டியாக இருக்குமேயன்றி, பொதுஜன மேடைப்பிரசங்கங்கள் மாணவர்கட்கு அத்துணை நன்மையைப் பயக்கும் என்று கருதக்கூடவில்லை. உபாத்தியாயர்கள் பொதுஜனசங்கத்தில் வந்து கலந்துழைக்காத குறைவே பொதுஜன கவரவம் அவர்கட்கு இல்லாமற் போவதற்குக் காரணமாக நிற்கின்றது. உலக நன்மைக்குப் பரமமான காரணம் ஸத்வித்யோபதேசமேயானாலும், வித்யாபோதகர்கள் பொதுக்கூட்டத்தில் கலந்துழைக்காத காரணத்தினாலேயே, பொதுஜனங்கள் அந்தப் பரம காரணத்தை விரைவில் அறிந்துகொள்ளக்கூடாதவர்களாக இருக்கின்றார்கள். அதன் காரணமாகவே உபாத்தியாயர்கட்கு அவர்கள் கவரவம் அளிக்க முன்வருவதில்லை. தங்கள் பிள்ளைகளின் புத்தியைத் துலக்கும் இயந்திரங்களாக மட்டும் எண்ணியிருக்கின்றார்கள். ஆலோசித்துப் பார்த்தால், இத்தொழிலைக் காட்டிலும் அறிவுக்கு ஆதாரமானதும் தேசநன்மையைத் தரும் திவ்ய காரணமானதும் பொதுஜனவுணர்ச்சியைப் புகட்டும் புண்யகாரணமானதும் கூட்டுறவைக் குறித்திடும் குலத்தொழிலானதும் வேறொன்று இருக்கின்றது என்று சொல்வதற்கு இடமில்லாமலிருக்கின்றது. ஆஹா! உபாத்தியாயருடைய பரிசுத்தமான தொழிலுக்கும் அவரது தனிமையான சந்யாஸநிலைமைக்கும் எத்துணை வித்யாஸமிருக்கிறது பாருங்கள். ஆகலான், உபாத்தியாயர்கள் எழுந்து நின்று பொதுக் கூட்டங்களிற்கூடி நாட்டுக்கு நலமான வழிகளில் உழைத்து மாணவர்களையும் அவ்வழியில் ஊக்குவதே கல்வி பயிற்றுவதன் கருத்தும் பயனுமென்று எமக்குத் தோன்றுகின்றது.

பத்திராதிபர்,

சுகாதாரமும், வைத்தியமும்.

வாந்திபேதிகாலங்களில் அநுசரிக்கவேண்டிய விதிகள்.

வாந்திபேதி பரவியிருக்கும் காலங்களில் நாம் மிகுந்த ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். நாம் உடுக்கும் வஸ்திரங்கள் எப்போதும் சுத்தமாயிருக்கின்றனவாவென்று கவனித்துக்கொள்ளவேண்டும். தேகம் சற்று பலஹீனமாயிருந்தால், வெந்நீரில் ஸ்நானஞ்செய்ய வேண்டும். நன்றாய் ஜீர்ணமாகத்தக்கதும் புஷ்டிதரத்தக்கதாயுமுள்ள ஆகாரங்களையே புசிக்கவேண்டும்.

எப்போதும் புதிதாய்ச் சமைக்கப்பட்ட சோற்றையே உண்ண வேண்டும். சமையலானபிறகு அவற்றின்மேல் ஈக்கள் வந்து உட்காராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், ஈக்கள் விஷக்கிருமிகளைப் பரவச்செய்யக்கூடியனவாயிருப்பதனால், இவ்விஷயமாய் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

ஜனோபகாரி.

விசேஷ வர்த்தமானம்.

ஒரு அதிசய சிசு.

செங்கற்பட்டுக்கடுத்த காவித்தண்டலம் கிராமத்தில் ஒரு பெண்ணுக்கு ஆண்குழந்தையொன்று பிறந்தது. அக்குழந்தைக்கு தலை ஒன்றும், நான்கு கால்களும், நான்கு கைகளும், இருந்தன. அது 3-மணிநேரம் உயிருடனிருந்தது.

நாலுகால் கோழிக்குஞ்சு.

சென்னை மிஸ்டர் நாண்டெரி என்னும் பிரும்பீள்ட் தோட்டத்தின் துரையினிடமிருக்கும் கோழி பொரித்த குஞ்சுகளில் ஒரு குஞ்சுக்கு நான்கு கால்களிருந்தனவாம். இப்போது அக்குஞ்சுக்கு வயது 2-மாதமாகிறதென்றும் இதுவரை சவுக்கியநிலையிலிருக்கிறதென்றும் தெரியவருகிறது.

விஸ்வகர்மன்.

ஸ்ரீ:

புகையினால் வருங்கேடு.

புகையிலைச் சுருட்டு உபயோகிப்பதால் அநேகவிதமான தீங்குகள் விளையுமென்பதில் யாதொரு விதமான ஸந்தேகமுமில்லை. புகையிலையைச் சுருட்டாகவோ வேறுவிதமாகவோ உபயோகித்து வருபவர் பலமான வேலைசெய்யும்போதும், மல்யுத்தம் முதலிய விளையாட்டு வேலைகள் செய்யும்போதும் இருதயம் பலவீனப்பட்டு, அவர்கட்குச் சிலசமயம் மயக்கம் அல்லது மூர்ச்சையுண்டாகும். எவ்வளவு பலிஷ்டர்களானாலும் புகையிலையை யுபயோகித்து வந்தார்களானால், அவர்களுடைய சத்வம் ஒடுங்கிப் பார்வைக்கு மட்டும் ஒழுங்கான மனிதர்களாகத் தோற்றுவார்கள். அதிலும் சிறுபிள்ளைகள் இக்கெட்டவழக்கத்தினால் பெருத்த தீங்குக்கு உள்ளாகிறார்கள். புகையிலையை யுபயோகிக்காத வாலிபர்களும் சிறுவர்களும் ஓடியாடி யுழைத்து வருவதுபோல் புகையிலையை உபயோகிப்பவர்கள் ஓடியாடமுடியாது. பந்தயவிளையாட்டுகளில் இவர்கள் புகையிலைப்பழக்கமில்லாதவருடன் போட்டிபோட்டுக்கொண்டு விளையாடி இறுதியில் அபாயகரமான தீங்குகட்கு வீணில் ஆளாகிறார்கள். இவர்களுக்கு ஜீர்ணசக்தியும் சீரழியும் இவர்களுடைய இருதயநடையும் அவ்வாறு வேலைசெய்யும்போது வெகு விரைவாகப் படபடத்து ஓடித்திடீரென்று இறுதியில் நின்றுவிடவும்கூடும். இதனையுபயோகிப்பவருடைய மூளையும், நரம்புமண்டலங்களும் தளர்ச்சியடையும். ஞாபகசக்தியும் குன்றிப்போகும். இவருடைய சரீரம் எவ்விதரோகத்திற்கும காலக்கிரமத்தில், இடங்கொடுத்து உடலைச் சீர்கெடுத்துவிடும். தசைநார்களுக்கு உள்ளவலிமையைக் குறைத்துவிடும். புகையிலையை யுபயோகிக்கும் வாலிபரிடம் இவ்விஷயங்களை எடுத்துரைத்தாலும் அவர்களால் அவ்வழக்கம் நிறுத்த முடியாததாக இருக்கின்றது. சிறுகச்சிறுக அவ்வழக்கத்தைக் குறைத்

துக் கொண்டுவருவதே நலமாகும். உபாத்தியாயர்களும், மாணவர்களிடம் இந்தத் துசப்பியாஸத்தைக் காணும்போது கண்டித்தும் தண்டித்தும் விலக்குவது நலமாகும் பெற்ரோரும் புத்திரர்களிடம் கவனஞ்செலுத்தி இந்தக்கெட்டவழக்கத்தை அவரிடத்தினின்றும் நீக்கிவிடுதல் நலமாகும். மேனுட்டார் தங்களது தேசத்தின் சீதப் பான்மையையுத்தேசித்து ஒருகால் இதனை வழங்கிவருகிருர்களானுலும், அவர்களிலும் பெரும்பாலார் அதன்தீமையை யுணர்ந்துகொண்டுவிலக்கியும் வருகின்ருர்களெனத் தெரியவருகின்றது. உஷ்ண தேசவாசிகளாகிய நம்மவர்க்கு இத்தியவழக்கம் அறவேகூடாதது ஒன்ருகும். இந்தப் புகையிலையை யுபயோகிக்கு முறைகள் மூன்றுமே முழுக்கேடாக இருப்பதனுல் அம்மூன்று முறைகளையும் முற்று மொழித்துவிடுவது நலமேயாகும்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

ஸிவில் ஸப்ளைஸ் டைரக்டரின் அறிக்கை.

—:(o):—

ஏற்றுமதி வசதிகள்.

"அனுமதி கொடுக்கப்பட்ட பண்டங்களை ராயபுரம் ஸ்டேஷனில் ஏற்றுமதி செய்வதில் ஏற்படும் கஷ்டத்தையும், அதனுல்வெகுவாக சாமான்கள் ஏற்றுமதி செய்யப்படாமல் தடைப்பட்டிருப்பதையும் உத்தேசித்து அடியிற் கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன:—ராயபுரம் ஸ்டேஷனில் இனிமேல் தினமானம் பின்னிட்ட மூன்று நாட்களில் இந்த சர்ட்டிபிகேட் பெற்றவர்களுக்குத்தான் சாமான்கள் ஏற்றுமதிசெய்ய வாகன்கள்கொடுக்கப்படுமென்று

ஒரு நோட்டீஸ் போடப்படும். அக்குறிப்பிட்ட தேதியில் எவ ரும் சாமான்களைக் கொண்டுவந்து ஒப்புவிக்காவிட்டால், அவர்களுக் குக்கொடுத்த அனுமதி ரத்துசெய்யப்படும்.

2. துறைமுகத்திலிருந்து சாமான்கள் சீக்கிரமாகக் காலி செய்யப்படுவதால், சர்ட்டிபிகேட் கிடைப்பதற்குள் சாமான்கள் நகரத்திற்குள் போய்ச் சேர்ந்துவிடக்கூடும். அந்த ஸந்தர்ப்பங்க ளில் ராயபுரம் ஸ்டேஷனில் அவைகளை ஏற்ற சர்ட்டிபிகேட்டுகளில் போர்ட் டிரஸ்டு டிராபிக் மானேஜரால் குறிப்பு எழுதிக்கொடுக்கப் படும்.

3. பம்பாய்க்கு அனுப்பக்கூடிய வாகன்கள் குறைவாகஇருப் பதனாலும், பருத்தி அங்கிருந்து அவசியமாக வரவேண்டி யிருப்பத னாலும், பருத்திக்காகமட்டில் அனுமதி கொடுக்கப்படும். மறு உத்தரவு வரையில் சர்க்கரைக்கும் அனுமதி கொடுக்கப்படும்."

அரிசிப்போக்குவரத்து.

சென்னை மாகாணத்திலிருந்து ஸிலோன் உட்பட அன்னிய இடங்களுக்கு அரிசியாவது நெல்லாவது ஏற்றுமதி செய்யக்கூடா தென்று இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு செய்துவிட்டார்கள். இந்த உத்தரவை ஏற்கனவே (3—10—18) ல் நம்மால் செய்யப் பட்டிருக்கும் உத்தரவுடன் சேர்த்துப் படிக்கவேண்டும். ஸிலோ னுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஏற்கனவே தென்னிந்தியா ரயில் வே ஸ்டேஷனில் அனுமதியின் பேரில் பதிவுசெய்யப்பட்ட அரிசி யும் நெல்லுமட்டும் அனுப்பலாம்.

2. பண்டங்களின் விநியோகத்தை நிர்ணயிக்கும் உத்தியோ கஸ்தரின் அனுமதியின்றி அரிசியாவது நெல்லாவது இந்தமாகா ணத்திலிருந்து சமுத்திர மூலமாக ஏற்றுமதி செய்யாமல் தடை

282

செய்யவேண்டுமென்று சென்னைக் கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சிபார்சு செய்திருக்கிறார்கள் அவர்களுடைய உத்தரவை எதிர்பார்த்து, சிவில் ஸப்ளைஸ் டைரக்டருக்கும் சென்னைக் கவர்ன்மெண்டார் அவ்விதம் உத்தரவு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடுகளை மாற்ற முடியாது.

3. மேற்கண்ட இந்தியா கவர்ன்மெண்டாரின் உத்தரவை அனுசரித்து ஸிலோனுக்கு அரிசியாவது நெல்லாவது எந்தத்துறை முகத்திலிருந்தும் ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

சுதேசமித்திரன்.

ஸ்ரீ:

நாமடைந்த நலம்.

(நாரதன் 1918ஹு பிப்ரவரிமீ 2உ)

———:(0):(*):(0):———

தமிழ் நாட்டிற்பிறந்து, தமிழ் நாட்டில் வளர்ந்து, தமிழ்த் தாயின் அமுதத்தையுண்ட சிலரும், நமது தாய்நாட்டின் மேன்மையைக் கெடுத்துப் பாழாக்கும் நோக்கம் உடையவர்களாய் சில ஆங்கிலோ இந்தியருடைய கூட்டுறவு தங்களுக்கு வேண்டுமென்ற நோக்கத்துடன், நமது சுயஆட்சிக் கிளர்ச்சிக்கு விரோதிகளாகத் தோன்றி, "இப்போது சுயஆட்சிகேட்போர் ராஜத்துரோகிகளாவார்" என்றும். "ஆங்கில ஆட்சியின்கீழ் அடைந்துள்ள அளவில்லாநன்மைகளை மறந்த நன்றிகெட்டவர்களாவார்" என்றும். தமது மனம்போனபடியெல்லாம் பேசுகின்றனர். அவர்கள் பேசுவனவெல்லாம், நஞ் சோற்றையே தின்று நமக்கே இரண்டகம் விளைவிக்கும் ஆங்கிலோ இந்தியப்பத்திரிகைகளின் எதிரொலியே

யாகும். ஆகவே, தமக்கென அறிவில்லாத அத்தகைய தமிழரின் சொற்களை நாம் பாராட்டாது, கூழுக்குத் தூறம்பாடவந்தும், அதனையறியாது தமிழருட்கிலரைத் தட்டிக்கொடுத்து முட்டும்படி செய்தும் நமக்கும் நம்மைத்தமது சேய் எனப்பாராட்டும் ஆங்கில ஆட்சிக்கும் குட்டிக்கலகங்களை யுண்டுபண்ணியும் வரும் ஒண்ட வந்த உத்தமர்களாகிய ஆங்கிலோ இந்தியரின் அதிசய வாக்கை ஆராய்வோம்.

ஊராளுமன்னன் தன்குடிகளுக்குத் தாயையும் ஒத்தவன் ஆவான். அக்கருத்தேபற்றிக் கம்பனும் தசரதனைப் புகழவந்த காலத்தில் "தாயொக்குமன்பில்" என்று கூறவந்தனன். எனவே அம்மன்னனுக்குக் குடிகள் அனைவரும் சேயை ஒத்தவராவர். குழந்தைகளிடத்தில் தாய்மார் பக்ஷமுடையவர்களே. தாயினும் குழந்தைகளைப் பாராட்டுபவர் உலகில் வேறு ஒருவருமேஇல்லை. குழந்தை பசிவந்தகாலத்தில் அப்பசியை ஆறறிக்கொள்ள "காகா" எனக் கத்துகிறது. அதனாலேயே, தாய்மார் அங்ஙனம் கத்தும் குழந்தைகளை "இக்குழந்தைகளென்ன? விசுவாசமற்றவை; இவை நாம் அருமையாய்ப் பாராட்டினதையும் எண்ணவில்லை" என்று சொல்வரோ? அன்றி. "ஐயோ! குழந்தைக்குப் பசிபாதலால் அதன் குறையாகிய பசியை நீக்கப் பால் அளிக்கல்வேண்டும்" என்று சொலவரோ? அஃதேபோல் நாம்; நமது குறைகளை எடுத்துச்சொல்லிக் கூக்குரலிடுகிறோம். சேயின நிலைமையிலுள்ள நம்மை ராஜத்துரோகிகள் என்று சொல்லுதல் முறையாகுமா, நியாயமாகுமா, அறிவாகுமா, தெளிவாகுமா, அந்தோ "நன்றிமறந்தவர்களாம் நாம்" இது என்ன அநியாயம்! நாம் எந்தவிதத்தால் நன்றிமறந்தவர்கள்? ஆங்கில அரசாட்சியால் நாம் அடைந்த நலத்திற்கு அளவில்லைதான். எனினும், அவையிற்றைநாம் மறக்கவில்லையே. மறந்து இந்த ஆங்கிலஆட்சி நமக்குவேண்டாமென்றுசொல்லி ராஜபக்தியுடையவர்கள் இந்தியர் என்னும்பெயரைக் கெடுத்துக்கொள்ளவில்லையே. நம்மைக் கண்ணெனப்பாராட்டும் நமது துரைமகனாகிய

ஜார்ஜ் சக்கிரவர்த்தியார், "செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்" என்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவரது அமுதவாக்கிற்கு இலக்கியமாக அன்றோ இருக்கிறார்? உண்மையான அரசர்கள் இடத்துத் தமது குறைகளை யெடுத்துச்சொல்லும் சொற்கள் தங்கள் காதுகேட்கப் பொறுதனவாயினும் அவையிற்றைப்பின் விளைவுநோக்கப் பொறுத்துக்கொள்வ ரன்றோ? அஃதேத போல் அவரைத் தாயெனப்பாராட்டிய சேயனையநாம் அவர் நம்மிடத்துக் குறைவுகாட்டிய விஷயங்களை யெடுத்துக்கூறின் அவர் நம்மைத் துரோகிகள் என மதிப்பரோ? ஒருகாலும் மதியார். மதியையிற்ற மற்றையோர் வேண்டுமாயின், அங்ஙனம் மதிப்பர். என்றாலும், இப்போது நாம் அடைந்தநலங்களை மறந்து, நன்றிமறந்தவர்களாரேனும் என நம்மை ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளும் அவையிற்றின் சட்டத்தை இட்டமுடன் கட்டிப்பிடித்துத் திட்டமாகப்பேசும் தமிழ்ப் பத்திரிகைளும் கூறுவதுபோல நாம் என்ன நலங்கள் அடைந்துள்ளோம் என்பதைக் கவனிப்போம். எல்லா நலங்களினும் முதலாவதாக எல்லோராலும் ஒப்புக்கொண்டதான நலம் கல்வி நலமேயாகும். அந்தக் கல்விநலம், நமக்கு எவ்வளவு வரையில், பயன்பட்டுளது? என்பதை அப்பெரியோர், அருஞ்சிகாமணிகள், அளவில்லாக்கலைகளைக் கரைத்துக்குடித்து எப்பமிட்டவர்கள் சொல்ல முன்வருவார்களா? ஒருவனுக்குக் கண்ணன்றோ எல்லா உறுப்புகளினும் பிரதானமானது? அந்தக் கண்ணொன்றில்லையாயின், அவனுக்குப் பிறவுறுப்புக்கள் இருந்தும் என்னபயன்? அஃதேதபோல், ஒருவனுக்கு எல்லாநலங்களும் கூடப்பெறினும் அவனுக்குக் கண்ணனைய கல்விநலன் இல்லையாயின், உலகத்தில் குருடனுக்கன்றோ இணையானவனாவான். அதுபற்றியன்றோ தெய்வப்புலவரும் ஔவைப்பிராட்டியாரும், முறையே "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப—இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு" என்றும், "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்", என்றுந்திருவாய் மலர்ந்தருளியுள்ளனர். உலகில் மற்றைய ஜாதியாருடன், நாமும் ஒரு செல்வாக்குடைய ஜாதியாரென முன்வரக் கல்வியன்றோ

நமக்கு இன்றியமையாதது. அந்தக்கல்வி யில்லையாயின், கண்ணற்ற குருடனைப்போலன்றோ வழிதடுமாறி அல்ல லடைவோம்? நாம் ஆங்கிலத் துரைமக்களின் ஆதரவில் வந்து 150 வருஷமும் கழிந்துவிட்டன. இந்த 150 வருஷகாலத்தில், நம்மவர் கல்வியில் எவ்வளவுவரை முன்னேற்றம் அடைந்துள்ளார்? பார்ப்போம்.

1856-ம் வருஷத்தில் துரைத்தனத்தார் ஜனங்கட்குக் கல்வியைப்புகட்டுதல் தங்கள்கடமையாகும் என்பதனையுணர்ந்தனர். அதனை அந்தவருஷத்தில் இந்தியாமந்திரியனுப்பிய தீர்மானபத்திரத்தால் அறியலாம். அதிலிருந்து, பகீரதப்ரயத்னங்கள் நிறைவேறின. 1882-ம்வருஷத்தில், இந்தியாவின் மொத்தஜனத்தொகையில், நூற்றுக்கு ஏறக்குறைய ஒருவர்தான், எழுத்துக்கூட்டிப்படிக்கும் படிப்புடையவர்களாகஇருந்தனர். அந்தவருஷத்திலிருந்து, அப்படியே 25 வருஷங்கள் கழிந்தன. அதன்பின், 1907-ம் வருஷத்தில் முன்போல நூற்றுக்கு இரண்டுபெயரே எழுத்துவாசனை இன்னதென அறிந்தனர். பிறகு, 1916-ம் வருஷத்திலோ, இடைவிடாத துரைத்தனமுயற்சியால், நூற்றுக்கு 6 பேர் படிக்கத் தெரிந்தவராயினர். அங்ஙனமாயின், முழுப்படிப்பும் படித்தவர்கள் எத்தனை பெயர் உண்டு? படித்தவர்கள் நூற்றுக்கு ஆறுபேர் என்றால், மற்றைய 94 இந்தியர் கல்வியாகிய கண்ணில்லாதவர்கள் அன்றோ? இந்தியாவில் ஏறக்குறைய 1594 பெரிய பட்டணங்களும், 582,728 கிராமங்களும் இருக்கின்றன. அந்தப்பட்டணங்களிலும், கிராமங்களிலுமுள்ள மொத்தப்பாடசாலைகளோ, 123578 தான். அஃதாவது ஐந்துகிராமங்களுக்கு ஒரே ஒருபாடசாலை. நிற்க, பெண்களுக்குக்கும் கல்விபரவவேண்டும் என்று பெரும்பாடுபடும் நிபுணர்கள் நிறைந்த இக்காலத்தில் பெண்கள்பாடசாலை எத்தனை இருக்கின்றன? மொத்தமாகக் கணக்கெடுத்தால் 45 கிராமங்களுக்கு ஒருபாடசாலையன்றோ இப்போது இருக்கின்றது? ஐரோப்பாவிலுள்ள தேசங்களிலும் கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய தேசங்களிலும் உள்ள ஜனங்கள் எல்லோரும் எழுதவும் படிக்

கவும் தெரிந்தவர்களாக உள்ளனர். நம்மவர்களிலோ, இவர் அறுவ ரென அறையவேண்டியிருக்கிறது. மேற்கண்ட தேசங்களில் பிரை மெரி படிப்பு கட்டாயபாடமாகவும் இலவசமாகவும் உள்ளது. நமது தேசமோ, அந்த இரண்டுங்கெட்டதாக உள்ளது. அமெரிக் காவில் கல்விக்காக அதிகாரிகள் தலைக்கு 12 ரூபாயும் செலவழிக் கின்றனர். சுவிட்சர்லாந்தில் தலைக்கு ரூபாய் 9—12—0, ஆஸ்தி ரேலியாவில் ரூபாய் 8—4—0, இங்கிலாந்தில் ரூபாய் 7—8—0, ஸ்காட்லாந்தில் ரூபாய் 6—12—0 ஆகக் கல்விக்காகச் செலவழிக்கப் பட, இந்தியாவிலோ தலைக்கு 12 தம்பிடி (ஒரு அணு) செலவழிக்கப் படுகின்றது. இப்படியானால் இந்தியாவில் கல்வி எப்படி விருத்தி யடையும்? துரைத்தனத்தாரோ, வருமானத்தைத் தங்களுக்கு இன்றியமையாத வேறுவகைகளில் செலவழிக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். நாம் அவர்கள்மீது குறைகூற என்னநியாய முண்டு? அவர்கள் நிர்வாக அதிகாரிகளாகவரும் கலெக்டர் முத லான ஆங்கிலபூமான்களுக்கு ஆயிரம் பதினாயிரமாகச் சம்பளம் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். பணம் அந்தவழி களில் செலவாய்விட அவர்கள் கல்விவிஷயத்தில் பணம் செலவழிக் கக் கஷ்டப்படுகின்றனர் என்றாலும், நமக்குக் கல்விவேண்டிய தாகவுள்ளது. கல்வியில்லாவிடின், நாம் மேலும் தாழ்ந்தநிலைமை யை யடைவோம். அந்தத்தாழ்ந்த நிலைமையை எட்டிப்பாராதபடி, சுய ஆட்சிகேட்கிறோம். சுய ஆட்சிவந்தால் கல்விக்கென நாமே வேண்டுமான பணத்தைச் செலவழிக்க இடமுண்டு. வேறு வழிக ளில் முன்னேறச் சௌகர்யங்கள் பலவும் ஏற்படும். ஆகலாற்றான் சேயாகிய நாம் தாயாகிய ஆங்கில ஆட்சியை அடுத்து, நமது சுயராஜ் யப் பசியை தீர்க்கும்படி வேண்டுகின்றோம். அப்படிவேண்டுதல், எந்தவிதத்திலும், துரோகமேயாகாது. இதனை நமது ஆங்கிலோ இந்தியர் இனியேனும் அறிந்தடங்குவார் என எதிர்பார்க்கிறோம்.

பத்திராதிபர்.

287

றது. முதன்முதலாக வைத்தியமுறையை உபதேசம் செய்ய வந்தவர் சதுர்முகப் பிரமன் என்றும் சொல்லுகிறார்கள். அந்தப் பிரமன்தான், ஒரு அதிகாரத்துக்கு நூறு சுலோகங்கள் அடங்கிய நூறு அதிகாரங்கள்கொண்ட ஆயுர்வேத சாஸ்திரத்தைச்செய்தார். வைத்தியமுறையில் பெரிய கிரந்தமான இந்த ஆயுர்வேத சாஸ்திரமானது, தேஹத்துக்குள் உயிரை நீட்டித்துவைத்துக் கொள்ளவும் சுருக்கிக்கொள்ளவும் வேண்டிய உபாயங்களையும் வியாதி நிதானங்களையும் அவற்றைப் போக்கும் மார்க்கங்களையும் நன்குதெரிவிக்கின்றது. இன்னும் இது சஸ்திரசிகித்ஸையையும் குழந்தைகளைப் போஷிக்கும் முறையையும் பைசாசவியாதிகளையும் அவற்றைப்போக்கும் முறைகளாகிய ஜபஹோம பூஜா விதிகளையும் விசேஷமாகச் சொல்லுகிறது. விஷங்களைப்போக்கும் முறைகளையும் இளமையை விருத்திபண்ணிக்கொள்ளும் முறைகளையும் ஞாபகசக்தியைப்பெருக்கிக் கொள்ளும் முறைகளையும் நன்றாகத் தெரிவிக்கின்றது.

பிரமன், இந்த ஆயுர்வேத சாஸ்திரத்தை முதன்முதலில் தக்ஷப் பிரமனுக்கு உபதேசித்தார். அவர், பிறகு, இதனை அச்வினிதேவதைகளுக்கு உபதேசஞ்செய்தனர். இந்த அச்வினி தேவதைகள், நன்றாகக்கற்றறிந்து அடங்கினவர்களாகவும் பரோபகார சிந்தையுடையவர்களாகவும் ஆரியனுடைய இரட்டைப்புத்திரர்களாகவும் இருந்தபடியால் இந்தமுறையை நன்கு கற்றுத்தேர்ந்து அநுபவமுறையிலும் கொண்டுவந்துவிட்டார்கள். இந்த இரட்டையர்கள், பிறகு, வைத்திய முறையைப்பற்றி வேறு பல க்ரந்தங்களும் எழுதி அவற்றுள் ஔஷதவைத்தியங்களையும் சஸ்திரவைத்தியங்களையும்பற்றி மிக விரிவாகக் கையாண்டிருக்கிறார்கள். என்றும் கேட்கப்படுகின்றது. பிறகு இவர்களையே, தேவர்கள், தங்கட்கு வைத்தியர்களாக ஏற்படுத்திக் கொண்டனர். இந்தவைத்தியமுறையைக் கைப்பற்றியே அந்த இருவர்களும் பல அற்புதங்களை யடைந்துள்ளார்கள். தேவாசுர யுத்தங்களில் சண்டைசெய்து ஒடிபட்ட காலுடையவர்களுக் கெல்லாம், உடைந்தவைகளுக்குப் பிரதியாக

வேறு இருப்புக்கால்களையும் செய்துவைத்திருக்கிறார்கள். புதிய பற்களையும் புதியகண்களையும் மாத்திரமல்ல, யுத்தத்தில் தறிக்கப் பட்டு வீழ்ந்த தலைகளையும் ஒட்டவைப்பதில் மிகவும் கீர்த்தி பெற் றவர்களாகச் சொல்லப்படுகிறார்கள். சில வெறுப்புள்ள தேவதை கள் இந்த இரட்டையர்களுக்கு உண்டாயிருக்கும் புகழினைக் கேட்டு ப்பொறாமை கொண்டவர்களாகி, ஏதோ சில உபாயங்களைக் கொண் டு இந்த இரண்டு பெயர்களையும் தேவகோஷ்டியினின்றும் விலக்கு வதற்கும் யாகத்தில் ஹவிர்ப்பாகம் வாங்கும்சுதந்திரத்தைப் போக் குவதற்கும் முயன்றார்கள். இவர்களைத்தேவகோஷ்டியில் நுழை யப்படாதென்றும் மறுத்துவிட்டார்கள். ஆனாலும் இந்தவைத்தியர் கள் ரிஷிச்யவனருக்கு என்றும் அழியாத இளமையையும் பலத் தையும் தேஹசௌக்யத்தையும், ஒருலேகியமுறையையே ஔஷத முறையாகக் கொண்டு, கொடுத்து உதவினார்கள். அந்த ரிஷியும் இவ்வுதவிக்குப் பிரதியாக உதவிசெய்ய முயன்று, இவர்களை மறு படியும் தேவகோஷ்டியில் சேர்த்துவிடுவதாக வாக்கும் அளித்தனர். தனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்பொருட்டு ஒரு யுக்தி செய்து தனக்குப் பெண்கொடுத்த மாமனாரைக்கொண்டு ஒருயாக ஞ்செய்யச்செய்தார். அந்தயாகத்துக்கு எல்லாத் தேவர்களுடன் இந்த இரட்டையர்களான வைத்தியர்களும் அழைக்கப்பெற்று, ஹவிர்ப்பாகமும் கொடுக்கப்பெற்றார்கள். அந்த இடத்திற்கு வந்தி ருந்த இந்திரன் இதனைத்தோஷமாகக்கொண்டு தனது வஜ்ராயுதத் தை எடுத்து வீசுவதற்கென்று கையை ஓங்கினான். அப்போது அவனது கை பார்சுவ வாயுவினால் பீடிக்கப்பட்டு வருந்தினான், உடனே இந்த அச்வினி தேவதைகள் தமது வைத்தியமுறையினால் சிகித்ஸைசெய்து அவனைக்குணப்படுத்தினார்கள். இதனால் இவ்விரு வரும் மறுபடியும் தேவகோஷ்டியில் சேர்த்துக் கொள்ளப் பெற்றார் கள். ஒரு பெருத்தவியாதியினால் பீடிக்கப்பட்டதான், அடுத்த க்ஷணத்தில் அதிசுலபமாகக் குணப்படுத்தப்பட்டமையை யுணர்ந்து அந்த ஆயுர்வேத முறையைக் கற்றுக்கொள்ளவிரும்பினான். உட னே அவன், அவ்விருவர்களையும் பிரார்த்தித்து, அந்தஉயர்ந்த

வித்தையைத் தனக்குக் கற்றுக்கொடுக்கும்படி வேண்டினான். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். பின்னர்ச் சில காலங்களில் இந்திரனும் அந்த சாஸ்திரத்தில் வல்லவனானான்.

ஆத்திரேயர் என்று பெயருடைய ஒரு ரிஷி இருந்தார். உலகத்தில் தோன்றும் வியாதிகளையும் துக்கங்களையும் கண்டு கண்டு மனங்கலங்கி இவற்றை ஒருவாறு நீக்கக்கருதி, இந்திரனிடத்துக்குச்சென்று ஆயுர்வேத முறையைக்கற்க ஆரம்பித்தனர். சில வருடங்கட்குள் இந்த ரிஷி தமது படிப்புமுறைகளைப் பூர்த்திசெய்துகொண்டு அநேக க்ரந்தங்களை யெழுதியுள்ளனர். அவற்றுள் ஒன்றான ஆத்ரேயஸம்ஹிதை என்னும் ஒரு க்ரந்தந்தான் நமது ஹிந்து வைத்தியத்துக்கு ஆதிகாரண க்ரந்தமாக இருந்தது. இந்த ஆத்ரேயரிஷிக்கு ஆறுசிடர்களுண்டு. அவர்கட்கு அவர் தமது க்ரந்தத்தை (ஆத்ரேய ஸம்ஹிதையை) உபதேசித்துள்ளார். இந்த அறுவரும், பிறகு, அநேக வைத்திய க்ரந்தங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

பிராசீன வைத்திய சாஸ்திரியாகிய சரகர் என்பவர், பூலோகத்துக்கு வைத்தியசாஸ்திரம் வந்த முறையைப்பற்றிப் பின்வருமாறு குறிக்கின்றார்:—

“ ஒருகாலத்தில், சில பெயர்பெற்ற ரிஷிகள் பனிவீடாகிய ஹிமாலயத்துக்குப் போயிருந்தார்கள். அவர்கள் வேதாந்தவித்தையில் நிபுணர்களாகவும் ஆசாரசீலர்களாகவும் இருந்தார்கள் ஒருகால் தமக்கு ஒழிவுநேரிட்டபோது, மாமிசம் சதை இவற்றைப் பற்றியுள்ள வியாதிகளைப்பற்றி ஆலோசிக்க ஆரம்பித்தார்கள். ”
“ தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷங்கட்குப் பரமஸாதனமான நமது தேஹமானது வியாதிகட்கு ஆகாரமாக இருந்து மிகுந்தவருத்தங்களைத் தந்து, நமது மோக்ஷமார்க்கப்பிரயத்தனத்தைத் தடுக்கிறது. சில வேளைகளில் பால்யமரணத்தையும் பெற்றுவிடுகின்றது. இத்தனை வியாதிகளாகிய பகைவருக்கு முன்னிலையில் நமக்கு ஆனந்த

290

மென்பது எது? ஆகையினால், இவற்றைப்போக்கும் விதத்தை கண்டுபிடிப்பது அத்யாவச்யகமாக இருக்கின்றது". அவர்கள் உடனே, பரத்வாஜ ரிஷியைநோக்கிச் சொன்னதாவது:—

"ஓ! ரிஷிச்ரேஷ்டரே!! ஆயிரங்கண்பெற்ற இந்திரனிடஞ்சென்று ஆயுர்வேதத்தை யப்பசித்துவந்து, எங்களை வியாதிகளினின்று விடுவிப்பதற்கு ஏற்ற புருஷர் நீரேதாம்." உடனே அப்பெரியவர் இந்திரனிடம்போய் மீளுவதாக மிகவும் வணக்கத்துடன் சபைக்கு முன்னர் ஒப்புக்கொண்டனர். அப்படியே உடனே புறப்பட்டு இந்திரனிடஞ்சென்று இந்திரனைப்பார்த்து, "ஓ! தேவர் தேவனே!! ஹிமாலயத்தில் கூடியிருந்த ரிஷிகள் கூட்டத்திலிருந்து அனுப்பப்பட்டு உன்னிடத்தில் ஆயுர்வேதத்தைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு வந்திருக்கின்றேன்" என்றனர். இந்திரன், இதனைக்கேட்டுக் களிப்படைந்தவனாகி, அந்தரிஷிக்கு ஆயுர்வேதத்தை அதனுடைய அங்கங்களுடன் கற்றுக்கொடுக்க ஸம்மதித்தனன். பரத்வாஜரும் இந்திரனிடத்தில் க்ரமமாக அந்த சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டு பூவுலகிற்குத் திரும்பிவந்து, மற்ற ரிஷிகட்கு அம்முறையைக் கற்றுக் கொடுத்தனர். அவர்களும் அந்த அறிவினால் காயகற்பஞ்செய்துகொண்டு வியாதியில்லாமல் சிரஞ்சிவிகளாக இருந்தனர் இப்படியாக ஆயுர்வேதவரலாற்றைப்பற்றிய கதையைச் சரகர் சொல்லுகிறார்.

ஹிந்துவைத்ய முறைக்கு ஆதிகர்த்தர்களாகிய சரகர் சுச்ருதர் என்னும் இவருடைய சம்பந்தமில்லாமல் ஒரு ஆயுர்வேத கதையையும் கேட்கிறோமில்லை.

சரகர், ஆயிரம் பணமகுடங்களையுடைய ஆதிசேஷனுடைய அவதார புருஷரென்று கருதப்படுகிறார். ஒரு கற்றறிந்த ரிஷியாகிய விஷுதர் என்பவரது புத்திரர் சரகர். இவர் வேதகாலத்தில் இருந்தவர். இவர்காலத்தில் இவர்தாம் முதல் வைத்யர். இவரது க்ரந்தமாகிய சரக ஸம்ஹிதைதான் முதல் க்ரந்தமாகவும் கொள்ளப்படுகின்றது.

291

சுச்ருதர் என்பவர் விச்வாமித்ரருடைய குமாரர். வியாதிஸ்தர்களின் பேரில் தோன்றிய தயவினால், விச்வாமித்ரர் தமது புத்திரரான சுச்ருதரை யவர்தம்பிகள் எழுவருடன் காசிராஜனாகிய தேவதாசனிடம் ஆயுர்வேதத்தைக் கற்று வரும்படியனுப்பினார். பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்துதோன்றிய பதினான்கு ரத்தினங்களில் ஒன்றாகக்கவனிக்கப்பட்ட தேவவைத்தியராகிய தன்வந்திரிபகவானுடைய அவதார புருஷராக இந்தக்காசிமன்னவர் மதிக்கப்பட்டிருந்தார். சுச்ருதர், அவரிடம்சென்று பலநாட்களிருந்து கற்றுக்கொண்டபிறகு, திரும்பி வந்து; ஔஷதமுறையையும் ரணசிகித்ஸையையும்பற்றி அநேக க்ரந்தங்கள் எழுதி வெளியிட்டனர். அவற்றுள் ஒன்று பலகாலங்களிலும் தக்க கௌரவம்பெற்று, பலபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பெற்றிருக்கின்றது. மிஸ்டர் ஹேல்பர் என்பவர் அதனை லத்தீன் பாஷையில் மொழிபெயர்த்தனர். மிஸ்டர் வல்லர்ஸ் என்பவர் ஜர்மனி பாஷையில் மொழிபெயர்த்தனர். அராபியபாஷையில் இது எட்டாவது நூற்றாண்டில்தான் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது.

சரகருக்கும் சுச்ருதருக்கும் பிறகு வாக்படர் என்னும் வைத்தியசிகாமணி வந்து தோன்றினர். இவர் கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுகட்கு முன் இருந்தவரெனத் தெரிகிறது இவர் பம்பாய் ராஜதானியிலுள்ள சிந்துமாகாணத்தில் பிறந்தவர். இவர் தமது உத்தம க்ரந்தமாகிய அஷ்டாங்கஹ்ருதயத்தில், தமது க்ரந்தத்துக்கு மூலக்ரந்தங்களாகச் சரகமும் சுச்ருதமும் தாம் இருக்கின்றன என்று குறித்திருக்கிறார். இந்தக்ரந்தத்தில் இவர் தமது மூலக்ரந்தங்களிலிருந்து அபிப்பிராயங்களைத்தழுவி அவற்றை விளக்கமாகவும் சுலபமாகவும் எழுதியிருக்கிறார்.

வாக்படருக்குப் பிறகு, மாதவாசாரியர் என்பவர், வைத்யரத்நமாக இருந்து விளங்கினார். இவரும் ஆயுர்வேத க்ரந்தத்துக்கு அத்யக்ஷராகக் கணிக்கப்பட்டுவருகிறார். இவர் கோலகொண்டையில் பிறந்து வளர்ந்து கற்றுத்தேறி, பதினொராவது நூற்றாண்டில்

விஜயநகர மகாராஜருக்கு மந்திரியாகவும் இருந்திருக்கிறார். ரிக்வே தத்தை யறிந்தவர்களுள் பிரபலஸ்தராக விளங்கும் உத்தமராகிய ஸாயனருக்கு இவர் ஸஹோதரர். இவரால் செய்யப்பட்டிருக்கிற க்ரந்தத்துக்கு மாதவநிதானம் என்று பெயர். இதனுள் இவர், வியாதிகளைத் தெரிந்து தெளியும் முறைகள் பலவற்றையும் விவரிக்கிறார். இன்றும், வியாதிகளை நிதானிக்கும்முறையில் மாதவநிதானமே முற்பட்ட நூலாகக் கொள்ளப்படுகின்றது. "பதார்த்த விசாரத்தில் சரகரும், ரணசிகித்ஸையில் சுச்ருதரும், ஔஷத அநுபவ முறையில் வாக்படரும், வியாதியறிவிக்கும் முறையில் மாதவரும் முற்படக் கூறப்படுகின்றனர்" என்று பல வைத்திய க்ரந்தங்களிலும் காண்கின்றோம்.

பிறகு சமீபித்த பதினாறுவது நூற்றாண்டிலிருந்து, பாவமிச்ரருடைய பெயர் காணப்படுகின்றது. இவரும் ஒரு நல்ல க்ரந்தகர்த்தராகக் கருதப்படுகின்றார். இவரது க்ரந்தம் பாவப்ரகாசம் என்று அழைக்கப்படுகின்றது. இதனுள் இவர் தமது பூர்விக ஆசிரியர்களது முறைகளைப் பின்பற்றி அவற்றை நன்கு விளக்கிக்கொண்டு போயிருக்கிறார். அவற்றைச் சுருக்கமாகவும் சொல்லியிருக்கிறார். பதினாறும் நூற்றாண்டில் தான் இந்தியாவும் ஐரோபிய நாட்டுக்குத் தெரியப்பெற்றதொரு நாடாயிற்று. போர்த்துகேசியருக்குள் கிரந்திப்புண் வியாதிகள் அதிகமாகநடமாடுவதுண்டு. அதனைப் பாவமிச்ரர்தாம் நிவர்த்திசெய்தது.

ஆயுர்வேத சாஸ்திரங்களுக்குள் கடைசியாகக்கவனிக்கப்பெறுவது சாரங்கதர ஸம்ஹிதை. இதை யியற்றினவர் ஸாரங்கதரர். இதனுள் 25 அதிகாரங்கள் வகுத்து எழுதியிருக்கின்றனர்.

அ. சௌமியநாராயண ஐயங்கார்,
ஆயுர்வேத வைத்தியர்,
காரைக்குடி.

சுலக்ஷணா.

(உஉங-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

—()—

" அதை என்னிடம் எடுத்துக்கொடு, " என்று சுலக்ஷணா மிகவும் தாழ்ந்த குரலுடன் சொன்னாள். அவள் மயக்கமடைந்து விழப்போகிறவளைப்போற் காணப்பட்டாள். சாமுண்டி அது வாஸ்தவம் என்று நம்பினான். ஆகையால் அவன் ஜாக்கிரதையாய்க் குனிந்து கைத்துப்பாக்கி வைத்திருந்த கையாற் கைக்குட்டையை எடுத்தான்.

சுலக்ஷணா, " அது நல்ல வாசனையுள்ளது. நீ வேண்டுமானால் முகர்ந்து பார்க்கலாம். "

அதன் வாசனையை அறிய விரும்பிச் சாமுண்டி கைக்குட்டையைத் தன் மூக்கில் வைத்தான். உடனே அவனுக்கு மயக்கமுண்டாயிற்று. கைக்குட்டை, கைத்துப்பாக்கி, பட்டாக்கத்தி ஆகிய இவையெல்லாவற்றையும் போட்டுவிட்டுத் தரையில் விரித்திருந்த கம்பளத்தின்மேற் பிணம்போல் விழுந்தான்.

" மணியை அடித்து எல்லோரையும் இப்பொழுது எழுப்பிவிட வேண்டும், " என்று சொல்லிக்கொண்டு நாற்காலியை விட்டுக் குதித்தெழுந்தாள். அதே சமயத்தில் காலடிச்சப்தம் அவ்வறையிற் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். பணமிருப்பதாகச்சொன்ன அறைக்குப் போய் இப்பொழுது பணத்தைத் தேடிக்கொண்டிருப்பானென்று தான் எண்ணியிருந்த வீரசிங்கம் தன்னெதிரில் நிற்பதைக் கண்டாள். அவன் முகத்திற் பைசாசங்களுக்கு உண்டாகும் கோபத்தைப் போன்ற கோபம் தோன்றிற்று அவளை அடிப்பதற்காக அவன் ஒரு பெரிய தடிக்கம்பை ஓங்கினான். சுலக்ஷணா அந்த அடிக்கு விலகிக் கொண்டு, முழங்காற்படியிட்டு தன்னிருகரங்களையும் மேலே தூக்கின வண்ணமாய், வாயாற் பேசாமலேயே அவனைத் தன்மேல் இரக்கம் காட்டும்படி வேண்டினாள். அவள் அவ்விதம் செய்யாதிருந்தால் அவளுடைய வாழ்நாள் அப்பொழுதே முடிந்திருக்கும்.

" சப்தம் செய்தாயானால் உன்னை முடித்துவிடுவேன், " என்று வீரசிங்கம் மிகவும் கோபத்துடன் சொன்னான்.

சுலக்ஷணை, "இல்லை, இல்லை, நான் ஒரு வார்த்தைகூடப் பேச வில்லை. என்னுடைய உயிரை இரட்சி. என்னைக் கொல்லாதே."

வீரசிங்கம், "எழுந்திரு இரைந்து பேசாதே. என் உத்தரவில்லாமல் நகராதே. என்னுடைய கட்டளையை மீறினால் உடனே உன் தலை கீழே விழுந்துவிடும். என் கூட்டாளியை என்ன செய்தாய்? அவன் இறந்துவிட்டானா?

சுலக்ஷணை, "இல்லை, இல்லை, அவன் இறக்கவில்லை. மயக்கமடைந்து விழுந்திருக்கிறான். சற்றுநேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்திருப்பான்."

வீரசிங்கம், "அவன் எழுந்திருந்தாற்றான் உனக்கு நல்லகாலம். என் கூட்டாளியை இவ்வாறு ஏமாற்றுவதற்கு நீ எப்பேர்ப்பட்ட ஸ்திரீயாயிருக்கவேண்டும்?"

அவன் சற்றுநேரம் தன் கூட்டாளியைக் கவனித்துப்பார்த்தான். ஏதோ ஒரு எண்ணத்தை மனதிற் கொண்டவன்போற் காணப்பட்டான். பிறகு சுலக்ஷணையைப் பார்த்துச் சொல்லுகிறான், "இந்தச் சம்பவம் நடந்தது எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. மூக்கருகில் பிடிக்கப்பட்டதும் மயங்கிவிழச்செய்கிற சக்தி அந்தத் திராவகத்திற்கு இருந்தால், அது என்போலியர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும். அவ்வாறு மயக்கப்பட்டவனை எப்படி எழுப்புவது என்பதை நீ எனக்குச் சொல்?"

சுலக்ஷணை, "அவன் சற்றுநேரத்தில் தானாகவே எழுந்திருப்பான். அப்படி எழுந்திராவிட்டால் அவனைப் பிடித்து அசக்கினாலும், முகத்திற் குளிர்ந்த ஜலத்தைத் தெளித்தாலும் உடனே மயக்கம் தெளிந்துபோகும்."

வீரசிங்கம், "அப்படியானால் நீ சொன்னபடி என் கூட்டாளிக்குச் செய்கிறேன். ஆனால் உஷார். நீ இருக்குமிடத்தைவிட்டு ஒரு அங்குலங்கூட நகராதே. நகர்ந்தாயானால்—" என்று சொல்லிக் கைத்துப்பாக்கியை அவள் முகத்திற்கு நேரே நீட்டினான். பிறகு அவன்

தன் கட்டாலியருகில் மண்டிபோட்டுக்கொண்டு, ஒரு கையால் கைத் துப்பாக்கியைச் சுலக்ஷணைவிற்கு நேரே பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் சாமுண்டியை அசக்கினன். அவனுக்குக் கொஞ்சங் கொஞ் சமாக மயக்கம் நீங்கிற்று. சுலக்ஷணை தான் இருந்த இடத்தை விட் டுக் கொஞ்சமும் நகரவில்லை. அவளுக்குத் தெரியாமல், தரையிற் கிடந்த கைக்குட்டையை எடுத்து, வீரசிங்கம் தன் கைக்குள் மறைத் துக் கொண்டான்.

சாமுண்டி, "என்ன சமாசாரம்? என்ன நடந்தது? எனக்கு உடம்பு ஒரு மாதிரியாகவிருக்கிறது.

வீரசிங்கம், "ஒன்றும் நடக்கவில்லை. நீ உன் மயக்கம் பூரா வாய்த் தெளியும் வரை அப்படித்தானே இரு. நான் இவளுடன் பேசுகிறேன்."

அவன் சுலக்ஷணைவைப் பார்த்து, "இந்தப் பணவிஷயத்தைப் பற்றி—" என்று சொல்லி வாக்கியத்தை முடிப்பதற்குள் திடீரென்று "யாரது அறைக்குள் வருகிறது?" என்று சொன்னான்.

வருகிறது யாரென்று பார்க்கச் சுலக்ஷணை திரும்பினள். அதே சமயத்தில் வீரசிங்கம் தன்கையில் வைத்திருந்த கைக்குட்டையை அவள் மூக்கில் வைத்து அமுக்கினான். சாமுண்டி விழுந்ததுபோல, அவள் அடியற்ற மரம்போல் தரையிற் சாய்ந்தாள்.

சுலக்ஷணை, மயக்கம் நீங்கி எழுந்தபொழுது, உதயகாலத்துச் சூரியனது கிரணங்கள் ஜன்னல் வழியாய் அறைக்குட் புகுந்து பிரகா சித்துக்கொண்டிருந்தன. கொஞ்சங் கொஞ்சமாய் இரவு நடந்தவையெல் லாம் அவளுக்கு ஞாபகத்துக்கு வந்தது. திருடர்கள் இருப்பார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. உடம் பிலும் தலையிலும் அவளுக்கு வலியுண்டாயிற்று. வருத்தத்தோடு எழுந்திருந்து மேஜையைப் பார்த்தாள். வெள்ளைத்திராவகமிருந்த போத்தலை அங்கே காணவில்லை. மற்றைய இடங்களிலெல்லாம் பார்த் தாள். அது எவ்விடத்திலும் தென்படவில்லை. இவ்வாறு தேடுகையில் அவ்வறையிலிருந்த விலையேறப்பெற்ற சாமான்களெல்லாம் காணமற்

போயிருப்பதைக் கவனித்தாள். அவள் உடம்பிலணிந்திருந்த நகைக ளெல்லாம் காணாமற்போய்விட்டன. அவள் விரல்களிலணிந்திருந்த மோதிரங்கள், கைக்கெடியாரம், கெடியாரச்சங்கிலி, முத்தாரம் இன் னும் மற்றைய சில்லரை நகைகளும் மாயமாய்ப் போய்விட்டன.

அவள் மிகவும் பயத்தோடுபோய்த் தன் தாதிகளை எழுப்பினாள் மற்றைய வேலைக்காரர்களும் எழுந்திருந்தார்கள். வீட்டிற் பெருங் குழப்பம் உண்டாயிற்று. சுலக்ஷணா திருடர்களுக்குச் சொல்லிய அறையிலிருந்த ரூபாய் ஆயிரத்தையும் காணோம். மற்றுமுள்ள விலை யுயர்ந்த வஸ்துக்களெல்லாம் காணாமற்போயிருந்தன.

திருடர்கள் பத்திரமாய்த் தப்பியோடிவிட்டார்களென்பதை நம் வாசகர்கள் ஊகித்தறிந்திருக்கலாம். சுலக்ஷணாவிற்கு மருந்துப்போத் தலைப்பற்றி வெளியிற்சொல்ல இஷ்டமில்லை. ஆதலினால் அவள் ஒரு பொய்க்கதையைச் சொன்னாள். இரவில் யாரோ இரண்டு தடியர்கள் திடீரென்று தன்னறைக்குட் புகுந்ததாகவும், அவர்களிலொருவன் தன்னைக் கம்பாலடித்ததாகவும், அதனால் தனக்குப் பிரக்ஞை தப்பி விட்டதாகவும் அவள் சொன்னாள். இந்தத் திருட்டு விஷயம் போலீ ஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. இரண்டு துப்பறியும் உத்தியோகஸ் தர்கள் வந்தார்கள். அவர்கள் வீட்டின் பின்புறக்கதவைப் பார்த்து விட்டு, வீட்டிற்குள் இருந்தவர்களிலொருவரும் திருட்டுக்கு ஒத் தாசை செய்யவில்லை என்று சொன்னார்கள். சுலக்ஷணா சொன்ன அடையாளங்களிலிருந்து, இரவு வந்தவர்களிலொருவன் பிரபலத் திருடனாகிய வீரசிங்கம் என்று அறிந்துகொண்டார்கள். ஆனால் அவனோடு கூட வந்தவன் யாரென்று அவர்களுக்குத் தெரியவில்லை.

வைத்தியன் சோமநாதன்.

சோமநாதன் என்பவன் வைத்தியத் தொழிலில் மிகவும் தேர்ந் தவன். அவன் ஒரு பெரிய வீட்டிற் குடியிருந்தான். அவனுக்கு நாலு வேலைக்காரர்கள் இருந்தார்கள். அவனுக்குப் பெரியவீடு வேண் டிய தேவையென்னவென்றால், அவன் சுமார் இருபது வருஷகால

மாக வைத்திய விஷயத்திற்கு வேண்டிய அனேக வஸ்துக்களைச் சேகரித்துக்கொண்டுவந்தான். அவையெல்லாவற்றையும் ஒரு பெரிய அறையில் வைத்துப் பூட்டியிருந்தான். அவ்வறையிலிருந்த வஸ்துக்கள் என்னென்னவென்பதைப் பார்ப்போம். பூர்வீக எகிப்தியரால் பதனிடப்பட்டு அழியாமலிருந்த பிணங்கள் (Egyptian mummies), தசையற்ற மானிடசரீரத்தின் எலும்புக்கோர்வைகள், தானே விலைக்கு வாங்கிப் பதனிட்ட பிணங்கள், விநோதமான குழந்தைகளின் பிரேதங்கள் முதலியன அவ்வறையிலிருந்தன.

வேலைக்காரர்கள் அடிக்கடி அங்கே போவதில்லை. அந்த அறையிற் பைசாசங்கள் உலவுகின்றன என்பது அவர்களுடைய எண்ணம். மத்தியானவேளையிற் கூட அவ்வறையைக் கூட்டவேண்டுமானால். வேலைக்காரிகள் தனியாய்ப் போவதில்லை. இரண்டுபேர் சேர்ந்துதான் போவார்கள். அறையைவிட்டு வெளியே வரும்வரையிலும் இருவரும் சமீபத்திலேயே இருப்பார்கள். இருவர் சேர்ந்திருந்தால் பைசாசங்கள் தீங்குசெய்யா என்பது அவர்களுடைய நம்பிக்கைபோலும்.

சோமநாதன் எப்பொழுதும் தனியேயிருந்து அனேக புதிதான விஷயங்களைக் கண்டுபிடிப்பது வழக்கம். ஆனால் அவன் அவைகளில் ஒன்றையும் உலகத்திற்கு அனுகூலமாகப் பிரசுரிப்பதில்லை. அவனுக்குக் கீர்த்தியடையவேண்டும் என்னும் ஆசை கிடையாது. ஆனால் பணம் சம்பாதிக்க ஆசையிருந்தது. தனக்கு வேண்டிய பிணம் முதலியவற்றை வாங்குவதற்குப் பணம் இன்றியமையாததாயிருந்தது. அவன் ஆயிரக்கணக்கான ரூபாயைக் கொடுத்து ஏழரையடியுயரமுள்ள மனிதனொருவனுடைய எலும்புக்கோர்வையை வாங்கினான். இரண்டரையடியுயரமுள்ள குள்ளனொருவனுடைய பிரேதத்திற்கும் ஏராளமான தொகை கொடுத்தான்.

அவனுக்குச் சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கலாம். இளமையிலிருந்தே அவன் வைத்தியத்தில் மிகவும் பிரியமுள்ளவனாயிருந்தான். மத்தியதரமான உயரத்துடனும் மெலிந்த சரீரத்தோடும் இருந்தான். அவனுடைய முகம் வெளுத்திருந்தது. அவனுக்குக் கல்யாணமாக

வில்லை. அவன் இளமையில் ஒரு ஸ்திரீயைக் காதலித்தான். இப்பொழுதும் அந்தக்காதலும் காதலிக்கப்பட்ட ஸ்திரீயும் அவன் மனதை விட்டு அகலவில்லை. அவனுற் காதலிக்கப்பட்டவள் அவனைக் காதலிக்கவில்லை. இது நடந்து அநேக வருஷங்களாகின்றன. ஆனல் அந்தக் காதலானது அவன் மனதில் ஆழ்ந்து பதிந்துகிடந்தது. அவனுற் காதலிக்கப்பட்டவளைத் தவிர வேறே யாருக்கும் அவன் ஒரு ஸ்திரீயைக் காதலித்தான் என்ற விஷயம் தெரியாது.

இரவு மணி ஒன்பதாயிற்று. சோமநாதன் தனியாய் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஒரு புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வேலைக்காரன் வந்து ஒரு ஸ்திரீ அவனைப் பார்க்க வேண்டுமென்கிருள் என்று சோமநாதனிடம் சொன்னுன். வைத்தியன் அவள் பெயரென்னவென்று கேட்டான். தன்னைச் சோமநாதனுக்குத் தெரியாதென்றும், தன் பெயரைத் தெரிவிப்பதிற் பிரயோஜனமில்லையென்றும் அவள் சொன்னதாக வேலைக்காரன் சொன்னுன். அந்த ஸ்திரீயைத் தானிருக்குமிடத்திற்கு அழைத்துவரும்படி சோமநாதன் கட்டளையிட்டான்.

இரண்டு நிமிஷம் சென்றதும் வேலைக்காரன் ஒரு ஸ்திரீயுடன் வந்தான். அவள் முகம் தெரியாதபடி முகமூடியால் மூடியிருந்தாள். வேலைக்காரன் வைத்தியனையும் ஸ்திரீயையும் தனியேவிட்டு வெளியே போனுன். வைத்தியன் அந்த ஸ்திரியை ஒரு நாற்காலியில் உட்காரச் சொன்னுன். அவள் மிகவும் நேர்த்தியான உடைகளைத் தரித்திருந்தாள். கம்பீரமானதும் உயரமானதுமாகிய உருவத்தை உடைத்தாயிருந்தாள். அவளுடைய நடையுடை பாவனைகள் அவள் அந்தஸ்துள்ளவள் என்பதை அறிவித்தன.

வைத்தியனுக்கு மனதில் ஒருவிதமான எண்ணம் உண்டாயிற்று அந்த ஸ்திரீக்கும் தனக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறதென்று நினைத்தான். அவள் தனக்கு அறிமுகமில்லாதவளென்று வேலைக்காரன் சொன்னதை அவனல் நம்பமுடியவில்லை. முகமூடியினல் மூடப்பட்டிருந்த முகம் தனக்குத் தெரிந்திருக்கவேண்டுமென்று எண்ணினன்.

அந்த ஸ்திரீ வைத்தியனுடைய மனக்குழப்பத்தைக் கவனித் தாள். கொஞ்சநேரம் பேசாமலிருந்து பிறகு சொல்லுகிறாள், "நான் யாரென்பது உனக்கு விளங்கிவிட்டதா?"

சோமநாதன், "அந்தக்குரல எனக்கு நன்றாய்த்தெரிகிறதே," என்று சொன்னான். அவன் அதிக மனக்குழப்பத்தையடைந்தான்.

"ஆம் நான்தான் பத்தொன்பது வருஷங்களுக்கு முன் உன் தாயாரோடு குடியிருந்த கற்பகம் என்பவள். உனக்கு என்னைப்பற்றி ஞாபகமூட்டுவதற்கு வேறொன்றும் சொல்லவேண்டியதில்லை," என்று அந்த ஸ்திரீ மெதுவாய்ச் சொன்னாள்.

சோமநாதன், "இல்லை, இல்லை. நான் உன்னை மறந்துவிடவில்லை. உன்னை மறக்க என்னால் முடியாது. உன்னைப் பார்த்துப் பத்தொன் பது வருஷங்களாயின. ஆயினும் உன்னுடைய உருவம் என் மனதை விட்டு அகலவில்லை.

அவன் பேசின மாதிரியானது அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஆனால் அதன் காரணம் அவளுக்குத் தெரியும். பத் தொன்பது வருஷங்களுக்கு முன் வைத்தியன் சோமநாதன் தன்னைக் காதலித்தான் என்பதை அவள் நன்றாய் அறிவாள். ஆனால் இவ்வளவு காலம்வரை அந்தக்காதல் அவன் மனதில் நிலைபெற்றிருக்குமென்று அவள் நினைத்தவளல்ல.

சோமநாதன், "ஏன் பேசாமலிருக்கிறாய்? உனக்குக் கோபமுண் டாகும்படி நான் ஏதாவது சொன்னேனா?"

ஸ்திரீ, "இல்லை, நீ அப்படியொன்றும் சொல்லவில்லை."

சோமநாதன், "உனக்குக் கோபமுண்டாகும்படி நான் நடக்க வில்லையென்பது எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. கடந்த பத்தொன்பது வருஷங்களாக உன்னை அடிக்கடி நினைத்தது என்னு டைய குற்றமல்ல. நான் அப்பொழுது வாலிபப்பருவத்திலிருந்தேன். இப்பொழுது இருப்பதுபோல எனக்கு முகத்தில் சுருங்கலும், சரீ ரத்தில் இளைப்பும், பார்வையில் கவலையும் அப்பொழுது இல்லை.

ஆனால் நீ அதிகமாய் மாறியிருக்கமாட்டாய். அப்படி மாறியிருந்த போதிலும், முன்னிருந்ததுபோலவே நீ என் கண்ணுக்குத் தோன்றுவாய்."

ஸ்திரீ, "இந்தப் பத்தொன்பது வருஷங்களாக நீ என்னை மறவாமல் அடிக்கடி நினைத்துக்கொண்டிருந்தது வாஸ்தவமா?"

சோமநாதன் இந்தக் கேள்விக்கு உடனே பதிற்சொல்லவில்லை. அதிக நேரம் சும்மாயிருந்துவிட்டுப் பிறகு சொலலுகிறான், "நான் உன்னைத்தவிர வேறொருவளையும் காதலித்ததில்லை."

"பத்தொன்பது வருஷங்களுக்கு முன் உன் தாயார் வீட்டிலிருந்து நாம் ஒருவரையொருவர் பிரிந்தபின் நீ ஒருதடவையாவது என்னைப் பார்க்கவில்லையா?" என்று அந்த ஸ்திரீ சோமநாதனுடைய முகத்தை உற்றுக் கவனித்துக்கொண்டே கேட்டாள்.

சோமநாதன், "இல்லை, உன்னை ஒருதரங்கூடப் பார்க்கவில்லை. நீ சுவேதவதியிலேயே வசிக்கிறாயா? அல்லது இப்பட்டணத்திற்குச் சிற்சில சமயங்களில் வருகிறாயா? ஆனால் என்னை மன்னி. நான் இந்தக் கேள்விகளைக் கேட்டது பிசகு. முதலிலிருந்தே உன்னைப்பற்றி ஏதோ இரகசியமிருக்கிறதென்று எனக்குத் தெரியும். நான் உனக்கு ஒருவிதமான தீங்கும் செய்யமாட்டேன். உனக்கு உதவிசெய்வதற்காக நான் என் உயிரைவேண்டுமானாலும் கொடுப்பேன்."

ஸ்திரீ, "நல்ல இருதயத்தை உடையவனே! நீ இவ்விதமாக என்னைப்பற்றி நினைத்திருப்பாயென்று நான் ஒருபோதும் எண்ணவில்லை. அநேக வருஷங்களுக்கு முன்னமேயே நீ என்னை மறந்திருப்பாயென்று நினைத்தேன்.

சோமநாதன், "இறந்துபோன என்தாயார் வீட்டில் நீ வசித்தபோது நான் உன்னை எப்படி நினைத்திருந்தேனோ அப்படியே இப்பொழுதும் உன்னை நினைத்திருக்கிறேன். இப்பொழுது எனக்கு வயோதிகப்பருவம் வந்துவிட்டபடியால் நான் இப்படிச் சொல்வதனால் பாதகமில்லை."

ஸ்திரீ, "உன்னுடைய தாராளமான வார்த்தைகளையும், 'உனக்கு உதவிசெய்வதற்காக என் உயிரைவேண்டுமானாலும் கொடுப்பேன்' என்று நீ சொன்னதையும் கேட்டபிறகு நான் என்முகத்தில் முகமூடியை வைத்துக்கொண்டிருப்பது அழகல்ல."

சோமநாதன், "உன் முகத்தை இன்னொருதரம் பார்த்தால் எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும்."

அந்த ஸ்திரீ மெதுவாய் முகமூடியை எடுத்தாள். சோமநாதனுடைய முகத்தில் சந்தோஷமும் ஆச்சர்யமும் தோன்றின. காலத்தினால் அவளுடைய அழகு குறையவில்லை. மேகம்போன்ற அவளுடைய கூந்தலில் ஒரு நரைமயிர்கூடக் காணப்படவில்லை. அவள் முகத்தில் கொஞ்சமாவது சுருங்கலில்லை.

"இவ்வளவு காலமாக நீ என்னை ஒருதடவையாவது சந்திக்கவில்லையா?" என்று அவள் மறுபடியும் கேட்டாள்.

சோமநாதன், இல்லை, ஒருதரங்கூட நான் உன்னைச் சந்திக்கவில்லை. உன்னுடைய கேள்வியினால் நீ சுவேதவதியில் வசிக்கிறாய் அல்லது இங்கு அடிக்கடி வருகிறாய் என்று எண்ண இடமுண்டாகிறது. ஆனால் நீ சுவேதவதியிலேயே இருந்துகொண்டு எப்பொழுதும் வெளியே போய்க்கொண்டிருந்தாலும் என்னைச் சந்திக்காமல் இருப்பது ஆச்சரியத்தைத் தரத்தக்கதல்ல. நான் அடிக்கடி வெளியே போவதில்லை. என் வீட்டிற்கு வரமுடியாத வியாதியஸ்தர்களின் வீட்டிற்கு மாத்திரம் போவேன். அப்படிப் போகும்பொழுதும் வண்டியிற்றான் போவேன், வண்டியிலும் சும்மாயிராமல் ஏதாவது ஒரு கிரந்தத்தை வாசித்துக்கொண்டுதானிருப்பேன். வண்டியின் ஜன்னல் வழியாய் வெளியே எட்டிப்பார்ப்பதில்லை. ஆகையால் தினந்தோறும் நீ என் வண்டியருகிற் போய்க்கொண்டிருந்தாலும் உன்னைப் பார்த்திருக்கமாட்டேன். உனக்கு ஏன் என்னிடத்தில் இவ்வளவு அவநம்பிக்கை? நான் உனக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன். அக்காலத்தில் நடந்த ஒரு விஷயத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

உன்னைப்பற்றி என்ன இரகசியமிருந்தாலும் அது என்னிடத்தில் பத்திரமாயிருக்கும்."

ஸ்திரீ, "நான் இங்கே ஒரு காரியமாய் வந்தேன். உன்னுடைய தாயாரின் சிறுவீட்டில், நீ சில வஸ்துக்களைச் சேர்த்துவைத்திருந்த அறையைப்பற்றி உனக்கு ஞாபகமிருக்கிறதா?

சோமநாதன், "நான் அதை எப்படி மறப்பேன். அங்குதானே என்னுடைய வைத்திய ஆராய்ச்சிகளைப் பார்த்து நீ மிகவும் ஆச்சரியப்பட்டாய். அங்கேதான் என்னுடைய காதலையும் உனக்கு வெளியிட்டேன்."

ஸ்திரீ, "அப்பொழுது நீ எனக்குச் சில மருந்துகள் செய்யும் விதத்தைச் சொல்லிக்கொடுத்தாயல்லவா? அவைகளில் ஒன்று முகந்துபார்த்தால் மயக்கம் வரச்செய்யும் சக்தியையுடையது. நான் அதைப் பரீக்ஷார்த்தமாய்ச் செய்துபார்த்தேன். அம்மருந்துப் போத்தலொன்று நேற்றிரவு என்னிடமிருந்து களவுபோயிற்று. தீச்செயல்களை அஞ்சாது செய்பவர்களிடம் அது அகப்பட்டிருக்கிறது. அவர்கள் அம்மருந்தின் உதவியால் ஏதாவது துர்க்கிருத்தியங்களைச் செய்தால், அம்மருந்தைப்பற்றிய சமாசாரம் உன்காதிற்கு எட்டலாம் என்று நினைத்தேன். அதைப்பற்றிக் கேள்விப்பட்டால் நீ எனக்கு அம்மருந்து செய்யும் விதத்தைச் சொல்லிக்கொடுத்திருப்பதாக ஒருவரிடமும் பிரஸ்தாபிக்கக்கூடாது."

"நான் சந்தோஷத்தோடு உன்னிஷ்டப்படி நடக்கிறேன்," என்றான் சோமநாதன்.

ஸ்திரீ, "நான் போய்வருகிறேன். ஆனால் ஒரு விஷயம். இனிமேல் நீ என்னை எங்கேயாவது சந்தித்தால் முன்பின் தெரியாதவன் போல் இருக்கவேண்டும்."

சோமநாதன், "அப்படியே ஆகட்டும். என் தாயின் சிறுவீட்டில் வைத்திய விஷயமாய் நான் சேர்த்து வைத்த சில வஸ்துக்களை நீ மிக ஆவலோடு பார்த்தாய். இந்த வீட்டில் நான் ஏராளமான வஸ்

துக்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன். உனக்குப் பிரியமானால் அவைகளைப் பார்க்கலாம்."

அந்த ஸ்திரீ அதற்குச் சம்மதிக்க, சோமநாதன் கையில் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு அவளை ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான். அந்த அறையில் நாம் முன்னே சொல்லியிருக்கிற வைத்திய சம்பந்தமான வஸ்துக்களெல்லாம் இருந்தன. அவள் அங்கே இருந்த பல வஸ்துக்களையும் கவனமாய்ப் பார்த்தாள். ஒரு மேஜையின்மேல் இருந்த பல சீசாக்களைப் பார்த்து அவைகளுக்குள் இருந்த வஸ்துக்களைப்பற்றி அவள் சோமநாதனைச் சிலகேள்விகள் கேட்டாள். ஒவ்வொரு சீசாவிலிருந்த திராவகத்தைப்பற்றியும் சோமநாதன் அவளுக்குச் சொன்னான். கடைசியாக ஒரு சீசாவைக் கையிலெடுத்துக் கொண்டு சொல்லுகிறான், "இந்தச் சீசாவிலிருப்பது மிகவும் கொடிய விஷம். இதை இங்கு வைத்திருப்பதுகூட எனக்குப் பயத்தை உண்டு பண்ணுகிறது. ஆனால் என்னுடைய வேலைக்காரர்கள் இங்கே அடிக்கடி வருகிறதில்லை. அந்த மூடர்கள் இவ்வறையிற் பைசாசங்கள் சஞ்சரிக்கின்றனவென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்."

ஸ்திரீ, "இந்த விஷமும் உன்னாற் புதிதாய்க் கண்டுபிடிக்கப் பட்டதோ?"

சோமநாதன், "இதை நான் நேற்றுத்தான் கண்டு பிடித்தேன். இதைப்போன்ற கொடிய விஷம் வேறெங்கும் கிடையாது. தொண்டையில் ஒரு துளி ஊற்றவேண்டியது கூட இதற்கு அவசியமில்லை. ஒரு இறகின் நுனியை இதில் துவைத்து உதட்டில் வைத்தால் உடனே மரணமுண்டாகும். இந்தத் திராவகத்தின் விசேஷமான குணம் என்னவென்றால் இதற்கு வாசனையுமில்லை, நிறமுமில்லை."

ஸ்திரீ, "எதற்காக நீ இவ்வளவு கோரமான விஷத்தைக் கண்டுபிடித்தாய்?"

சோமநாதன், "மருந்துகளைக் கலக்கும்பொழுது இதில் ஒரு துளிவிட்டால், அநேக வியாதிகளைக் கண்டிக்கக்கூடிய மருந்தாகும்.

இதை விட்டு மற்றைய வஸ்துக்களைப் பார்ப்போம், ” என்று சொல்லி அந்தச் சீசாவை மேஜையின்மேல் ஒரு ஓரத்தில் வைத்தான். பிறகு அவன் விளக்கை எடுத்துக்கொண்டு முன்னே சென்றான். சீசாக்கள் விழுந்து உடைந்த சப்தம் கேட்டது. சோமநாதன் திரும்பிப் பார்த்தான். உடனே அந்த ஸ்திரீயைப் பார்த்துச் சீசாக்கள் உடைந்ததற்காக வருத்தப்படவேண்டாமென்று சொன்னான்.

“ கவனமில்லாமல் இப்படிச் செய்துவிட்டேன். நான் நடக்கும்பொழுது தோளிற்போட்டிருந்த சால்வை சீசாக்களின் மேற்பட அவைகள் கீழே விழுந்து நொறுங்கிவிட்டன, ” என்று அந்த ஸ்திரீ வருத்தப்படுபவளைப்போற் சொன்னாள்.

சோமநாதன், “ அதனாற் குற்றமில்லை. உன்மேற் பிசகில்லை. அதற்காக நீ வருத்தப்படவேண்டாம். ”

“ ஆனால் நீ கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்ததெல்லாம் வீணாய்ப் போயிற்றே, “ என்று அவள் தரையில் உடைந்து கிடந்த கண்ணாடியையும் ஊற்றிக்கிடந்த திராவகத்தையும் பாத்துக்கொண்டே சொன்னாள்.

“ மறுபடியும் நான் குற்றமில்லையென்று சொல்லுகிறேன், ” என்றான் சோமநாதன்.

அவனுக்குச் சீசாக்கள் உடைந்ததனால் உண்டான வருத்தத்தை விட அந்த ஸ்திரீ சஞ்சலப்படுகிறாளே என்ற வருத்தம் அதிகமாயிருந்தது.

ஸ்திரீ, “ அந்தக் கொடிய விஷமிருந்த சீசாவும் விழுந்து உடைந்தவைகளோடு இருந்ததே. ”

சோமநாதன், “ அது உடைந்துபோயிருந்தாலும் பாதகமில்லை. நான் அவைகளைப் பத்திரமாய் வைக்காமல் இப்படி வைத்திருந்ததற்கு இது தகுந்த தண்டனைதான். இப்பொழுது நான் மற்றைய ஆச்சரியமான வஸ்துக்களைக் காட்டுகிறேன்.

பதனிடப்பட்டிருந்த பிணங்களையெல்லாம் அவன் காட்டினான். அந்த ஸ்திரீ தைரியமான மனதையுடையவளாயிருந்தபோதிலும் பிணங்களைப் பார்த்தபோது அவளுடைய மனதிற் கொஞ்சம் பய முண்டாயிற்று. சோமநாதன் பத்தொன்பது வருஷங்களுக்கு முன் வீரசிங்கத்தினிடம் விலைக்குவாங்கின துஷிதனுடைய பிரேதமும் பதனிடப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் அந்த ஸ்திரீக்கு உண்டான ஆச்சரியத்திற்கும் பயத்திற்கும் அள வில்லை. ஏனென்றால் சோமநாதனிடம் வந்திருந்த ஸ்திரீ, வாசகர்கள் சந்தேகிக்கிறபடி சுலக்ஷணாதான்.

துஷிதனுடைய பிணம் செத்து ஒருநாள்தான் ஆனதுபோல் அவ்வளவு புதிதாய் இருந்தது. துஷிதன் உயிரோடு இருந்தபோது உடுத்தியிருந்த உடைகளைப்போன்ற உடைகள் அவனுடைய பிரேதத் திற்கு உடுத்தப்பட்டிருந்தது. அப்பிணமானது தன்னுடைய கண்ணா டியாற் செய்யப்பட்ட கண்களாற் சுலக்ஷணாவை உற்றுப்பார்ப்பதைப் போற் காணப்பட்டது. ஆச்சரியத்தினாலும் திகிலினாலும் ஒரு நிமி ஷம்வரை அவள் வாயடைத்துப்போனது அவளுடைய அதிர்ஷ்ட வசத்தினாற்றான். அருகில் ஒரு மேஜையிருந்தபடியால் கீழே விழுந்து விடாமல் அதிற் சாய்ந்துகொண்டாள். சோமநாதன் அப்பொழுது அவளைக் கவனிக்கவில்லை. இப்படியெல்லாம் இருந்திராவிட்டால் அவள் கூச்சலிட்டுக் கீழே விழுந்திருப்பாள். அந்தப் பிணத்தைப் பார்த்ததும் அவள் மனதில் உண்டான எண்ணங்களை வெளியிட் டிருப்பாள். ஒரு நிமிஷத்தில் மறுபடியும் அவள் மனமானது சாதா ரண நிலைமையை அடைந்தது.

ஸ்திரீ, "இது மிகவும் ஆச்சரியகரமாயிருக்கிறது. பிரேதங் களைப் பதனிடுவதில் உன்னைப்பார்க்கிலும் மேலானவர்கள் இக்காலத் தில் வேறொருவருமில்லை."

அப்பொழுது அங்கேயிருந்த கெடியாரத்தில் மணி பதினொன்று அடித்தது. உடனே அவள் சொல்லுகிறாள், "நேரம் அதிகமா யிற்று. இந்த இரண்டுமணி நேரமும் எவ்வளவு சீக்கிரத்தில் கழிந்து விட்டது. நான் போய்வருகிறேன்.

பிறகு சோமநாதன் சுலக்ஷணாவை வெளியே அழைத்துக் கொண்டு சென்றான். அவள் போனபிற்பாடு அவன் அவளைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்தான்.

ஒட்டுக்கேட்பவர்கள்.

மறுநாள் மத்தியானம் இரண்டுமணிக்குச் சிந்தாமணி புவனாலயம் ஜமீந்தார்வீட்டின் கதவைத் தட்டினான்.

"உன்னை வீட்டிற்குள் விடக்கூடாதென்று எங்கள் எஜமாட்டி உத்தரவுசெய்திருக்கிறார்கள்," என்று வாசல்காப்போன் சொன்னான்.

சிந்தாமணி, "நான் உங்கள் எஜமானியைப் பார்ப்பதற்காக வந்திருப்பதாய்ச் சொல்லியனுப்பு."

வாசற்காப்போன் கதவருகில் நின்றுகொண்டு மற்றொரு வேலைக்காரனைச் சுலக்ஷணாவிடம் அனுப்பினான். சுலக்ஷணாவிடம் போனவன் சற்றுநேரத்தில் திரும்பிவந்து தன் எஜமாட்டி சிந்தாமணியைப் பார்க்க முடியாதென்று சொன்னதாகத் தெரிவித்தான். அதைக் கேட்டதும் சிந்தாமணி அந்த வீட்டைவிட்டுச் சென்றான்.

ஒருபக்கத்திலிருந்து விமலா இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள். முதலிலேயே அவள் சிந்தாமணியைப்பற்றித் தன் தாய் சொன்ன கதையை நம்பவில்லை. இப்பொழுது அவனைப் பார்த்தபிறகு அவன் குற்றமற்றவன் என்று அவளுக்குத்தோன்றியது அவன் திரும்பிவருவான் அல்லது வேறு ஏதாவது செய்வான் என்று நினைத்தாள். சற்றுநேரம் சென்று தன் தங்கை அசிதாவிடத்தில் நடந்தவிஷயத்தையும் அதைப்பற்றிய தன்னுடைய அபிப்பிராயத்தையும் விமலா சொன்னாள். சிந்தாமணி என்னசெய்யப்போகிறான் என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்கு இருவரும் ஆவலாயிருந்தார்கள்.

சிந்தாமணி வந்துவிட்டுப்போன ஒருமணிநேரத்திற்கெல்லாம் ஒருவன் சுலக்ஷணாவீட்டுக் கதவைத் தட்டினான். வேலைக்காரன் கதவைத் திறந்ததும், அவன் உள்ளே நுழைந்தான். அவன் குட்டையாகவும் கனத்த தேகத்துடன்கூடியவனாகவுமிருந்தான். அவன்

வேடிக்கையாக உடுத்தியிருந்தான். வேலைக்காரனைப் பார்த்து அதிகாரத்தொனியுடன், "என்னை உன் எஜமானி இருக்கும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு போ?," என்று கட்டளையிட்டான். அவன் வீட்டிற்குள் நுழைந்த மாதிரியையும் அவனுடைய அதிகாரத் தொனியையும் பார்த்த வேலைக்காரன், அவன் தன் எஜமானிக்கு நன்ருய்த் தெரிந்தவனுக இருக்கவேண்டுமென்று நினைத்து அவனை அழைத்துச் சென்ருன். சுலக்ஷணா இருந்த அறையின் கதவண்டை போனதும் வேலைக்காரன் கூடவந்தவனைப் பார்த்து "யார் வந்திருக்கிருரென்று எஜமானிக்குச் சொல்வது? " என்று கேட்டான். வந்தவன் தன் பெயர் கங்காதரன் என்று தெரிவித்தான். வேலைக்காரன் கதவைத் திறந்து, "கங்காதரர் உங்களைப் பார்க்க வந்திருக்கிருர்!" என்று சுலக்ஷணாவிடம் சொன்னுன்.

இதை இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு விமலாவும் அசிதாவும் என்னசெய்கிருர்களென்று பார்ப்போம். அவர்களிருவரும் கங்காதரன் வந்ததைப் பார்த்தார்கள்.

அசிதா, "நமது தாயாரிடத்தில் இவனுக்கு என்ன வேலையிருக்கும்."

விமலா, "இவன் சிந்தாமணியின் விஷயமாய் இங்கே வந்திருக்கலாம் என்று எனக்குச் சந்தேகமுண்டாகிறது."

கங்காதரன் எதற்காக வந்தான் என்பதை அறிந்துகொள்ளுவதற்காக இருவரும் சுலக்ஷணாவின் அறைக்கு அடுத்த அறையை அடைந்தார்கள். ஒரு அறையில் நடப்பது அடுத்த அறையிலிருப்பவர்களுக்கு நன்ருய்க் கேட்கும். ஆகையால் சுலக்ஷணாவின் புத்திரிகளிருவரும் தங்கள் தாய்க்கும் கங்காதரனுக்கும் நடந்த சம்பாஷணையை ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

இது இவ்வாருக சுலக்ஷணாவின் அறையில் நடந்த விஷயங்களைக் கவனிப்போம். முன்னொருதரம் கங்காதரனைப்பற்றி சுலக்ஷணா தன் மகன் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிருள். கங்காதரன் மிகவும் இழிவான மனிதனென்று மதிமான் சொல்லியிருந்தான். அவனை நேரிற்

பார்த்ததும் தன் மகன் சொன்னது வாஸ்தவமாயிருக்கலாம் என்று சுலக்ஷணா நினைத்தாள். சிந்தாமணியின் விஷயமாய் அவன் வந்திருப்பான் என்று அவள் கனவிலும் எண்ணவில்லை. சுலக்ஷணா தன்னை உட்காரச்சொல்லாமலிருக்க, கங்காதரன் தானே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

கங்காதரன், "தங்களை முன்பின் அறியாதவனாகிய நான் தங்களிடம் வந்தது தங்களுக்கு ஆச்சரியமாயிருக்கலாம்."

சுலக்ஷணா, "உனக்கு என் மகனைத் தெரிந்திருப்பதால நீ அவனைப் பார்க்கவந்திருக்கலாம், ஆனால் அவன் வீட்டிலில்லை."

கங்காதரன், தங்களுடைய புத்திரனுக்கும் எனக்கும் உள்ள பழக்கத்தை உத்தேசித்து நான் தங்களிடம் வந்ததாகத் தாங்கள் எண்ணக்கூடாது ஆனால் என்னுடைய நண்பனாகிய சிந்தாமணியைப் பற்றித் தங்களிடம் பேசலாமென்று வந்தேன்.

கங்காதரன் சிந்தாமணி விஷயமாய் வந்தானென்பது முன்பு தெரியாதபடியால், சிந்தாமணி என்ற பெயரைக் கேட்டதும் சுலக்ஷணா சிற்றக் குழப்பம உண்டாயிற்று. தைரியமான மனதுடையவள் ஆதலால் உடனே குழப்பம் நீங்கி அவள் சொல்லுகிறாள். உன்னுடைய வயதிற்காக மரியாதைகாட்டி நீ அவனைப்பற்றிப் பேசுவதைக் கேட்கிறேன். ஆனால் எந்த வாலிபன்விஷயமாய் வந்தாயோ, அவனை மன்னிப்பதாக வாக்களிக்கமாட்டேன்.

கொஞ்சம் கோபத்துடன் கங்காதரன் சொல்லுகிறான், ஏனம்மா மன்னிப்பா? அவன் கேட்பது மன்னிப்பல்ல. நியாயத்தைத்தான் அவன் கேட்கிறான். மன்னிப்புக்கேட்கவேண்டியது தீங்கிழைத்தவர்களையொழியத் தீங்குற்றவர்களல்ல.

சுலக்ஷணா, நீ சொல்வதிலிருந்து எனக்கு என்ன விளங்குகிறதென்றால், சிந்தாமணி நடந்ததை நடந்தபடி சொல்லாமல் ஏதோ பொய்சொல்லியிருக்கிறான் என்பதுதான்.

கங்காதரன், இல்லை, அவன் பொய்சொல்பவனல்லன்.

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

இந்தியாவைப்பற்றி

மிஸ்டர். ஜி. பி. கூச் என்பவர் அபிப்பிராயம்.

"இந்தியாவைப் பற்றிய எண்ணத்தை எனக்கு ஊட்டியவர் மிஸ்டர் மைத்ரா என்பவரே. எனது சிறு வயதிலிருந்தே நான் மெக்காலே எழுதிவைத்துள்ள "கிளைவ்" "வார்ன் ஹேஸ்டிங்ஸ்" முதலிய பெரியோர்களது சரித்திரங்களைப் படித்துவந்தது முதலே எனக்கு இந்தியாவைப்பற்றிய உணர்ச்சி இருந்துகொண்டிருந்தது. இவற்றுடன், 'ஆசியாவின் ஒளி' என்னும் புத்தக்கடவுளின் சரித்திரமும், "இந்தியா நமக்குப்போதிப்பது யாது" என்னும் மாக்ஸ் முல்லர் எழுதிவைத்துள்ள புஸ்தகமும், இந்திய ஜனங்களின் சரித்திரம்" என்ற ஸர்வில்லியம் ஹண்டரின் புஸ்தகமும், எட்வின் ஆர்னல்டின் "பகவத்கீதை" என்னும் புத்தகமும், ஓல்டன் பர்க்கின் "புத்தர்" என்ற புத்தகமும், "ஆசியர்கள் படிப்பு" என்ற ஸர் அல்பிரட்ஸியல் புத்தகமும், "ஜனங்களின் உடல் என்று பீல்டிங் எழுதிவைத்தபுத்தகமும், "ஆசியாவும் ஐரோப்பாவும் என்று மெரிடித் டௌன்ஷேட்டின் புத்தகமும் இந்திய விஷயமாக என் அறிவை விசாலப்படுத்தியுள்ளன இன்னும் இந்தியர் விஷயமாக அடிக்கடி அநேக புத்தகங்களும் படித்துக்கொண்டு வருகின்றேன். கேம்ப்ரிட்ஜ் சர்வகலா ஸங்கத்தில் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் படித்து வருகின்றார்கள். அவர்களிடத்தில் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அப்போது அவர்களுடைய மேன்மையான குணத்தை உள்ளபடியே பிரத்யக்ஷத்தில் நான் கண்டும் இருக்கிறேன்.

மிற்க, 1906-வருஷம் முதற்கொண்டு பார்லிமெண்ட் ஸபையில் இந்தியாவைப்பற்றிய எல்லாவிதமான நடவடிக்கைகளையும் கவனித்து வருகின்றேன். காங்கிரஸ் லீக் தனது கோரிக்கையை வெளியிட்டது முதல் அநேக மேதாவிகள் பேசிக்கொண்டு வருவதையும் கவனித்து வருகின்றேன். ஸ்ரீமான் கோகலே அவர்கள் எப்போ

தும் என்னுடைய உள்ளத்திலேயே இருந்து வருகின்றார். இந்திய கிளாஸ்டன்என்று அழைக்கத்தகுந்த ஸ்ரீமான் பானர்ஜியின் வாக்கு வன்மையும், கௌரவ பேங்காளி என்று போற்றற்குரிய ஸ்ரீமான் பாஸுவின் திறமையும், பம்பாய்ப் பிரமுகர் ஸ்ரீமான் மேதாவின் யோக்கியதையும் அரசாங்க நிபுணரும் கவிவாணருமான ஸ்ரீமான் டட் என்பவர்களின் பெருந்தன்மையுங்கொண்டு இன்னும் என்றும் கொண்டாடத்தக்கவர்களான ஸ்ரீமான் குப்தா ஸின்ஹா இவர்களால் வெளியேற்றப்பட்டுள்ள புஸ்தகங்களும் எனது புஸ்தகசாலையில் இருந்து வருகின்றன. இந்தியா விஷயமாகவே எழுதியும் பேசியும் தமது காலத்தை நற்காலமாகப் போக்கிய ஸாவில்லியம் வெட்டர் பர்ண், ஸர்ஹென்றி காட்டன், ஜான் எல்லிஸ், ஸர் சார்லஸ் டில்க், ஸர் ஹொபாட்ராபர்ட்ஸ் ஹென்றி வில்சன் ஆகிய மஹாமேதாவிக ளான பரோபகாரிகளெல்லாருடைய அபிப்பிராயங்களும் இன்றும் நல்லோரால் கொண்டாடப்பட்டு வருகின்றன. பிரிட்டிஷ் நாடுகள் ஜப்பான் அமெரிக்கா முதலிய பல உயர்ந்த இடங்களிலும் சென்று கௌரவமான பட்டங்கள் பெற்று உலகத்துக்கே அலங்காரமாக இருந்து வருகிற ஸர் ரவீந்த்ரநாத டாகூரின் தேசாபிமானம் அவரது நாடக நூற்களிலும் கிதாஞ்சலியிலும் பிரகாசித்துக்கொண்டிருக் கின்றது. அவருடன் உழைத்து வருகிற ஸி. எப். ஆண்ட்ரூஸின் நல்லெண்ணமும் இந்தியாவானது உயர்வை எடுத்துக் காட்டுகின் றது. இப்பெரிய இந்தியாதேசத்தின் விஷயமாகக் கவனம் செலுத்தி வருவார்கள் அதன் நன்மையைப் பெறுமவிரார். இங்கி லாந்தும் இந்தியாவும் ஒத்துழைத்து ஒவ்வொரு தேசமும் பரஸ்பரம் தமது பெருமைகளை அறிந்து கொள்ளவேண்டும். கூடியவிரைவில் இந்தியாவிற்குச் சுயஆட்சி கொடுத்தலே உயர்வான காரியமாகும். இந்தியர்கள் ஸம்பந்தத்தினின்றும் ஏராளமான தொகை சம்பாதிப் பதைவிடச் சகோதரப்பான்மையை அதிகப்படுத்துவதே பெருமை யையும் வெற்றியையும் பெறுவதற்குரிய நேரிய வழியாகும்.

"காண்டெம்ப்ரரி ரேவியூ"

சென்னைப் பென்ஸிற் சாலையின் வரலாறு.

வெகுகால முயற்சியின் பயனாகச் சென்னைக் கவர்ண்மெண்டார் பி. ஏ. வகுப்பை முடித்துக்கொண்டு தொழின்முறையில் புகுந்து உழைத்துத் தேசத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட வேண்டுமென்று முன்னுக்குவரும் மாணவர்கட்கு உதவிச் சம்பளங் கொடுத்து உதவுவதாக முன்னுக்கு வந்திருக்கின்றார்கள். ஆனால் இப்படிப்படித்தவர்களிற் சிலருக்குத்தான் தொழின்முறையில் புகுந்து உழைக்கவேண்டுமென்னும் உணர்ச்சிவந்திருக்கின்றது. இவர்களிலும் பலர், எப்பாடுபட்டேனும் கடலுக்கு அப்புற நாடுகட்குச் சென்று படித்துத் தொழின்முறையிற் றேர்ச்சிபெற்று வரவேண்டுமென்ற நோக்கம் கொள்ளத் துணியவில்லை. அப்புறநாட்டுக்குச் சென்று தேர்ச்சியடைந்து வந்தாலும் கவர்ண்மெண்டார் ஆதரிப்பார்களோ இல்லையோவென்ற சந்தேஹந்தான் அவர்களைப்பிடித்துக் கெடுக்கின்றது. இயந்திரக்கைத்தொழிலில் வேலைசெய்துவரும் சில ஊக்கமுள்ள மனிதர்கள் மாத்திரம், தைரியமாக இங்கிலாந்து முதலிய பிறநாடுகட்குச் சென்று அத்தொழிலில் பூரணமான அறிவுடன் திரும்பி வந்து தற்போது இருந்துவரும் தொழிற்சாலைகளை விருத்திபண்ணுவதிலேயோ அல்லது புதியசாலையொன்றை ஏற்படுத்துவதிலேயோ தங்களது புத்தியை உறுதியாகச்செலுத்துகிறார்கள். ஆனால், அத்தகைய மனிதர்கள், மெட்ரிகுலேஷன் வரையில் படித்தாவது ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறியாவது தான் இருக்கின்றார்கள். ஆகையினால் இவர்கள் ஒருவாறு தங்கள்தொழிலுக்கு வேண்டிய பழக்கத்தைக்கொண்டிருக்கிறார்களேனும் வேறு நாடுகளில் நடந்தேறும் அத்தொழில்களைப்பற்றி உபந்யாஸங்களின் அம்ஸங்களை நன்கு தெரிந்துகொள்ளத் தக்கபடியாக ஆங்கிலபாஷையில் தேர்ச்சிபெறாதவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் இச்சென்னையில் இருந்துகொண்டே தொழின் முறையில் நாளடைவே தேறி ஒருவாறு தேசத்தின் தொழின் முன்னேற்றத்துக்கு ஓர் சிறிது உதவியைத் தருவார்களென்று நம்பவேண்டியிருக்கின்றது.

சிலவருஷங்கட்குமுன்னே சில கனவான்கள், தொழின்முறையில் ஊக்கத்துடன் புகுந்து, தனத்தைச் செலவுசெய்து, ஜெர்மனியிலிருந்து ஒரு பென்ஸிற் தொழிற்சாலையை விலைக்கு வாங்கி நல்ல ஊக்கத்துடனும் பலமான அஸ்திவாரத்துடனும் ஆரம்பித்தார்கள். அந்தச்சாலை "கோதாவரி பென்ஸில் அண்டுகோ-காக்கிநாடா" என்னும் பெயருடன் காக்கிநாடாவில் ஆரம்பிக்கப்பட்டது. அதை நன்றாக நடத்திக்கொண்டு செலுத்தத்தக்க தொழிற்றேர்ச்சி யுடையவர்கள் அகப்படாமையினால், சில என்ஜினியர்களுடைய அற்ப அறிவினைக்கொண்டு, அந்தக் கம்பெனிச்சொந்தக்காரர்கள், அந்தச் சாலையை எங்ஙனமேனும் நிறுத்தாமல் நடத்திக்கொண்டு நல்ல பென்ஸில்கள் உண்டாக்க வேண்டுமென்று தங்களால் கூடியவரை முயன்று பார்த்தார்கள். எனினும், தொழிலில் தக்கதேர்ச்சியுள்ள ஒருவருடைய உதவியில்லாமல் தங்களால் இந்தச்சாலையை நடத்த முடியாதென்று கண்டுகொண்டார்கள். இத்தொழிலைப்பற்றி வெளியிடப்பெற்றிருக்கும் புஸ்தகங்களெல்லாம், தொழில் நடைபெற வேண்டிய சூக்ஷ்மாம்சங்களைக் காட்டாமலே, விளக்க மில்லாமலும் பொருத்தமில்லாமலும் இருக்கக்கூடிய சிலவிஷயங்களை மாத்திரம் சொல்லிப்போகின்றன. இப்புஸ்தகப் படிப்பானது, ஒரு தொழிலைப்பற்றிய முகவுரைப் படிப்பாக மாத்திரம் இருந்ததனால் அதனால் உண்டாகும் அறிவானது அற்பஅறிவாகவே முடிகின்றது. இது தொழிலாளிகளுடைய அந்தரங்கமான வழக்கந்தான். அன்றியும் புஸ்தகப்படிப்புடன் அநுபவமுமிருந்தால்தான் எந்தத் தொழிலும் காரியகரமாகுமென்பதும் உலகத்து உண்மையல்லவா? ஆதலினால் இவர்கட்குத் தொழிலில் அநுபவ ஞானமில்லாக்குறையே இத்தகைய துன்பத்துக்குக் கொண்டுவந்து விட்டது. ஆகையினால், அவர்கள் அந்தச்சாலையை மூடிவிடவேண்டுமென்றும் ஆலோசனையில் தீர்மானித்துவிட்டனர். அப்போது ஐரோப்பிய யுத்தமும் ஆரம்பித்து விட்டது.

இந்தச்சமயத்தில், தொழிலிலாகா உத்தியோகஸ்தாக ஒரு இளையவயதுடைய பிரிட்டிஷ் ஆபீஸர் இருந்தார். அவருக்கு இந்

தச்சாலையைக் கவனித்து இதனை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர வேண்டுமென்னும் நல்லெண்ணம் உதித்தது. அவர் அந்தச்சாலையின் சொந்தக்காரர்களுடன் சில ஏற்பாடுகள் செய்துகொண்டு, தனது இலாகாவில்தன் கீழ்உத்தியோகஸ்தராக இருந்துள்ளவரும் தேசாபிமானியாயுள்ளவருமான ஒரு தனிகரைத் தூண்டி அதனைக் கவனித்து வரும்படி சொன்னார். அந்த இந்தியரும் அந்தச்சாலையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருவதாகவும் தீர்மானித்தார்.

மரவகைகளினால் ஆகவேண்டிய வேலைகளில் யாதொரு விதமான கஷ்டமும் தோன்றாமல் வேலைநடந்து வந்ததேனும், ஈய சம்பந்தமான வேலைகளில் மட்டும் அந்த இந்தியரால் காரியம் நிர்வஹித்து வரமுடியவில்லை. அவரும், தமக்கு அங்கு உதவியாகக் கிடைக்கக்கூடிய சில சாதனங்களைக்கொண்டு தம்மால் இயன்ற அளவு சிரமப்பட்டுப் பார்த்தார்; ஜயம் பெறவில்லை. ஏனெனில், ஈயசம்பந்தமான இந்தத்தொழிலுக்கு ரஸாயன சாஸ்திர உணர்ச்சி யதிகமும் வேண்டியிருந்தது. என்றாலும், அந்த இந்தியர் தமது முயற்சியைக் கைசோரவிடாமல், சில அவசியமான சாமான்களுடன் பெங்களூரில் உள்ள சாஸ்திரத்தொழிற் சாலைக்குப்போய், அங்குள்ள அதற்குத் தலைவரான ஒரு அநுபவ ஞானமுடைய ஆபீஸருக்கு நடந்தவையெல்லாம் தெரிவித்து, அவருடைய உதவியின் மேலும் தூண்டுதலின் மேலும், தமதுபென்ஸில் தொழிற்சாலையைச் சென்னைக்குக் கொண்டுவந்து நல்ல கட்டிடமும் கட்டுவித்துத் தமது தொழின் முயற்சியை விருத்திக்குக் கொண்டுவர முயன்றார்.

இப்படிச் சென்னைக்குக் கொண்டுவந்த ஒருவருஷத்திற்குள் அந்த இந்தியர் தமது தொழிலில் கைதேறித் தமது விடாமுயற்சியினால் வெற்றியும் பெற்றனர். பென்ஸில்களும் உண்டாக்கப்பெற்று மார்க்கட்டுகளிலும் விற்பனைக்குத் தயாராகி நின்றன. பிறகு இவ் விஷயம் கவர்ண்மெண்டுக்கும் அறிவிக்கப்பெற்றுச் சில மாதிரிப் பென்ஸில்களும் அனுப்பப் பெற்றன. கவர்ண்மெண்டாரும் அத

னது தேர்ச்சியை நன்கு கவனித்துத் திருப்தியை அடைந்து அதன் செலவுக்கென்று சில தொகைகளும் அனுப்பி யுதவினார்கள். தொழின்முயற்சியும் இன்னும் நன்றாக ஆரம்பிக்கப்பட்டது. உள்நாட்டு மரவகைகளிற் பலவும்பரீக்ஷை பார்க்கப்பெற்றன. ஆனாலும் உறுதியாகவும் அழகாகவும் நீண்டகாலம் உபயோகமுள்ளதாகவும் இருப்பதற்குப் பிறநாட்டு மரங்களே தகுதியுள்ளனவாகக்கவனிக்கப் பட்டன. அதனால் இன்னும் அதனைப்பற்றிய சிரமம் ஒழிந்தபாடாக இருக்கவில்லை. உள்நாட்டு மரங்களைக்கொண்டே பென்ஸில்கள் ஆக்கப்பெற்று விலைக்கு அனுப்பப்பெற்றன. பிறகு நல்ல தேர்ச்சியும் விடாமுயற்சியும் உடைய சிலர், வெகு முயற்சி செய்து தக்க சாமான்களைக் கண்டுபிடித்து அநேக கஷ்டநஷ்டங்கட்குப் பிறகுதேறி ஒருவாறு வெற்றியும் பெற்று நல்ல பென்ஸில்களாகவும் வியாபாரத்துக்கு அனுப்பினார்கள். பொது ஜனங்களும் தங்களது திருப்தியைக்காட்டினார்கள். கவர்ண்மெண்டாரும் விசேஷ உதவி செய்ய முன்வந்தார்கள். இப்போது இந்தியரிற் பெரும்பான்மையோரும் இந்தியப் பென்ஸில்களையே உபயோகித்து வருகின்றார்கள்.

மறுபடியும் அந்தக்கலாசாலைக்குச் சொந்தக்காரர்கள் காபியிங் பென்ஸில்கள் செய்வதற்கும் ஆரம்பித்தார்கள். இந்தப்பிரயத்தனம் அந்த இந்தியருக்கு மிக்க சிரமத்தைக் கொடுத்து முடிந்ததாயினும் முடிவில் அவருக்கு, "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் உத்தமபாடத்தைக் கற்பித்துக்கொடுத்தது.

இந்தியர்களால் செய்யப்பட்டிருக்கிற பென்ஸில்கள் ஜர்மானிய பென்ஸில்கட்கு மேம்படாமலிருந்தாலும், மற்ற நாட்டுப்பென்ஸில்களின் தரத்திற் குறைந்திருக்கவில்லை. ஜர்மானியரும் பென்ஸில் முயற்சியில் அறுபது வருஷங்கட்குப் பிறகுதான் நல்ல பென்ஸில்கள் ஆக்கும் முறையில் தேர்ச்சி பெற்றார்களென்று ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது. இன்னும் ஜப்பானிய பென்ஸில்களும் அமெரிக்கன் பென்ஸில்களும் இந்திய பென்ஸில்களளவுங் கூடத் தரத்தில் உயர்

ந்து வரவில்லையென்று கருதப்படுகின்றது. ஆரம்பித்த இரண்டாவது வருஷத்தில் இவ்வளவு தேர்ச்சிக்கு வந்திருக்கும் இந்திய பென்ஸிலானது, இன்னும் தேறத்தேற ஜெர்மானிய பென்ஸில்கட்கும் மேலான தரத்தையும் அடையக்கூடுமென்று ஊஹிக்க இடமிருக்கின்றது. ஆனால், இதற்குத்தக்க ஆதரவும் வேண்டியதிருக்கின்றது. இத்தகைய பென்ஸில்களை வெளிக்குக் கொண்டுவந்த புகழெல்லாம் அந்த இந்தியரையேதான் போயடையவேண்டும். ஏனெனில், அவர்தாம் விடாதமுயற்சி கொண்டவராகித் தமக்குள்ளடங்கியுழைத்திருந்த அநுபவசாலிகளை வைத்துக்கொண்டு இந்த நிலைமைக்குக் கொண்டுவந்தவராகிறார்.

இன்னும் அவ்விஷயத்தில் அநேக விஷயங்கள் ஆலோசித்து நடக்கவேண்டியிருக்கிறதுடன், சிற்சில தவறு பாடுகளும் நீக்கப்பெறவேண்டி யிருக்கின்றன. காருண்ய கவர்ண்மெண்டார் இந்தியத்தொழின் முறைகளை விருத்திக்குக் கொண்டுவர முன்வந்துதவினார்களாயின், அந்த ஒருநற்றுணையைப் பெருந்துணையாகக்கொண்டு இத்தகைய தொழில்கள் முன்னேறலாகும். இந்தப்பென்ஸில்சாலையில் உத்யோகமாகி அநுபவத்தில் இருக்கும் சில பல மனிதர்க்கு உதவிச் சம்பளம் கொடுத்து கடலுக்கு அப்புறத்துள்ள நாடுகட்கு அனுப்பிப் பழக்குவார்களானல், இந்தியர்கள் தொழின் முறையில் முன்னேறுவதற்குத் தக்க உதவியாகும். இந்தச்சாலையிலுள்ள ஒரு சிலர்க்கேனும் மேற்கூறிய உதவியைக் கவர்ண்மெண்டார் செய்வார்களானுலும், அவ்வுதவி, இச்சாலையைப்போன்ற இன்னும் சில சாலைகளை ஏற்படுத்துவதற்கும் வழியாகலாம்.

பத்திராதிபர்.

பல குறிப்புகள்:

....

புதிய ஜ்வரத்தைப்பற்றிய வதந்தி:—படிக்காரத்தைப் போன்ற ஏதோ ஒரு சாமான் நாம் தினம் உட்கொள்ளும் உப்பில் கலந்திருப்பதால்தான், இந்தக்கொடிய ஜ்வரம் ஜனங்களை வாட்டிவருகின்றது

என்பது ஒரு வசக்கியாக இருக்கிறது. ஆகையால் கடைகளில் விற்கப்பெறும் உப்பைக் கவர்ன்மெண்டார் பரிசோதித் துப்பார்த்து தகுந்த ஏற்பாட்டைச் செய்தால் மிகவும் உபகாரமாக இருக்குமென்று "நியூ இந்தியா" பத்திரிகை கூறுகிறது.

ஏழை ஜனங்கட்குத் துணிகள்:— ஏழைகட்குத் துணிகள் வாங்கிக் கொடுப்பதற்காகச் சில தினங்கட்கு முன் ராஜப்ரதிநிதியின் சட்டசபையில் ஒரு சட்டம் செய்யப்பட்டதல்லவா? அதை அநுசரித்துக் கவர்ண்மெண்டாரால்சப்ளை செய்யப்பெறும் குறிப்பிட்ட ரகமுள்ள துணிகளை லைஸென்ஸின் பேரில் வாங்கி விற்க இஷ்டமுள்ளவர்கள் அந்தந்த மாகாணகவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். கன்ட்ரோலர் என்ற விலாசத்துக்கு அனுப்பக் கூடாது.

மிளகாய்வற்றல் ஏற்றுமதி:—"ரைக்டர் ஆப் ஸிவில் சப்ளைஸ்" என்ற அதிகாரி பின் வரும் உத்திரவைப் பிரஸித்தம் செய்திருக்கிறார்:—

செர்ட்டிபிகேட் பெற்றுக்கொண்டாலொழிய திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்களிலிருந்து தெற்கு நோக்கியாவது ராமநாதபுரம் ஸ்டேஷனுக்குக் கிழக்கிலுள்ள ஸ்டேஷன்களுக்காவது மிளகாய் வற்றல் அனுப்பக்கூடாது. சென்னப்பட்டணம் ஜில்லாவுக்கும் அதற்குவடக்கிலுள்ளஜில்லாக்களுக்கும் மிளகாய் வற்றல் அனுப்புவதற்குச் செர்ட்டிபிகேட் தாராளமாகக் கொடுக்கப்படும். நெல்லூர் ஜில்லாவிலிருந்து சென்னப்பட்டணத்துக்கு அனுப்பவும் செர்ட்டிபிகேட் கொடுக்கப்படும். செர்ட்டிபிகேட் பெற்றிருந்தாலொழிய சென்னப்பட்டணத்திலிருந்து மிளகாய்வற்றல் ஏற்றுமதி செய்யக்கூடாது. இம்மாகாணத்துக்கு வெளியே மிளகாய் ஏற்றுமதி செய்பாவிட்டால், ரயில்வே உத்தியோகஸ்தர்கள் அதை உடனே தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

30-9-18 (ஒப்பம்) ஆர். பி. வுட்.

ஐவுளி விலையேற்றத்தின் மூலகாரணம்.

தற்காலம் ஜவுளியின் விலையேற்றம் கனகடுமையாக இருக்கிறது. இதற்குப்பருத்தி விலை ஏறிவிட்டதே காரணமென்று பலரும் சொல்லுகின்றனர். ஆனால் "வார்பர்ட்" என்ற பிரபல கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் முல்லர் என்பவரோ காரணம் வேறு என்கிறார். அவரது கருத்தை இங்குச் சுருக்கிச்சொல்லுகிறேன். ஜவுளியின் விலைமிகவும் ஏறிவிட்டதனாலேயே பருத்தியும் விலையில் ஏறலாயிற்று. தவிர மிகவும் உயர்தரமான பருத்தி ஒரு கண்டி விலை ரூபாய் 975 தற்சமயம் இயந்திரசாலைக்காரர்களோ ஒருராத்தல் எடைகொண்ட துணியை மூன்று ரூபாய் வீதம் விற்று வருகின்றனர். இந்தக் கணக்குப்படியே பார்த்தால், ஒரு கண்டி பருத்தியினால் செய்யப்படும் துணிகளுக்கு 1575 ரூபாய் விலைகிடைக்கும் ஆனால், ஒரு கண்டி பருத்தியின் விலையோ 975 ரூபாயேதான். எனவே, ஒரு கண்டி பருத்தியை வாங்கித்துணியாக செய்து விற்பதில் திட்டமாக 600 ரூபாய் லாபம் கிடைக்கும். இப்புள்ளி விவரத்தைப் பார்க்கும்போது, ஜவுளியின் விலையைப்போலப் பருத்தியின் விலை அவ்வளவு உயர்ந்திருக்கவில்லை யென்று புலப்படும். கொள்ளை லாபமடையவேண்டுமெனச் சிலர் சரக்குகளைத் தேக்கி வைப்பதினாலேயே விலை யேற்றம் கடுமையாயிருக்கிறது. இக்கெட்ட வழக்கத்தை அதிகாரிகள் தடுப்பார்களானால் ஜவுளியின் விலையேற்றம் குறைந்துவிடும். சு—மி.

காரைக்குடி மெ செ மெ மெ.
சொக்கலிங்கச் செட்டியாரவர்களது உபகாரச்செயல்.

நெல்விலையதிகப்பட்டு ஏழை ஜனங்கள் பரிதபிப்பதைக் கவனித்தும் அதிக விலை கொடுத்தாலும் நெல் கிடைக்கப்பெறாததைக் கவனித்தும் காரைக்குடியிலுள்ள பிரபல தர்மவான்களில் ஒருவராகிய மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கச் செட்டியார் அவர்கள், பலவூர்களிலிருந்தும் தமது ஆட்கள் மூலமாக

ஏராளமாக நெல்லைச் சேகரித்து வைத்துக்கொண்டு ஏழைஜனங்களுக்கு அதிக சுலபத்தில் கிடைக்கும்படி உதவி செய்து வருகிறார்கள் ஒருரூபாய்க்கு எட்டுப்படி நெல்லாக விற்றுவருகிறார்கள். ஒருவர் ஒருவாரத்துக்கு ரூபாய் மூன்றுக்கு மேல் அளப்பதில்லை. வாங்கவருபவர் தமக்கு இஷ்டமிருந்தால் தாமாகவும் அளந்துகொண்டு போகலாம். இந்தத் தருணத்தில் இவர்கள் இத்தகைய உபகாரம் செய்து வருவது மிகவும் கவனிக்கத் தக்கது. இவர்கள் இன்னும், எத்தனையோ பிரஸித்தியான தர்மங்களையும் செய்து வருகிறார்கள் காரைக்குடியில் ஒரு பெண்பாடசாலையை ஏற்படுத்தி அதற்கென்றே ஒரு நல்ல அழகான கட்டடமும், அதனது செலவுக்கென்றே அழியாத பணமாகத் தொலையில் சிலதொகையும் மதுரையில் தல்லாகுளத்தில் ஒருதக்க இடமும் கலாசாலையின் பேரால் நியமித்து இருக்கிறார்கள். இன்னும் தமது பரம்பரையான தர்மமாகிய யாசகம் கொடுப்பதைக் காக்கவைக்காமலும் திருப்தியாகவும் செய்து வருகிறார். இத்தகைய கனவானுக்குத் தக்க ஸத்புத்திரோத்பத்தியை யளித்தும் நீண்ட ஆயுளும் இன்னும் விசாலித்தமனதும் கிருபை செய்தருளும்படி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

புதிய ஜுரத்திற்கு மருந்து.

சித்திரத்தை–1 துண்டு. ஓமம்-1 கரண்டி (டீஸ்பூன்) வெத்திலை–4. வேப்பிலை–1 ஆர்க். இவைகளை கால் சேர் பொங்கும் வென்னீர்விட்டு அரைத்து ஸொரஸமாய்ப்பிழிந்து வடிகட்டி மறுபடி சுடவைக்காமல் அரைக்கால் சேர் வீதம் மூன்றுவேளை சாப்பிட கட்டாயம் ஜுரம் நின்றுவிடும். ஜுரம்வந்தாலும் வரும் போலிருந்தாலும் சாப்பிடலாம்

பத்தியம் புழுங்கலரிசிக்கஞ்சி. இதில் நம்பிக்கையுள்ளவர்கள் செய்யலாமென்று மாயவரத்திலிருக்கும் ஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் மிஸ்டர் V. விஜயராகவாச்சாரியார் அறிவிக்கிறார்.

சுதேசமித்திரன்.

புதுக்கோட்டை ராஜ்யம்.

(189-ம் பக்கத் தொடர்ச்சி)

—:(o):—

போக்கு வரவு ஸாதனம்.

நெடும்பாதைகளுக்காகச் செலவிட்டவகையில், 1886-ம் வருஷத்தின் தொகை ரூபாய் 55,869 ஆக இருந்தது; இத்தொகையில் ரூபாய் 3,087 திருச்சிப்பாதைமைல் இருபத்துநான்குக்கும், ரூபாய் 26,343 தஞ்சாவூர்ப் பாதைமைல் பதினெட்டுக்கும் அதற்குள்ளடங்கிய பெருங்களூர் பாலத்துக்கும், ரூபாய் 16,643 மதுரைப்பாதைமைல் பதினாறுக்கும், பாக்கிரூபாய் 9,796 உள்ளூர்ப் பாதைக்குமாகச் செலவிடப்பெற்றன. மதுரைப்பாதை அந்த வருஷத்தில் முடிவடையாமலிருந்தது. அவ்வருஷ முடிவில் இருந்த பாதைகள் இவ்வளவே. இற்றைக்குச் சிலவருஷங்கட்கு முன்னுங்கூட அப்பாதைகள் மழைக்காலங்கள் ஒழுங்கற்றவைகளாக இருந்தன. அதனால் அவைகள் பழுதுபார்க்கப்பெற்று, இப்போது ஒழுங்கானவைகளாக இருக்கின்றன. அடுத்தவருஷம் முதலாகத் தலைமைநகரத்துக்கும் தாலூக்கா நகரங்கட்கும் இடையில் சுமார் 92 மைல்கள் அளவினுக்குச் சில ஒழுங்கான பாதைகள் உண்டாக்கப் பெற்றன. இந்தப் புதிய பாதைகட்கான செலவு தொகை 1887-ம் வருஷத்தில் ரூபாய் 53,736—ஆகவும், அடுத்த மூன்று வருஷங்களில் ரூபாய் ஒன்றரை லக்ஷமாகவும் கணக்கிடப் பெற்றிருக்கின்றன. இந்தப் பாதைகள், இப்போது நன்றாகச் சீர்திருத்தம் செய்யப்பெற்று ஒழுங்காகவும் அழகாகவும் பார்ப்போர்க்கு வியப்புத்தருவனவாகவும் இருக்கின்றன. இவற்றிலும் நகரத்துக்கு உட்பட்ட பாதைகள் மிகவும் அழகாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. 1886-ம் வருஷத்தில் ராஜாங்கத்தாரால் ஆதரிக்கப்பெற்ற பாதைகளின் மைலளவு 58 தான் இப்போதோ 307 மைலளவுக்கு விஸ்தாரப்படுத்தப் பெற்றிருக்கின்றன. 1912-வருஷத்

தில் இந்தப்பாதைகட்காகச் செலவிடப்பெற்ற தொகை ரூபாய் 82,000 சென்ற சில வருஷங்களாக இப்பாதைகளின் பொருட்டு எடுத்துக்கொண்ட கஷ்டநஷ்டங்களின் பிரயோஜனமாக இப்போது, பொதுஜனங்கட்குப் போக்குவரவில் யாதொரு கஷ்டமும், பயமும் இன்மை தோன்றி யிருக்கின்றது. ஜனங்களும் ஸமாதானத்தை யடைந்திருக்கின்றனர்.

உப்பு.

1887—ம் வருஷம் வரையில் உப்புவிளைவால் வரும் வருமானவரி புதுக்கோட்டை ராஜாங்கத்தாருக்குச் சுதந்தரமாகவே இருந்தது. பூமியிலிருந்து உப்புகளை விளைவித்துச் சேகரம் செய்து விற்று ராஜாங்க கஜானுவுக்கு லாபம் விசேஷித்து வரும்படியான ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருந்தன. இந்த வரும்படியால் அந்த இலாகாவில் சிலதவறுபாடுகளும் விளைந்துகொண்டிருந்தன. 1882-ம் வருஷத்தில் அந்த இலாகா சம்பந்தமான ஏற்பாடுகள் சீர்திருத்தப்பெற்று, உப்பு வருமானவரியைக் காப்பாற்றுவதற்கான ஒழுங்குச் சட்டங்களும் ஏற்படுத்தப் பெற்றன. ஆனுல், பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார், ஏகாதிபத்திய வருமானத்தை உத்தேசித்து, மண்ணுப்பு விளைவிப்பதையும் விற்பதையும் வற்புறுத்தித் தடுத்து அதற்கு ஈடாக வருஷந்தோறும் ராஜாங்கத்துக்கு ரூபாய் 38000-கொடுத்து வருகிறுர்கள். என்றுலும், ராஜாங்கத்துக்கும் குடிகட்கும் இந்த ஏற்பாட்டினுல் மிகவும் துக்ககரமான கஷ்டங்கள் ஏற்படுவதாயிற்று. இந்த ஏற்பாட்டினுல் இந்த மாகாணத்துக்கும் குடிகளுக்கும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டதல்லாமல் பிரிட்டிஷ் குடிகட்கும், உப்பின் மேல் ஏற்றப்பட்ட அதிகவரியின் நிமித்தம் மிகுந்தகஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டன. காலத்தில் மண்ணுப்புக்குப் பதிலாகக் கடலுப்பு விசேஷப்பரவுதலை யடைந்து, உப்பின் வருமான வரியும் குறைக்கப் படல்நேரவே பொது ஜனங்கட்குக் கொஞ்சம் சமாதான மேற்பட்டது.

கள்முதலிய விற்பனை;

பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ளபடியே கள்முதலிய லாஹிரிப்பானங்கள் விளைவு செய்யப்பெற்று அவற்றினது வியாபாரமும் இந்தமாகாணத்துக்கே சுதந்தரமாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. 1890-ம் வருஷத்தில் ஏற்படுத்தப் பெற்ற தீர்வை, யொழிங்கின்முறை இந்த மாகாணத்திலும் கொண்டு செலுத்தப் பெற்று, இந்த வியாபாரத்தினால் உண்டாகும் வரும்படியை அதிகப்படுத்தும் பொருட்டே மதுபானம் வடிக்கும் சாலையொன்று ஏற்படுத்தப்பெற்று, இதனால் வரும் வரும்படியும் அதிகப்படுத்தலாயிற்று. 1886-ம் வருஷத்தில் இந்தஇலாகாவினால்மாகாணத்துக்கு வரும்படி ரூபாய் 19,04; மேற்கூறிய ஒழுங்குகட்டுப்பின் வரும்படி ரூபாய் 2,04,182, இந்த அதிக வரும்படியானது, தக்க மேல் பார்வையினால், பிரிட்டிஷ் இந்தியாவைப்போலவே விலையேற்றி விற்றதனாலுமே, கிடைத்துளது. இந்த முறையால், இந்த மாகாணத்துக்கு வருமான வரி அதிகப்படுத்தப் பெற்று வந்ததேயொழிய ஜனங்களுடைய நீதிமார்க்கங்கள் குறைவாகவே தோற்றின. தாழ்ந்த ஜனங்கள் அதிகமாகக் குடித்தலைப் பழகிவிட்டார்கள். அதனால் இந்த வியாபாரம் அதிகப்பட்டது.

காட்டிலாகா.

இந்த மாகாணத்துக் காட்டிலாகாவுக்குச் சம்பந்தப்பட்ட பூமிப்பரப்பானது, ராஜா வேட்டை முதலிய விளையாடுவதற்காக ஒதுக்கப்பெற்ற ஏழு இடங்களினது பரப்பான 55 சதுர மைல் உள்ளபடி 120 சதுர மைல்தான். இந்த இலாகா சேமவைப்புகளாக காடுகள் விளைவுக்கேற்ற காடுகள் கற்குழிகள் ஆகிய இவற்றை மேற்பார்வை பார்த்து வருகின்றது. சேமவைப்புக் காடுகள் விலையுயர்ந்த மரங்கள் வளரப்பெறாத தாழ்ந்த காடுகளாக இருக்கின்றன. விளைவுக்காடுகளில் விசேஷமாக முந்திரி மரங்களும் மாமரங்

களும் இன்னும் பல பழமரங்களும் இருக்கின்றன. இவைகள் அநேகமாக 1883-ம் வருஷத்தில் ஸர் சேஷையா காலத்தில் தான் ஒழுங்கு படுத்தப்பெற்றவைகளாகஇருக்கின்றன. அவர்காலத்திலிருந்துதான் தரிசுநிலங்களெல்லாம் காடுகளாகவும், தோப்புகளாகவும், மாற்றப்பெற்றுமாகாணத்துக்கு நல்லவரும்படியைக் கொடுத்து வருகின்றனஇன்னும் இந்தக்காட்டிலாகாவினால் வளர்க்கப்பெறும் காடுகளினால் மற்றொருவிதமான சாதகமும் ஏற்பட்டிருக்கின்றது; எப்படியெனில், இந்த அடர்ந்த காடுகள் மிகுதியான மழை நீரைத்தாங்கி வாய்க்கால் மூலமாக நாட்டுக்குளங்களை நிரப்பிக்கொண்டிருக்கின்றன. இந்த மாகாணத்தின் முக்கிய நதியாகிய வெள்ளாறும் இந்த மாகாணத்தின் விளைவுக்குக் காரணமானாலும், இந்தக்காடுகளிலிருந்து வரும் வாய்க்கால்களால் அதிக விளைவு காணப்பெறுகின்றது.

சில வருஷங்கட்கு முன் இந்த இலாகாவைச் சீர்திருத்தம் செய்யவேண்டிய முறையில் தேர்ந்த ஒருவரது ஆலோசனையும் தேடப்பெற்றது. சென்னைமாகாணத்துக்காடுகளின் பரிபாலன கர்த்தாவாகிய ஒரு தேர்ந்த உத்யோகஸ்தர் இந்தக் காடுகளை வந்துபார்வையிட்டார். மழை குறுகியும் பூமிசாரம் மிகாமலும் இருப்பினும், இந்தக்காட்டிலாகாவுக்குச் சம்பந்தப்பட்ட கற்குழிகளை ஒழுங்காகக் கவனித்து வரும் முறையிலிருந்து, இந்த இலாகாவின் மூலமாக, மாகாணத்துக்கு ஒன்றரை லக்ஷத்துக்கு மேல் வருமானம் கிடைக்கின்றது.

பத்திராதிபர்.

புதுக்கோட்டைவர்த்தமானம்.

பல்கேரியா நேசக்கட்சியாரிடம் சரணமடைந்ததற்காக இவ்வூரில் 7—10—18ல் டவுன்ஹாலில் பிரதமபாடசாலை மாணவர்கள் எல்லோருங்கூடி அதைக் கொண்டாடினார்கள். அவர்கள் அன்றையதினம் சாயுங்காலம் சுமார் ஐந்துமணிக்கு அவ்விடத்தில் Drill

முதலியன செய்து, பிறகு வாத்தியம் முதலானவைகளோடு நான்கு வீதியையும் ஊர்வலம் வந்தார்கள். அவர்களுக்கு ஈ—ஸ்ரீ தர்பார் அவர்களின் ஸாங்க்ஷன் பிரகாரம், சிற்றுண்டியளித்தார்கள். எல்லா வீடுகளிலும் யூனியன் ஜாக்பறந்தது. சுமார் 15000 பிள்ளைகள் கூடினர்.

இவ்வூரில் மழையென்பது கொஞ்சம்கூடகிடையாது. ஜனங்கள் மிகவும் பரிதபிக்கின்றனர். வருணனுக்குக் கருணைபிறக்காவிடின், ஜனங்களுக்கு அதிக சிரமம்உண்டாகும்.

இவ்வூரிலும் ஜுரம் (Influenza) ஜாஸ்தியாகயிருக்கிறது.

S. காமேஸ்வரன்,
1883 சந்தைப்பேட்டை,
புதுக்கோட்டை.

மோர்ப்புல்.

இதனை மோர்ப்புல் என்றும், சம்பாரப்புல் என்றும் சொல்வதுண்டு. ஏனெனில், இப்புல்லை மோரில் கரைத்துவிட்டால், எலிமிச்சம்பழம் கரைத்ததுபோல் மோரும் நல்ல மணம் வீசும். இந்தப் புல் கரைத்த மோரைச் சாப்பிடுவதனால் வாயு, பித்தம் முதலிய வியாதிகளுக்கு மருந்தாகவும் இருக்குமென்று தகுந்த வைத்தியர் சொல்லுகின்றனர். இப்புல்லிலிருந்து இறக்கப்பெறும் தைலமே மிகச் சிறந்தது என்று துருக்கி, ஈஜிப்ட், ஐரோப்பா முதலிய நாட்டார் எண்ணியிருக்கின்றனர். ஆனாலும் அங்கும் கூட இத்தைலம் இறக்குந் தொழிலை விசேஷமாகக் கையாடிவருவதாகவும் தெரியவில்லை. காட்டும் பொருள்களின் நிபுணரான மிஸ்டர் ஆர். எஸ். பியர்ஸன் என்பவர் இப்புல்லின் குணங்களைப்பற்றியும் பிரயோஜனங்களைப்பற்றியும் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். கவர்ன்மெண்டாரால் அது வெளியாக்கப் பெற்றிருக்கிறது. இந்தியாவிலே பம்பாய், மத்தியமாகாணம், சென்னை

முதலிய இடங்களில் இது ஏராளமாகப் பயிராகிறதாக அறியப்படு கிறது. சென்னை மாகாணத்திலே வாணியம்பாடி முதலிய இரண்டொரு இடங்களில் இது பயிர் செய்யப்படுவதாகவும் தெரிகின்றது.

இப்புல்லிலிருந்து இறக்கப்பெறும் தைலத்துக்கு ரோஷா தைலமென்று பெயர். இத்தைலம் இருவகைப்படும். முடக்குவாதத்திற்கு இந்தத்தைலம் மிகவும் உபயோககரமாக இருக்கின்றது. தவிர ஸோப்புகளுக்கு வாசனையூட்டுவதற்காகவும் உபயோகப்படுகின்றது. மூளையைக் குளிரச்செய்து தலைவலியைப் போக்குவதற்கும் இது அனுகூலமாக இருக்கிறது. உடலின் தோலைப்பற்றிய வியாதிகளுக்கும் தலையில் தோன்றும் பொடுகு முதலியவைகளுக்கும் இது நல்ல மருந்தாக இருக்கின்றது. இவ்வாறு பலவிதமாக அத்தைலம் உபயோகப்படுவதுடன், ரோஜா அத்தர்களில் கலக்கவும் இத்தைலத்தை இந்தியாவில் கையாண்டுவருகிறார்கள். இந்தியாவிலே கிடைக்கும் ரோஷாத்தைலமானது அத்துணை சுத்தமானதாகக் கொள்ள இடமில்லை. ஏனென்றால், அதில் கடலைநெய் முதலியன கலந்துவிடுகின்றார்களென்று தெரிகின்றது. அவ்விதம் கிடைக்கக்கூடிய தைலத்தைச் சுத்தமாகும்படி நன்றாக வடிகட்டிவிட்டால் தைலத்தில் மிகுந்த பரிமளமிருக்கும்.

பலவிதமான பரிமளத்தைலங்களைத் தயாரிப்பதற்கு மூலச்சரக்காக மேற்படி ரோஷாதைலத்தை ஐரோப்பிய கம்பெனிகள் தருவிப்பதுடன் சோப்புகளுக்கு வாசனையேற்றுவதற்காக ஸோப்புசெய்யும் ஸோப்புக்கம்பெனிகளும் இத்தைலத்தைத் தருவிக்கின்றன.

ஈஜிப்ட், அரேபியா முதலிய நாடுகளிலே இத்தைலமானது வாஸனைக்காகவே உபயோகப்பட்டுவருகின்றது. துருக்கியிலோ அத்தர்களுடன் கலந்திடுவதற்கென்றே இந்தியாவிலிருந்து பெறுகின்றார்கள். இத்தைலத் தொழிலானது இந்தியாவிலே இன்று நேற்று அல்லாமல் பல நூற்றாண்டுகளாகக் கையாண்டுவருகின்றார்களென்று தெரியவருகின்றது. ஈஜிப்ட், பிரான்ஸ், ஜர்மனி, யுனைடெட் ஸ்டேட்ஸ் இங்கிலாந்து, அரேபியா, துருக்கி, சீனு முதலிய தேசங்கள் இந்தியா

விலிருந்தே இத்தைலத்தைப்பெறுவதால் இந்தக் கைத்தொழிலை விருத்திசெய்யவேண்டுவது இந்தியர்களின் அவசியமான கடமைகளில் ஒன்றாகும். எவ்வளவுக்கெவ்வளவு இந்தியாவில் இத்தைலம் பரவிவருகின்றதோ ஆயத்தப்படுத்தப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஏற்றுமதியும் செய்யப்படலாகும். ஆகவே, இப்புல்லை ஏராளமாக இந்தியாவில் பயிரிட்டு இதிலிருந்து தைலத்தை அதிகமாக இறக்குவது அவசியமென்று நன்கு புலப்படுகின்றது. உத்தேசமாகக் கணக்கிட்டுப் பார்த்தால், வருஷந்தோறும் இந்தியாவில் ஒன்றரை லக்ஷம் ராத்தல் எடையுள்ள தைலம் தயாராகின்றது. இதன் விலை சுமார் ஏழரைலக்ஷ ரூபாயாகின்றது. இத்தகைய தைலத்தை இறக்குவதற்கு இந்தியாவிலே இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்படவில்லை என்று தெரிகின்றது. எத்தொழிற்கும் இயந்திரங்களை 'உபயோகித்தலே லாபகரமும் பலகரமுமானது. மேல்நாடுகளில் மிகவும் சொற்பமாகயிருக்கும் கைத்தொழிலிலுங்கூட இயந்திரங்களே உபயோகப்பட்டுவருவதால், சரக்குகளும் நாணயமாகவும் லாபகரமாகவும் முடிகின்றன இதனாலே இயந்திரங்களின் தொழிலும் பெருகி வருவதற்கேற்ற் காரணமாகும். மேலே கண்ட ரோஷாதைலக் கைத்தொழிலை விருத்திசெய்வதற்கு வேண்டியயுக்திகளை மிஸ்டர் பியர்ஸன் அநுபவவாயிலாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அதனை ஈங்குச் சுருக்கமாகச் சொல்லுவோம்.

“நன்றாக வெயிலில் உலர்ந்த புலலிலிருந்து இயந்திர ஸாதனத்தைக்கொண்டு தைலம் இறக்கினால், இப்போது கிடைப்பதைவிட 100-க்கு 20-பங்கு அதிகத் தைலம் கிடைக்கின்றது. வெயிலில் உலராத புல்லிலிருந்து இயந்திர ஸாதனத்தினால் தைலம் இறக்கினால் 100-க்கு 100-பங்கு அதிகமான தைலத்தை அடையலாகும். ஆகவே கூடியவரையில் புல்லைக் காய்ந்துபோகவிடாமல் கொண்டுவந்து, இயந்திரத்தின் உதவியைக்கொண்டு தைலத்தை இறக்கினால் 100-க்கு 50-பங்குத் தைலம் கிடைக்குமென்று திட்டமாகச் சொல்லலாம். இயந்திர ஸாதனத்தினால் தைலத்தை இறச்குவதாயின், செலவு குறைவதுடன் விரைவிலும் தைலத்தை இறக்கிக்கொள்ளலாகும். வடஇந்தியாவிலே,

சிகல்தா என்னுமிடத்தில் இயந்திர ஸாதனத்தைக்கொண்டே பரீக்ஷார்த்தமாகத் தைலம் இறக்கியதைப் பலர் வந்து பார்த்து அதனால் உண்டாகும் பலனை நன்கு அறிந்துகொண்டனர். புதுமாதிரியான முறையில் தைலம் இறக்குவதன் பலனை அவர்கள் நன்கு உணர்ந்துகொண்டார்களாயினும், அத்தைலத்தை இறக்குவதற்கான இயந்திரத்தை கவர்ன்மெண்டார் வாடகைக்குக் கொடுத்து உதவினாலொழிய ஜனங்கள் இக்கைத்தொழிலில் இறங்கி முயலுவார்களா என்பது யோசனையாக இருக்கின்றது."

மேலே கண்டவாறு அவரது அபிப்பிராயத்தை அனைவரும் கவனித்து யோசிப்பார்களென்று நினைக்கிறோம், இப்புல் ஏராளமாக விளையும் முக்கியமான இடங்களிலே கவர்ன்மெண்டார் இரண்டொரு இயந்திரங்களை நியமித்து, அந்த இயந்திரத்தினால் தைலம் இறக்குவதன் பலனைச் சுட்டிக்காட்டி, அந்த இயந்திரத்தை ஜனங்களுக்கு வாடகைக்குக் கொடுத்து, அத்தொழிலை விருத்திசெய்ய முயலுவது அவசியமென்று சொல்வோம். எப்படியென்றால், மேனாடுகளில் ரோஷாத்தைலத்திற்கு இருக்கும் விலைக்கு ஏற்றபடி இந்தியாவில் தொழிலும் விருத்தியாகும். மேலும், அத்தொழிலிலிருந்து கவர்ன்மெண்டாருக்குக் கிடைக்கும் வருமானமும் அதிகமாகும். இப்போது இந்தியாவெங்கும் தயாராகும் தைலத்தின் மதிப்பு ஏழரைலக்ஷம் ரூபாயாகுமென்று முன்னமே குறித்திருக்கிறோம். இவ்விஷயங்களையெல்லாம் ஜனங்கள் மட்டுமேயல்லாமல் கவர்ண்மெண்டாரும் சிரத்தையுடன் கவனித்து இத்தொழிலை விருத்திசெய்வதில் ஊக்கங்காட்டுவார்களென்று நம்புகின்றோம்.

சு-மி.

காங்கிரஸ் மஹாஸபையின் லக்ஷியங்களைப் பிரசுரிக்கும் காங்கிரஸ் கமிட்டியாரின் முதல் அறிக்கை.

லக்னௌ (லட்சுமணபுரி) என்ற பட்டணத்தில் ஆயிரக்கணக்கான நமது ஜனங்கள் ஒரு பெரிய மண்டபத்தில் கூடினார்கள். அவர்களில் ஏழைகளும் அநேகர் இருந்தனர்; பணக்காரர்களும் அநேகர் இருந்தனர். ஹிந்துக்கள் இருந்தனர். முஸல்மான்கள் இருந்தனர். பார்ஸிகள் இருந்தனர். கிறிஸ்தவர்கள் இருந்தனர். சீக்கியர்கள் இருந்தனர். ஜயினர்கள் இருந்தனர். எல்லோருங்கூடி முக்கியமான பல யோசனைகளைச் செய்தார்கள். " இத்தேசத்தில் உயர்ந்த கல்வி பரவவேண்டும்; இத்தேசத்தின் வியாபாரம் இன்னும் நன்றாக நடக்க வேண்டும்; இத்தேசத்தின் கைத்தொழில்கள் செழிக்கவேண்டும். பூமியை உழுது சாகுபடிசெய்யும் ஜனங்களுக்கு இன்னும் நல்ல ஆகாரம் கிடைக்கவேண்டும். குடியிருக்க நல்ல வீடுகள் உண்டாகவேண்டும்; பொதுவாக எல்லாருடைய சௌக்கியமும் அதிகமாகப் பெருக வேண்டும்; இந்த உத்தேசங்களெல்லாம் பலிக்கிறதற்கு வேண்டிய காரியங்களைத் தாங்கள் செய்யவேண்டும். " என்று மேலே சொல்லப் பெற்ற பலவகை ஜனங்களும் தீர்மானித்துக்கொண்டார்கள்.

இந்தியாவினுடைய காரியங்களை இந்தியர்களே கவனித்து, தங்களுடைய காரியங்களை நடத்திவைக்கத் தங்களுள்ளிருந்து இன்னும் அநேகரைத் தாங்களே தெரிந்து நியமித்துக்கொண்டால் தங்கள் தேசத்தின் யோகக்ஷேமம் இப்போழ்திருப்பதைவிட நன்றாக நடக்குமென அவர்கள் அபிப்பிராயங்கொண்டார்கள். அடுத்த வீட்டுக்காரன் நம்முடைய வீட்டுக்காரியங்களைப் பார்த்துக்கொள்வதை விட நாமே பார்த்துக்கொண்டால், வீட்டுக்காரியங்கள் நன்றாக நடக்குமல்லவா? ஆகையினால் காங்கிரஸ் மஹாஸபையும் முஸ்லிம்களுடைய மஹாஸபையும் ஒரு திட்ட ஏற்பாட்டைத் தயாரித்தார்கள். அஃது என்ன

வென்றால், "ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள ஜனங்களுஞ்சேர்ந்து மகா புத்திமான்களென்றும் மகா நல்லவர்களென்றும் தங்களுக்குத் தோன்றும் சிலரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள் சேர்ந்து ராஜ்யபாரத்தை நடத்தும் வழிகளைத் திருத்தவேண்டும். இதுதான் லக்நௌ நகரில் கூடிய ஜனங்கள் செய்த ஆலோசனை.

சில சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நாம் நடக்கிறோம். சில வரிகளைச் செலுத்திக்கொண்டு வருகிறோம். இந்தச் சட்டங்களையும் வரிகளையும் தீர்மானப்படுத்தி விதிப்பதற்கென்று சென்னையில் ஒரு சட்டசபை இருக்கிறது. சென்னைமாகாணத்திலோ 400-லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். ஆயினும் ஜில்லா போர்டுகளிலும் தாலூகா போர்டுகளிலும் முனிஸிபாலிடிகளிலுமுள்ள மெம்பர்களில் உத்தியோகஸ்தர் அல்லாதவர்கள் மேற்சொன்ன சட்டசபைக்கு ஒன்பது பெயரையே தெரிந்தெடுக்கிறார்கள். ஜமீந்தார்களிலும் மிராசுதார்களிலுமாகச் சேர்ந்து நான்கு பெயர்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். சென்னைநகர் முனிஸிபாலிடியிலும் சென்னைச் சர்வகலாசாலையிலுமாக ஒவ்வொருவரே தெரிந்தெடுக்கப்பெறுகின்றனர்.

முகம்மதியர் இருவரைத் தெரிந்தெடுக்கப்பெறுகின்றார்கள்; சென்னை ஆங்கில வியாபாரிகளின் சங்கமும், சென்னைக் கடைக்காரர்களின் சங்கமும், காபி, தேயிலை முதலிய பயிரிடுவோர்களின் சங்கமும் ஒவ்வொருவரைத் தெரிந்தெடுக்கின்றன. மேற்சொன்னவர்கள் எல்லோரும் சேர்ந்து இருபத்தொருபெயராகிறார்கள். இவர்களைத் தவிர இருபத்தேழுபெயர்களைக் கவர்ண்மெண்டார் நியமிக்கிறார்கள். மாகாணத்திற்குத் தகுந்த கவர்னரும் சபை மெம்பர்களில் ஒருவர் எனவே கவர்ண்மெண்ட் தரப்பில் இருபத்தெட்டு பெயர்களாகிறார்கள். ஆகையினால் சட்டசபையில் ஜனங்களின் பிரதிநிதிகள் செய்யக்கூடியது கொஞ்சமேயாகும். மேலே சொல்லப்பெற்ற இருபத்தொருபெயர்களில் பதினாறு அல்லது பதினேழு பெயர்களே இந்தியர்களாகவும் நான்கு அல்லது ஐந்துபெயர்கள் ஆங்கிலர்களாகவும் இருப்பதனால்

ஜனங்களின் பிரதிநிதிகள் எதையும் சாதித்துவிடக்கூடியவர்களாகவுமில்லை. காடுகளில் உங்களுடைய மாடுகள் மேயும்படியாகவும், வீடு கட்டிக்கொள்ளவும் அடுப்பெரிக்கவும் அவைகளிலிருந்து மரமும் விறகும் உங்களுக்குக் கிடைக்கும்படியாகவும் வயல்களுக்கு எருப்போடப் பச்சைத்தழைகள் கிடைக்கும்படியாகவும், உங்களுடைய ஆடுமாடுகள் தவறிக் காடுகளுக்குள் புகுந்துவிட்டால் அதற்காக உங்களுக்குத் தண்டனை ஏற்படாதபடியாகவும், இவ்விதம் பல வழிகளிலும் காட்டுச் சட்டங்களைத் திருத்த உங்களுடைய பிரதிநிதிகளில் ஒருவர் சிரமமெடுத்துக்கொள்ளக்கூடும். அல்லது நீர்ப்பாய்ச்சும் வேலை உங்களுடைய அதிகாரத்துக்குட்பட்டு நடக்கும்படியாகச் செய்ய இன்னொருவர் பிரயாசையெடுத்துக்கொள்ளக்கூடும்; நிலவரி அதிகமாகாமல் செய்ய வேறொருவர் முயற்சியெடுத்துக்கொள்ளக்கூடும். ஆனால் உங்களுடைய பிரதிநிதிகள் இப்போது தொகையில் சொற்பமாக இருப்பதால், அவர்களுடைய பிரயாசை மிகுதியும் பலிக்கிறதில்லை.

ஆகையினால் காங்கிரஸ் மஹாஸபையும் முஸ்லிம் மஹாஸபையும் சேர்ந்து சம்மதித்துச்செய்த தீர்மானமென்னவென்றால், இந்த மாகாண சட்ட சபையில் 125-பெயர்கள் இருக்கவேண்டும், அவர்களில் 100-பெயர்களை ஜனங்களில் பெரும்பாலோர் சேர்ந்து தெரிந்தெடுக்கவேண்டும். அந்த 100-பெயர்களில் 15-பெயர்கள் முகம்மதியர்களால் தெரிந்தெடுக்கப்பெறவேண்டும். கவர்ன்மெண்டார் 25-பெயர்களை மட்டில் நியமிக்கவேண்டும். இவ்விதம் சட்டசபை அமைக்கப்பெற்றால் அது உங்களுடைய உண்மையான பிரதிநிதிகள் அடங்கியதாகும். உங்களுடைய வேலையை யார் நன்றாகச் செய்வார்களோ அவர்களையே நீங்கள் தெரிந்தெடுக்கலாம். எந்த மதத்தைச் சேர்ந்தவரையும் அல்லது எந்த ஜாதியைச் சேர்ந்தவரையும் நீங்கள் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம். மலையாளத்தார் நம்பூத்ரிப் பிராமணனையோ அல்லது நாயரையோ அல்லது தீயனையோ இஷ்டப்படியே தெரிந்தெடுத்துக்கொள்ளலாம். உங்களுடைய சொந்த ஜனங்களில் எவரையும்விட ஒரு ஆங்கிலர் சிலாக்கியமென்று நீங்கள் தெரிந்துகொண்டால் அவரையும் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம்.

மேலே சொன்னபடி உங்களால் தெரிந்தெடுக்கப்பெற்ற 100-பெயர்களும் சர்க்காரில் நியமனம் செய்யப்பெறும் 25-பெயர்களும் சேர்ந்து சட்டசபையாகி, இந்த மாகாணத்தின் காரியாம்சங்களையெல்லாம் ஐந்துவருஷகாலங்கள் நடத்திக்கொண்டுவரலாகும்; ஐந்து வருஷகாலங்கள் சென்றவுடன், அம்மனிதர்களையேயோ அல்லது புதிதாக வேண்டுமென்று உங்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்களையோ நியமித்துக்கொள்ளலாகும். இந்த மாகாணத்தில் ராஜாங்கத்திற்கு என்ன செலவுகள் நடக்கவேண்டுமென்பதை அவர்கள் தீர்மானிப்பார்கள். செலவுக்கு வேண்டிய வரையில் மாத்திரம் தீர்வை விதித்துக்கொள்வார்கள். அவர்களே உங்களுக்கு ஜவாப்தாரிகளாக இருப்பார்கள். அவர் எவராவது சரியான வேலைசெய்யவில்லையானால் அவரவருக்கேற்பட்ட ஐந்துவருஷகாலம் முடிந்ததும், வேறு ஒருவரை நீங்கள் தெரிந்தெடுத்துக்கொள்ளலாகும்.

இந்தச் சட்டசபையார் செய்யும் சட்டங்களையநுசரித்து, ராஜ்ய நிர்வாகத்தை நடத்த மாக்ஷிமைதங்கிய கவர்னருக்கு நிர்வாகசபை என்று ஒரு சபையிருக்கிறது. அதில் பகுதிப்பெயர்கட்குக் குறையாமல் சட்டசபையிலுள்ள உங்களுடைய பிரதிநிதிகளே தெரிந்து எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி அவர்களால் தெரிந்து எடுக்கப்பெறுகிறவர்கள் சட்டசபையிலுள்ள உங்களுடைய மனுஷ்யர்களாக இருத்தல்வேண்டும். மற்றவர்களை மாட்சிமைதங்கிய கவர்னர் நியமித்தல் வேண்டும். ஆனால் விசேஷ காரணமிருந்தாலொழிய, இந்தியன் ஸிவில் ஸர்விஸ் என்ற அதிகாரிவர்க்கத்தைச் சேர்ந்த எவரையும் கவர்னர் நியமிக்கக்கூடாது. ஏனென்றால், ஜனங்களுக்கு ஜவாப்தாரியில்லாமல் நித்தியப்படி நிர்வாகத்தை நடத்தும் அதிகாரிகள் பெரிய ராஜ்யதந்திர யோசனைகளைச் செய்து நிறைவேற்றிவைக்கக்கூடாதவர்களாயிருக்கின்றார்களென்பது அநுபவமாக இருக்கின்றது. இங்கிலாந்தில் ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் எவரும் பார்லிமெண்ட் மெம்பராகக்கூட ஜனங்களால் தேர்ந்து எடுக்கப்படக்கூடாது.

சட்டசபையில் கவர்னர் உட்காரக்கூடாது, ஏனென்றால் அவர் ஒருகட்சியிலும் சேராதவராக இருக்கவேண்டும். ஜனங்களுடைய

பிரதிநிதிகள் செய்யும் வாதங்களில் குறுக்கிடாதவராகவும் இருத்தல் வேண்டும். சட்டசபை ஒரு தீர்மானத்தைச் செய்து, நிர்வாஹஸபை அதனை ஒப்புக்கொள்ளாவிடின், அதனை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவராமல், ஒருவருஷகாலமளவும் கவர்ணர் அவர்கள் நிறுத்தி வைக்கலாம். ஆனால், அதே தீர்மானத்தை ஒருவருஷகாலங்கழித்துச் சட்டசபை மறுபடியும் செய்யுமானால், நிர்வாஹஸபையானது அதை நிறைவேற்றிவைக்கவேண்டியது தான். திரவியஸம்பந்தமான மசோதாக்கள் சட்டசபையில் பிரஸ்தாபத்துக்கு வராதபடியாகக் கவர்ணர் அவைகளை நிறுத்திவிடக்கூடாது. ஜனங்களின் இஷ்டத்துக்கு விரோதமாக எந்தத் தீர்மானத்தையாவது சட்டத்தையாவது நிர்வாஹஸபை செய்ய விரும்புமானால், அதை அங்கீகரிக்காமல் தள்ளிவிடும் அதிகாரம் சட்டசபை மெம்பர்களுக்கு இருக்கும்.

இந்தமாதிரி உங்களால் தெரிந்தெடுக்கப்பெற்ற சட்டசபை உங்களுக்குக் கிடைத்துவிட்டால், அதைக்கொண்டு உங்களுடைய நிலைமையை நீங்களே விருத்திசெய்துகொள்ளலாம். நிலவரியை எப்படிப் பைசல்செய்வது சிலாக்கியமென்று உங்களுக்குத் தோன்றுமோ அப்படிப் பைசல்செய்யலாம். அப்போது நிலத்தைப் பண்படுத்தி அதன் விளைவை அதிகமாக்கின பிரயோஜனம்போல நமக்கே ஊர்ஜிதப்படுத்திக்கொள்ளலாம். காட்டுச்சட்டங்களைத் திருத்தி யவைகளின் நிர்ப்பந்தத்தைக் குறைக்கலாகும். காடுகளைக் கிராமப் பஞ்சாயத்துக்களே நிர்வஹிக்கும்படியும் செய்துவிடலாம். உங்களுடைய முன்னோர்கள் செய்துவந்ததுபோல உங்களுடைய கிராமங்களில் பஞ்சாயத்தார்களை நீங்களே தேர்ந்து எடுக்கலாம். அந்தப் பஞ்சாயத்தார்கள் கிராமகாரியங்களை முழுதும் கவனித்துக்கொள்ளலாம். அப்போது கிராமத் தலையாரி, கணக்கன் முதலிய உத்தியோகஸ்தர்கள் உங்களுக் குட்பட்டவர்களாயிருப்பார்கள். நீங்கள் அவர்கட் குட்பட்டவர்களாக இருக்க வேண்டாம். தாசில்தார், கலெக்டர் முதலானவர்களுக்கு அவர்கள் ஜவாப்தாரியாக இருப்பதுடன், உங்களுக்கும் ஜவாப்தாரியாயிருப்பார்கள். வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சும் வேலையையும், சுகாதாரச் சீர்திருத்த வேலையையும், குளங்கள், வாய்க்கால்கள் மராமத்து வேலையை

யும், சாலைகள், கிராமப் பள்ளிக்கூடங்கள் செப்பனிடும் வேலையையும் வாசகசாலை, புஸ்தகசாலை, வைத்தியசாலை இவற்றின் பொறுப்பேற்கும் வேலையையும் கிராமப் பஞ்சாயத்தாரே நிர்வஹித்துக்கொண்டு, வழக்குகளையும் தீர்த்துவைத்து, ஜனங்கள் சௌக்கியமாகவும் செழிப்பாகவும் இருக்கும்படி ஏற்பாடுசெய்வார்கள்.

கிராம விஸ்தீரணத்துக்கு வெளியில் நடுத்தரப்படிப்பு, உயர்தரப் படிப்பு, தொழிற்படிப்பு, இயந்திரப்படிப்பு முதலிய பலவகைப்பட்ட படிப்புகளைச் சொல்லிவைக்கப் பள்ளிக்கூடங்களையும், ஆடு மாடு குதிரைகளை விருத்திசெய்யும் மிருகசாலைகளையும், சிலாக்கியமான விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கும்படியாக விதைக்களஞ்சியங்களையும் சிறு ரயில்பாதைகளையும், சாலைகளையும், சாவடிகளையும் சம்ரட்சித்து மேற்பார்வைசெய்வதற்காக ஆங்காங்கு வெவ்வேறு ஸ்தல சபைகள் அமைக்கப்பெற்று அவைகளின் மெம்பர்களை ஜனங்கள் தெரிந்தெடுக்கும்படியும் சட்டசபை விதிகளை ஏற்படுத்தலாகும்.

இவ்விதமான ஏற்பாட்டுக்குத்தான் சுய ஆட்சி முறை என்று பெயர் அது அநுஷ்டானத்துக்கு வந்துவிட்டால், நமது தேசம் இன்னும் அதிக வளமும் பணமும் பெற்ற தேசமாக ஆகிவிடும். ஜனங்களுடைய க்ஷேமம் இன்னும் அதிகரிக்கும். நமது இந்திய ஜாதியார் பிற்காலத்தில் மகத்தான தசையை அடைய வழி ஏற்பட்டுவிடும்.

மாகாணக் கவர்ண்மெண்ட் விஷயமாகக் காங்கிரஸ் ஸபையும் முஸ்லிம் ஸபையும் தீர்மானம்செய்த யோசனையை இதுவரையில் சொல்லிவந்தோம். தேசம் முழுமையும் ஆளும் விஷயமாகவும் அவர்கள் யோசனையைச்செய்து ஒரு தீர்மானத்தைச்செய்து இருக்கிறார்கள். ஆனால் நமது மாகாண ஆளுகையைப்பற்றி மாத்திரமே இங்கு நாம் பிரஸ்தாபித்தோம்.

(காங்கிரஸ் மஹாஸபை ப்ரசார கமிட்டியின் உத்தரவுப்படி.)

ஜி. ஏ. நடேசன்.

கமிட்டியின் காரியதரிசி.

ஸ்ரீ:

பெரியாரைத் துணைக்கோடல்.

———:(o):(*):(o):———

இது மும்மொழியாலாகியதோர் தொடர்மொழி. பெரியோராவார் "செயற்கரியன வாகிய செயல்களைச் செய்கின்றவர்கள். செயற்கரியவாவன இயம நியம முதலாகிய எண்வகை யோகவுறுப்புக்கள்" என்பர் மூதறிவோர்

"பொய்கொலைகளவே காமம்பொருணசை
இவ்வகையைந்தும் அடக்கிய தியமம்
பெற்றதற்குவத்தல் பிழம்புநனிவெறுத்தல்
கற்பனகற்றல் கழிகடுந்தூய்மை
பூசனைப்பெரும்பயம் ஆசாற்களித்தலொடு
பயனுடைமரபி னியமம்ஐந்தே"

என ஆன்றோர் இயமநியம முதலியவற்றிற் கிலக்கணங்கூறுமவை கொண்டு நாம் பெரியோரை ஒருவாறு தெள்ளிதாகவுணர்ந்துகொள்ளஇயலும். ஆங்ஙனம் உணருமிடத்து, பொய்சொல்லுதல், பிறவுயிரைக் கொலைபுரிதல், களவுசெய்தல், அன்னியர்மனைவியர்மாட்டுக்காமம்வைத்தல், பொருளில்அதிகவிருப்பங்கொள்ளல், சினங்கொள்ளல், ஆகிய தீக்குணங்களைவிடுத்து, பெற்றது கொண்டு பொறுமையடைதல், அறிவின்மையாற் பிறர்செய்த குற்றங்களைப் பொருட்படுத்தாதிருத்தல், ஆஸ்திக ஆசாரங்களைப்போதித்தல், கற்கவேண்டுவனவாய நூல்களைக்கற்றல், ஈசனைமறவாதிருத்தல், உயிர்கண்மாட்டு அன்பும் அருளும்உடையராயிருத்தல், முதலிய இன்னோரன்ன நற்குணங்களை உடையராயிருப்போர் பெரியோர் எனப் பொதுவாக அமைத்துக்கொள்ளல் சாலப்பொருத்தமுடைத்தாம். இன்னும் பெரியோரென்பது இரட்டுறமொழிதலென்னு முத்தியால் ஆற்றலாற் பெரியோராய வேந்தர்மேலும், தவத்தாற் பெரியாராய முனிவர்மேலும் நிற்கும். இனி ஞானவிருத்தர், சீலவிருத்தர்,

வயோவிருத்தர் என வேறு மூன்றுவகையாலும் விரித்தல் தகும். எங்ஙனம் எத்துணைப்பிரிவுகளாகப் பிரிக்கத்தகுமாயினும் "பேர்றி வினையுடையார் பெரியார்" என்பதே ஆசிரியர் பரிமேலழகியார் திருக்குறட் பெரியாரைத் துணைக்கோடலென்னும் அதிகாரத்து முதற்கண் எழுதியுள்ளதாகும்.

மானிடராயுதித்தார் இம்மை மறுமையின்பங்களை அடையவேண்டுவது ஆவசியகம். ஆவசியகமாயுள்ள அவ்விரண்டனையும் அடையவொட்டாது இடைநின்றுதடுப்பன ஊழ்வயத்தான்வருந் துன்பங்கள். அத்துன்பங்களை முக்காலத்திலும் வாராவண்ணம் நீக்கி, எக்காலத்திலும் இன்பம் அடையும்வண்ணம் செய்பவல்லவர் இப்பெரியோர்களே. ஆதலின் அவர் துணை முக்கியமாக யாவர்க்கும் வேண்டற்பாலதாம். ஆசிரியர் திருவள்ளுவநாயனாரும் "உற்ற நோய்நீக்கி உறாஅமை முற்காக்கும், பெற்றியார்ப்பேணிக்கொளல்" என்றார்.

ஸ்ரீ ராமபிரானிடத்தில் நாளைநினக்கு முடிசூட்டுநாள் என அறிவித்த வசிட்டமுனிவர் பின்னர்ச் சிலஒழுக்கவகைகளையும் அறிவுறுத்தத்தொடங்கி முதன்முதல்

"கரியமாலினுங் கண்ணுதலானினும்
உரியதாமரை மேலுறைவானினும்
விரியும்பூதமோரைந்தினும்மெய்யினும்
பெரியரந்தணர் பேணுதியுள்ளத்தால்

அந்தணாளர் முனியவும்ஆங்கவர்
சிந்தையாலருள் செய்யவுந்தேவரில்
நொந்துளாரையும் நொய்துயர்ந்தாரையும்
மைந்தவெண்ண வரம்புமுண்டாங்கொலோ

அனையாராதலின் ஐயவிவ்வெய்யதீ
வினையினீங்கிய மேலவர்தாளிணை

புனையுஞ்சென்னியை யாய்புகழ்ந்தேத்துதி
இனியகூறினின் றேயினசெய்தியால்" என்று

பெரியோர் பெருமையையும் அவரைப்போற்றுதலான் அடையும்பயன் பெரிதென்பதனையும் அவரிடத்துத் தவறுசெய்தலாற் பெரிதும் ஏதம் வருமென்பதனையும், ஆதலாற்றவறுசெய்யாது வழிபாடு செய்தொழுகல் வேண்டும் என்பதனையும் நன்குகூறியுள்ளார். நகுடனென்பான் இந்திரன்பதத்தையடைந்து செல்கின்றகாலத்துத் தானடைந்த சந்தோஷமிகுதியால் அகத்தியருக்குக் கோபமுண்டாக்கத்தக்க பிழையைச்செய்துவிட அதனாற் சாபத்தையடைந்து அப்பதத்தை இடையேயிழந்தான். என்பதும் இந்திரன் கௌதமமுனிவரிடத்துப் பிழைசெய்து அதனாற் பெருஞ்சாபத்தை யெய்தினன் என்பதும், மற்றும் அவன் தூர்வாசமுனிவரிடத்துப் பிழைசெய்து அதனாற்றன் செல்வமுழுமையும் ஒருகாலத்தில் இழந்தான் என்பதும் யாவரும் அறிந்தவிஷயம்.

இவற்றுள் முன்னைய இரண்டுவிஷயங்களை

"ஐந்தவித்தானாற்றல் அகல்விசும்புளார்கோமான்
இந்திரனேசாலுங்கரி"

"வந்தியகொள்கையார் சீறினிடைமுறிந்து
வேந்தனும்வேந்துகெடும்" எனத் திருவள்ளுவநாயனாரும் இரண்டுதிருக்குறள்களிற் குறித்திருக்கின்றார்.

பெரியோரிடத்து வழிபாடுசெய்து அதனாற் பெரும்பயனை அடைந்தமைக்கு இராமாயணத்திலுள்ள சிலவிருத்தாந்தங்களே நன்குசான்றும். தசரதசக்கிரவர்த்தி ஓர்நாள் வசிட்டமுனிவரைத் தொழுது எனக்குத் தாயும் நீயே! தந்தையும் நீயே! கடவுளும் நீயே! பிறவும் நீயே! எனப் பலவாறுதுதித்துத் தனக்குப் புத்திரப்பேறில்லாமையை

"அறுபதி னாயிரம் ஆண்டும் ஆண்டுற
உறுபகை யொடுக்கியிவ் வுலகை யோம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
மறுகுறு மென்பதோர் மறுக்க முண்டரோ"

எனப் பிறிதோராற்றாற்கூறி முறையிட்டார். பின்னர் அம்முனிவர்மொழிப்படி கலைக்கோட்டுமுனிவரை யழைத்துவந்து வழிபாடுகளைச்செய்து புத்திரப்பேற்றையளிக்கும்வண்ணம் வேண்டினார். முனிவர் அருள்கூர்ந்து புத்திர காமேட்டியாகத்தைச்செய்து புத்திரப்பேற்றையளித்தார் என்பது ஒர்வரலாறு. இவ்வரலாற்றில் வசிட்டமுனிவராகிய பெரியாரைத் துணையாகப் பெற்றிருந்தமையே தசரதசக்கிரவர்த்திக்கு "நான்மறைக், கொழுந்து மேற்படர்தரக் கொள்கொம்பாயினான்" என்று புகழ்ப்பெற்ற கலைக்கோட்டுமுனிவராகிய மற்றுமோர் பெரியாரது துணையையும்பெற்றுச் சற்புத்திரப் பேற்றை அடைதற்குக் காரணமாயிற்று.

இன்னும் உரோமதன் என்னும் அரசன் ஒருவன் இருந்ததாகவும் அவன்நாட்டில் நெடுங்காலம் மழையின்றிப் பொய்த்துப்போனதாகவும் பற்பலமுனிச்சிரேட்டர்களையழைத்து மிகப்பெரியதானங்களையெல்லாம்கொடுத்ததாகவும் கொடுத்தபின்னரும் மழையின்றிப் போனதாகவும் கலைக்கோட்டுமுனிவர் வரின் மழை பெய்யுமென அறிவுடையோர் சொல்லியதாகவும் அவ்வாறே அழைத்துவந்ததும் சோனைமாரி சொரியப்பெற்று அவனுக்குப் பெருவளமெய்தியதாகவும் வசிட்டமுனிவர் கலைக்கோட்டுமுனிவரை யழைத்துவருதற்கு உபாயங்கூறியவழிக் கூறப்பெற்றிருக்கிறது. இதனை அடியில் வரும் பாடலானும் உணர்க.

"அன்னவன்றன் புரந்தளிக்கு நன்னாட்டி னெடுங்காலம் அளவதாக
மின்னியெழு முகிலின்றி வெந்துயராம் பெருகுதலும் வேதனன்னூல்
மன்னுமுனி வரையழைத்து மாதானம் கொடுக்கினும்வான் வழங்காதாகப்
பின்னுமுனி வார்க்கேட்பக் கலைக்கோட்டு முனிவரின்வான் பிலிற்றும்
(என்றார்"

இதனாற் பெரியோர்பெருமை இத்தன்மைத்தென்பதும் அவரைத் துணையாகக்கொண்டமையால் அடையுந்நன்மை இத்துணைய வென்பதும் அறியக்கிடக்கின்றது. வசிட்டமுனிவரிடத்துப் பிழைசெய்து சண்டாளத்துவத்தையடைந்த திரிசங்குவென்பான் பின்பு விசுவாமித்திரராகிய பெரியாரது துணையைக்கொண்டு அடைந்த பேற்றையுணரின் அது பெரியாரிடத்துப் பிழைசெய்தலான்வரும் ஏதத்திற்கும் அன்னாரைத்துணையாக் கொள்ளுதலானடையும் நன்மைக்கும் உதாரணமாம். இவற்றால் ஆற்றலாற் பெரியாரென ஒருவிதத்தாற் பெரியாரென்னும் பெயரையடைந்த அரசரும் தம்மிற் பெரியாராகிய தவத்தின்முதியாரது துணையைநாடியே அரிய பெரிய நன்மைகளையெல்லாம் அடைந்துளார் என்று தெரிகிறது.

ஆதலால் எவ்வாற்றானும் பெரியாரென்பதற்கேலாத நாம் பெரியாரது துணையைக்கொண்டே ஊழ்வயத்தான்வரும் துன்பங்களைக் கடிந்து இன்பங்களை அடைதல்வேண்டும்.

அங்ஙனம் இன்பங்களை அடைந்து உய்யும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள்பாலிப்பாராக.

எஸ். ஆழ்வார் ஐயங்கார்,

க. வி. கலாசாலை உதவியுபாத்தியாயர்,

கோனுபட்டு.

ஸ்ரீ:

" இன்ப்ளூயன்ஸா "

" பம்பாய் ஜ்வரம் அல்லது மாயாஜ்வரம் "

இதர நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதிசெய்யப்பெற்ற வியாதிகளில் இந்தக்கொடிய ஜ்வரத்தைப்போல் ஜீவவரிகளைப் பெற்றுப்போன வியாதி இருந்ததாகக் காணப்படவில்லை. இந்த வியாதி சில வாரங்களாக மிகவும் துக்கத்தை நாட்டுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. சில நகரங்களில் பிளேக் காலரா முதலிய கொடிய வியாதிகள் வந்து நுழைந்து தேசத்துக்கு அதிக நஷ்டத்தைக் கொடுத்திருக்கின்றனவாயினும், இந்த ஜ்வரத்தைப்போல விரைவும் விநாசமும் கொண்டு பாவி வந்ததாகச் சொல்லமுடியாமலிருந்தன. பம்பாய் நகரத்தில் ஒவ்வொரு நாளும் 1500 பெயரில் ஒருவரை இவ்வுலகிலிருந்து மறைத்து எடுத்துக்கொண்டுபோய்க் கொண்டிருக்கின்றது. இப்படிச் சென்ற இரண்டு மூன்று வாரங்களாக அட்டூழியஞ் செய்துகொண்டிருக்கின்றது' ஜனத்தொகையில் அதிகத்தை இது தின்று கொண்டிருக்கின்றது, இன்னும் கிராமங்களில், விசேஷமாக வைத்தியர்கள் அதிகமாகப் பிரவேசிக்கமுடியாமல் இருக்கும் இடங்களில் மரணத்தொகை அதிகப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. இந்த வியாதி புகுந்த இரண்டாவது அல்லது மூன்றுவது நாட்களில் வரும் மரணத்தொகையைக் கவனித்தால், பிளேக் காலராக்களில் நேர்ந்ததைக் காட்டிலும் அதிகங் காணப்பட்டிருப்பதை நன்றாக அறிந்துகொள்ளலாம்.

இந்த வியாதியினால் உண்டாகும் மரணபயத்தைக் கவனித்த யாருக்கும், " இந்த வியாதியானது ஸாதாரணமான ஜ்வரமாக இருந்துகொண்டே ஒருவைத்திய நிபுணராலாவது குறைக்கப்படாத வேகத்துடன் பாவிக்கொண்டு அநேகரைக் கொள்ளைகொள்ளக் கார

ண்மென்னவாகும்? மரணத்தொகையானது வியாதியின்பொருட்டுத் தானு அல்லது வேறு காரணங்களினுலா" என்ற கேள்விகள் பிறக்கக்கூடும். அவற்றுக்கு ஸமாதானம் அவசியம் ஆலோசித்துச் சொல்லவேண்டியதே ஆகும்.

இங்கிலாந்திலும் இந்தக்கொடிய வியாதி பரவினதானுலும், இத்தனைமரணங்களைக் கொடுத்ததில்லை. இந்த வியாதி வந்தவுடனே ஒவ்வொரு தொழிற்சாலையும் ஒவ்வொரு உத்தியோகச்சாலையும் பகுதி குறைக்கப்பட்டதனுலும், சிலரேமரணத்துக்குள்ளானுர்கள். இந்தக்கொடிய வியாதி ஸ்பெயின், பிரான்ஸ், முதலிய இடங்களிற் பிரவேசித்து அட்டூழியஞ் செய்ததாயினும் இந்தியாவில் இந்தநாட்களில் செய்து கொண்டிருப்பதைப்போல அத்தனை மரணங்களைக் கொடுத்ததில்லையென்று தெரிகின்றது. இந்த வித்யாஸம் ஏன் உண்டாயிற்று? சரியான வைத்தியம் செய்யப்படாததே இந்த வித்யாஸத்துக்கு முக்யகாரணமென்று சொல்லலாம்; உண்மையானதே. ஆயினும், வேறு காரணங்களும் இதனுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று ஊஹிக்க இடமிருக்கின்றது. ஏனெனில், இந்த வியாதி விசேஷமாக ஏழைகளிடம் புகுந்து பலவீனர்களையே அதிவிரைவில் சாவுக்குள்ளாக்கிக்கொண்டிருப்பதை யறிகின்றேம். சில மாதங்கட்கு முன்னர், பண்டங்களின் விலைவாசி ஏற்றமானது, ஜனத்தொகையிற் பெரும்பான்மையோரைப்பெரும்பசிக்கும் அசௌக்யத்துக்கும் ஆளாக்கி விட்டது. இந்தக் கஷ்டத்தில் அதிகமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறவர்கள், அற்றைக்கூலியாட்களே யென நன்ருகத் தெரியவருகின்றது. இப்படிப் பெரும்பசி புகுந்து பேரிடி இடித்துக்கொண்டிருக்கிறபோது எந்த விதமான வியாதி வந்தாலும் மரணத்தொகை அதிகமாகுமென்று ஊஹிக்க வேண்டியிருக்கின்றது. மரணத்தொகை ஏழைத்தரத்தாரிடத்தில் அதிகமும் மத்தியதரத்தாரிடத்தில் குறைவும் தனிகரிடத்தில் பெரும்பாலும் இல்லாமலுமிருப்பதே மேற்சொன்ன காரணத்தை வற்புறுத்திக்கொண்டிருக்கின்றது. சக்தி குறைந்தவர்களிடம் இந்தக்கொடிய வியாதி புகுந்ததானுல், அவர்களை அசக்தர்களாக்கிப் பிறகு தனது வேகத்

ணைக் காட்ட ஆரம்பிக்கின்றது. பிறகு அவர்பாடு அம்பலமாகாத்தான் முடிகின்றது. அத்தகையாருக்கு அப்போது தகுதியான மருந்தாகிலும் போஷணையாகிலும் இல்லாமலிருப்பதே மரணத்தை உறுதிப்படுத்திவிடுகின்றது. அநேகமாக இந்த வியாதிபரவியிருக்கும் இடங்களில் பால்விலை அதிகப்பட்டிருக்கின்றது. அப்படி யதிகம் கொடுத்தாலும் நல்ல பால் அகப்படுகின்றதுமில்லை, சென்னையில் எவ்வளவு விலைகொடுத்தாலும் பாலே கிடையாதிருந்த காலமுமுண்டென்று தெரிய வருகின்றது. சூரியாஸ்தமனத்துக்குள் பெரும்பாலும் பால் விற்பனை முடிந்து விடுகின்றது. இந்திய ஜனங்களுக்குப்பெரும்பாலும், எந்தவிதமான வியாதிகட்கும் பாலே முக்கிய பத்திய பதார்த்தமாக இருக்கின்றது.

இந்தியாவில் சில பத்துவருஷங்களாகப் பலவகைப்பட்ட துன்பங்கள் இதேமாதிரியாக உண்டாகிக் கொண்டிருக்கின்றன. பஞ்சகாலங்களில், சாதாரணப் பசியால் நேர்டும் மரணங்களைக்காட்டிலும், இது போன்ற கொள்ளைநோய்களால் ஏற்பட்டிருக்கும் மரணக்கணக்குகள் அதிகமாக இருந்திருக்கின்றன. இவ்வகைச் சாவுகட்குப் பஞ்சமே முக்கியகாரணமாகவும், பஞ்சம் அதிகப்படுவதற்குத் தொழிற்றுறைகளின் தரித்திரமே அதிமுக்கிய காரணமாகவும் தெரிந்துகொள்ளுகிறோம். ஆனல், மேலாகப்பார்க்கும் ஒருவருக்குக்கொள்ளைநோய்தான் மிகுதியும் மரணவரியை வாங்குகின்றது' என்பது தான் கவனத்துக்கு வரலாகும். அதுபோலவே இப்போது நேர்ந்திருக்கும் இந்தக்கொள்ளைநோயால் உண்டாகிக்கொண்டிருக்கும் மரணவிஹிதங்களும், மேற்சொன்ன காரணத்தினையே விளக்கிக்கொண்டிருக்கின்றன.

இப்போது முனிஸிபல் அதிகாரிகளும் வைத்தியச்சங்கத்தாரும் இந்த வியாதியைப் போக்கவேண்டிய முயற்சிகளைச் செய்துகொண்டிருப்பதினின்றும், அவரது மனோத்ஸாகத்தைக் குறைக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் இதனை எழுதுகின்றோமில்லை; ஆனல், இதன் மூலகாரணமாகிய பசியைத் தொலைத்து, இது

போன்ற வியாதிகள் உட்புகாவண்ணங்களான தடுக்கு முறைகளையே மிகுதியும் கவனிக்கவேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றோம். மேலும், இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வியாதிகளைப்போக்கும்முறைகள், மிகுதியும் பிரயோஜனத்தைதந்து, வியாதியைக் கண்டித்துவிடும் என்றெண்ணுவதற்கும் இடம் காணப்படவில்லை; ஏனெனில், இவ்விதப்போக்கு முறைகள் விசேஷமாக நகரப்பிரதேசங்களில் மாத்திரம் கவனிக்கப்படுகின்றனவேஅன்றி, கிராமாந்தரங்களில், பெரும்பாலும் கவனம் செலுத்தப்படாமலே இருக்கின்றது. நகரப்பிரதேசங்களிலுங்கூட இம்முயற்சி ஒரு அளவுக்குள் அடங்கியுள்ளதாகக் காணப்படுகின்றது.

இப்போது பரவிக்கொண்டிருக்கின்ற இந்த வியாதியைப் போன்ற பல வியாதிகளாலும் இந்தியாவானது உதவியற்றதாக எத்தனைகாலங்கள் கடக்கக்கூடும்? இந்த வியாதியைப் போக்கும் முறைகளையுபயோகித்து உதவுவதோடுகூட, இனி இம்மாதிரியான கொள்ளை வியாதிகள் இந்தியாவில் நுழைந்து பீடிக்கா வண்ணமான பெருமுயற்சியையும் அவ்வியாதிகளைத் தடுக்கும் முறைகளையும் உபயோகித்து உதவுமாறு மஹோபகாரிகளையும் காருண்ய கவர்ன்மெண்டாரையும் நாம்பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்ளுகிறோம். அம்முறையானது தொழின்முறைகளை அதிகப்படுத்திக் குடிகளுக்குப் பசியாது உண்டு ஜீவிக்கும் வழிகளையுண்டுபண்ணிக் கொடுக்க வேண்டுமென்பதே யாகும். ஒரு சமயம் கனம் பண்டித மதன மோஹன மாளவியர் சீர்திருத்தமுறையைப் பற்றிப்பேசினபோது பின்வரும் சாரம் கவனிக்கப்படுகின்றது:—இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய ஆட்சிகாலம் முதல் இந்நாள்வரையில் ஜனங்களது பலத்தை யதிகப்படுத்தும் உத்தேசத்துடன் எடுத்துக் கொண்ட முறைகளெல்லாம் தோல்வியடைந்து வந்திருக்கின்றனவே யன்றி வெற்றி பெற்றதன் அடையாளமாகச் சொல்வதற்கு ஏற்ற காரணங்கள் புலப்படவில்லை. ஏனெனில், அம்முறைகள் செய்யப்படவேண்டிய அளவுசெய்யப்படாமையே காரணமாகின்றது. ஜனப்பிரதிநிதிகளோ வெனின், தங்கள்தேசத்தாரது நன்மையையும் முற்

போக்கையுங் கருதி யுழைத்து உபந்யஸித்து மன்றாடுகின்றார்கள், எனினும் காருண்ய கவர்ண்மெண்டார் அவர்சொல்வனவற்றை முற்றும் கவனித்து உதவக்கூடிய காலம் இன்னும் ஏற்படாமலப்படியே இருந்துகொண்டிருக்கின்றது." தற்போது தோன்றியிருக்கும் இந்தக்கொள்ளை நோயின் அதிகாரகாலத்திலாவது, நமது பண்டிதர் அபிப்பிராயப்பட்டபடியே, நமது காருண்ய கவர்ண்மெண்டார் இந்தியரின் மேல் தயைகூர்ந்து தொழின்முறைகளைப் பெருக்கியும் பெருக்கும்படி யுதவியும், இந்தியதேசத்தில் கொள்ளைநோய்களே னும் அந்நோய்களை வந்து நுழையும்படி விண்ணப்பம் செய்து கொள்ளும் வறுமை நோயேனும் வரவொட்டாமல் தடுக்கவேண்டிய முயற்சிகளைச் செய்வார்களென்று நம்புகின்றோம். பொது ஜனங்களும் பொதுநலப்பிரியர்களும் பரோபகாரிகளும் பணக்காரர்களும் இவ்விஷயத்தில் முன் வந்துநின்று தங்களாலியன்ற பேருதவிகளைச்செய்து இந்தியதேசத்தையுன்னதநிலைக்குக்கொண்டுவர முயல்வார்களென்றும் உறுதியாக நம்புகின்றோம்.

பத்திராதிபர்.

அரிசிமார்க்கட்டின் நிலவரம்.

உணவுப்பொருள்களை இந்திய கவர்ண்மெண்டார் கட்டுப்படுத்தப்போவதாக சமாசாரம் கிடைத்ததும், ரங்கூனில் சிலபிரபல அரிசி வியாபாரிகள் அரிசிவிலையை 15 ரூபாய் அதிகமாக உயர்த்திவிட்டார்கள். கவர்ண்மெண்டார் அதிக விலைகொடுத்து வாங்கிக்கொள்ளட்டும் என்பது அவர்களுடைய கருத்து. அறுவடை காலமும் சமீபித்து விட்டதாயினும், அரிசி விலை குறையுமென்று நினைப்பதற்கில்லை. ஜாவா லைசென்ஸ்கள் இன்னும் ரத்து செய்யப்படவில்லை.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள்.

1.	ஸிலோன்	470,654
2.	மோரிடிஸ்	255,697
3.	மலேநாடுகள்	172,465

4.	ஸ்ட்ரெயிட்ஸ்	82,055
5.	தென் ஆபிரிக்கா	169,000
6.	பிரிட்டிஷ்கயானு	136,528
7.	ட்ரினிடாட்	120,704
8.	பிஜி	52,675
9.	ஜமெய்க்கா	20,176
10.	கிழ் ஆபிரிக்கா	11,886
11.	கானடா	5,000
12.	யுகாண்டா	1,622
13.	டச்சு கயானு	26,847
14.	உவிண்ட்வெர்ட் தீவுகள்	5,000
15.	ஸிஷெல்ஸ்	420

சு—மி.

வைத்தியக் குறிப்புகள்.

ரணங்களையாற்றக் கடல்நீர்.

M. T. F. பனுரி என்பவர் " அகாடமிக் டி மெடிஸன் " என்னும் பிரஞ்சு வைத்தியப் பத்திரிகைக்குத் தமது அனுபவத்தில் கண்ட முறையொன்றை எழுதுகிறுர்.

" கடலோரங்களில் சிலருக்கு சஸ்திர சிகித்சை செய்ய வேண்டி நேரிடுகையில், சமுத்திர ஜலத்தை எடுத்து இருபது நிமிஷம் வரையிலும் கொதிக்கவைத்து வடிகட்டி ரணங்களைக்கழுவி வந்ததில் சீக்கிரத்தில் அந்தரணங்கள் ஆறிவரத்தொடங்கின. இவ்வாறு கழுவுவதை யடிக்கடியும் புதுப்பித்து வந்தால், ரணம் சுத்தமாவதும் ஆறுவதும் இன்னும் வெகு சீக்கிரத்தில் நடைபெறும். C. H. மானுட் என்பவருடன் நான் இந்த விஷயமாகச் சமீபத்தில் பேசியபோது, சாதாரண உப்பு நீரும் இவ்வித காரியங்களில் நன்கு உபயோகப் படுவதாக தாமும் அறிந்திருப்பதாகவே அவர் சொன்னுர்.

பாம்புகடிக்கு மருந்து.

வாழை மரத்தின் ரஸம் பாம்புகடிக்கு மருந்தென்று சமீபத்தில் கொழும்பில் பரீக்ஷை பார்த்துத் தீர்மானம் செய்தார்கள். ஒரு நாயைப் பாம்புகடிக்கச் செய்து அதற்கு விஷம் ஏறி அவஸ்தைப் படுகையில் வாழை மரத்தினது ரஸத்தைக்கொடுத்தார்களாம். உடனே அது சௌக்கியமடைந்ததாம். ஆகவே பாம்புகடிக்கு வாழை மரத்தின் ரஸத்தைக் கொடுக்கலாமென்று கொழும்பு வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். வைத்தியகலாநிதி.

உள்ளூர் வர்த்தமானம்.

காலநிலை:—செங்கதிரோன் வெம்மை அதிகம். குளங் குட்டை ஊருணிகளில் தண்ணீர் மிகக் குறைவாயிருக்கிறது ஜனங்கள் வருண பகவான் கருணையை எதிர்பார்த்தவண்ணமாயிருக்கிறார்கள்.

அகவிலை:—நெல் ரூபாய்க்கு 6-படியாக விற்றுவருகிறது. சில நகரங்களில் தனவந்தர்கள் ஏழைகளின் பரிதாபநிலைமைக்கிரங்கி, ரூ. 1-க்கு 8 அல்லது 8½-படி விற்கும்படிச் செய்துவருகிறார்கள். இவ்வூரிலும் தனவந்தர்கள் அம்மாதிரி உதவிபுரிவார்களென நம்புகிறோம்.

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்,

கோநகர், ஞானசம்பந்த நற்சபை விநாயகசதுர்த்தி.

காலயுக்திஸு ஆவணிமீ உ௪வ திங்கட்கிழமை காலையில் ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கும் சைவசமயாசாரியர் நால்வர்க்கும் அபிஷேகாராதனைகளும், நண்பகலில் விநாயகப்பெருமான் ஆகுவாகனத்திலெழுந்தருளி வீதிவலம்வருதலும், பிராமணபோஜனமும், சிவனடியார் நகரத்தார் முதலியோர்க்கு விருந்தும் நடைபெற்றன. பிற்பகல் 4-மணி முதல் 8—30-மணி வரை ஸ்ரீ முத்துராமசாஸ்திரியாரவர்கள் விநாயகப்ரபாவத்தைப்பற்றி நன்கு உபந்நியஸித்தார்கள். இரவு 9-மணிக்கு ஹார சந்தனதாம்பூலாதிகள் வழங்கச் சபை மங்களகரமாய் நிறைவேறிற்று. சம்பந்தன்.

கண்டனூர்.

ஸ்ரீ மீநாக்ஷி சுந்தரேசுவர ரீடிங் ரூமின் மூன்றுவதாண்டு நிறைவுவிழா.

ஆண்டிபட்டி ஜமீன்தாரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உபாக்ராசனுதிபதியும், கருவூர் நகரபரிபாலனத் தலைவருமான, கானடுகோத்தான் ஸ்ரீமாந் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் M. R. A. S. அவர்கள் அக்ராசனத்தில் மிகமேன்மையாய் நடைபெற்றது.

முதல்நாள் நடவடிக்கை.

நிகழும் காளயுக்திஞு ஆவணிமீ சஙிஉ (31—8—18) பிற்பகல் 5 மணிக்கு ஸ்ரீமாந் பெத்தாச்சிசெட்டியாரவர்களை அங்கத்தினர்கள், வித்துவான்கள் கனவான்கள் முதலானோர் இதற்காக அலங்கரிக்கப்பெற்ற அழகிய கொட்டகைக்கு வாத்தியகோஷங்களுடன் அழைத்துக்கொண்டு வந்தார்கள். பின்னர் பழய மடத்தின்கண் விளங்கும் செல்வவிநாயகருக்குத் தீபாராதனை பார்க்கப்பெற்றது. பின்னர் பிரும்மஸ்ரீ மீனுக்ஷிசுந்தரையரவர்கள் கடவுள் வாழ்த்துக் கூறினார்கள். பின்னர் ஸ்ரீமாந் தெ அரு. சித. இராமநாதன் செட்டியார் செய்த பிரேரேபணையை .புதுவயல் பிரும்மஸ்ரீ R, மீனுக்ஷிசுந்தரையரவர்கள் ஆமோதித்த அளவில் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்கள் அக்ராசனத்தமர்ந்தார்கள், பின்னர் அங்கத்தினர்களுக்காக ஸ்ரீமாந். தெ. அரு சித. இராமநாதன் செட்டியார் வந்தனோபசாரபத்திரம் வாசித்து அக்கிராசனுதிபதியவர்களுக்குக் கொடுத்தார்கள். பின்னர் காரியதரிசியான ஸ்ரீமாந் சி. ராம. அரு. சொ, சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் மூன்றுவதாண்டின் அறிக்கைப்பத்திரம் படித்தார்கள்.

பின்னர் தலைவரவர்கள் முன்னுரையாக வாசகசாலையின் ஆவசியகத்தைப் பற்றியும் அதனாலுண்டாகும் நன்மைகளைப்பற்றியும் சவிஸ்தாரமாகவும் இனிமையாகவும் கூறியதுடன் இந்த வாசகசாலைக்கு 80 அங்கத்தினர்களிருந்து ஒற்றுமையுடன் சற்காரியங்களில் முயற்சிப்பது விசேஷமாக இருக்கிறதென்றும் இந்த ஊரைநோக்க இன்னும் அதிக அங்கத்தினர்கள் இருக்கவேண்டுவது அவசியமாகுமென்றும் கூறினார்கள். பின்னர் லாலுகுடி பிரும்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியாரவர்கள் "புருஷார்த்தம்" என்ற விஷயத்தையும், புதுவயல் ஆங்கில ஆசிரியரான பிரும்மஸ்ரீ R மீனுக்ஷிசுந்தரையரவர்கள் 'யாரைப் பின்பற்றலாம்' என்ற விஷயத்தையும், விளக்கமாகவும் சாதுர்யத்துடனும் உபந்நியாசம் செய்தார்கள், தலைவரவர்கள் ஒவ்வோர் உபந்நியாசத்திற்கும்

தகுந்தபடி தாயுமானூர் முதலான மேற்கோள்களை மேற்கொண்டு விநயமாக அபிப்பிராயங்கூறினார்கள். பின்னர் அநுஷ்டானுதிகள் நிகழப்பெற்றதும் குன்றக்குடி பிரும்மஸ்ரீ சதாசிவப்பிரும்மம் அவர்கள் "ஆலாஸ்ய மாஹாத்மியம்" என்ற விஷயத்தையும், காரைக்குடி கம்பராமாயணப்பிரசாரகரான பிரும்மஸ்ரீ மோ. வெ, கோவிந்தராஜ ஐயங்காரவர்கள் "இராமர் வனமும் கைகேயி மனமும்" என்ற விஷயத்தையும் பக்தியுடனும் பல பிரமாணங்களுடனும் உபந்நியாசஞ் செய்தார்கள். பின்னர் தலைவரவர்கள் அவைகளுக்கேற்றவாறு அபிப்பிராயங் கூறினார்கள். இவ்விழாவிற்காகத் தேவகோட்டை டிவிஷனல் ஆபீஸரான மகா-ா-ா-ஸ்ரீ அநந்தராமையரவர்கள் முதலான பிறவூர் கனவான்களும் இவ்வூர் கனவான்களும் பெண்பாலர்களுமாக சுமார் 500 ஜனங்களுக்கு மேலாக வந்திருந்தார்கள். மேற்கண்டபடி இராத்திரி 10 மணியளவில் கடவுள் வாழ்த்துடன் முதல்நாள் நடவடிக்கை பூர்த்தியாயிற்று.

இரண்டாவதுநாள் நடவடிக்கை.

கசுஉ (1—9—18) முற்பகல் 10 மணிக்கு கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்று ஆலங்குடி பிரும்மஸ்ரீ பண்டித அ. கோபால ஐயரவர்கள் "எண்ணே முத்திநமேல்" என்ற விஷயத்தையும், இவ்வூர் ஸ்ரீமாந் ராம. ப, கு. ப, இலக்குமணச்செட்டியாரவர்கள் "பொறுமை" என்ற விஷயத்தையும், புதுவயல் ஸ்ரீமாந் அள. குப. கும. இராமசாமி செட்டியார் ஆங்கிலபாஷை மூலம் "ஜாதிவரையறையின் ஆவசியகம்" என்ற விஷயத்தையும், பலவான்குடி சித்திவிநாயக வித்தியாசாலைத் தலைமையாசிரியரான ஸ்ரீமத் குமாரவீரையரவர்கள் "புலவர் நோக்கம்" என்ற விஷயத்தையும், சிவகெங்கை வக்கீல் மகா-ா-ா ஸ்ரீ ஸ்ரீநிமுருகம்பிள்ளையவர்கள் "வித்தியாசாலையின் ஆவசியகம்" என்ற விஷயத்தையும், புதுவயல் ஸ்ரீமாந் எ. பெரி. வீர வீரப்பசெட்டியார் ஆங்கிலபாஷைமூலம் "நமது மக்கள் கடமை" என்ற விஷயத்தையும் பல மேற்கோள்களால் விரித்துச்சொல்லி அனைவரும் சந்தோஷம் அடையும்படியாக உபந்நியாசம் செய்தார்கள். அதன்பின் ஆண்டிப்பட்டி ஜமீன் சமஸ்தான வித்துவான் ஸ்ரீமத் திருஞானசம்பந்தக் கவிராயரவர்கள் பள்ளத்தூர் ஆங்கிலஆசிரியரான பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் ஆகிய இருவரும் மேற்குறிப்பிட்ட "வித்தியாசாலையின் ஆவசியகத்தை" பலசெய்யுட்கள் கதைகள் மூலம் விளக்கமாக ஆமோதித்தார்கள். பின்னர்த் தலைவரவர்கள் ஒவ்வோர் உபந்நியாசத்திற்கும் தகுந்தபடி அழகாக அபிப்பிராயங் கூறியதுடன், இவ்வூருக்கு வித்தியாசாலை வேண்டியது அவசியமென்றும், இவ்வூர் நகரத்தார்கள் நல்ல காரியங்களையெல்லாம் விசேஷமாக உணர்ந்தவர்களென்றும் சரியான காலத்

தை யெதிர்பார்த்திருந்தபடி சமீபத்தில் வித்தியாசாலை ஸ்தாபிப்பார்களென்று நிச்சயமாக நம்புவதாகவும் கூறினார்கள். பின்னர்க் கடவுள்வாழ்த்துடன் 1மணியளவில் முற்பகல் நடவடிக்கை பூர்த்தியாயிற்று.

பிற்பகல்.

4 மணிக்குக் கடவுள் வாழ்த்துக் கூறியதும் காரைக்குடி ஸ்ரீமாந் சொ. முருகப்பசெட்டியாரவர்கள் "நாட்டுக்கோட்டையாரின் தற்காலநிலைமை" என்ற விஷயத்தையும், காரைக்குடி பிரும்மஸ்ரீ சு. சிதம்பரஐயரவர்கள் "வறுமையிற் செம்மை" என்ற விஷயத்தையும், பலவான்குடி ஸ்ரீமாந் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்கள் "பிறர் பொருள் விழைவுறுவான்" என்ற விஷயத்தையும், நன்றாய் உபந்நியாசஞ் செய்தார்கள். அதன் பின்னர் காரைக்குடி எஸ். எம். எஸ். ஸ்கூல் உபாத்தியாயரான பிரும்மஸ்ரீ இராமாநுஜ ஐயங்கார் B. A: அவர்கள் இரசாயனசம்பந்தமான சிலசெய்கைகளைப் பலகருவிகளாற் காண்பிவித்ததுடன் அவைகளின் உண்மைகளை விளக்கி உபந்நியாசஞ் செய்தார்கள். அவர்கள் காந்தமுதலான பொருள்களின் சேர்க்கையால் இம்மாதிரி நிகழுகின்றன என்று சொல்லுதற்கு முன்னர்க் காட்டுவித்த நடவடிக்கையைப் பார்த்து ஜாலவித்தையோவென்றெண்ணியவர்கள் அதன் தன் உண்மையைத்தெரிவித்ததும் ஆச்சரியத்துடன் அவைகளின் இயற்கை யமைப்பை அறிந்தார்கள். பின்னர் ஒவ்வொரு உபந்நியாசத்திற்கும் தகுந்தவாறு தலைவரவர்கள் அபிப்பிராயங்கூறினார்கள். பின்னர் அனுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு அனைவரும் வந்ததும், லாலுகுடி பிரும்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரியாரவர்கள் "பரோபகாரம்" என்ற விஷயத்தையும், புலிசை ஞானியார் மாணவர்கழகக் காரியதரிசியான திருக்கோவலூர் ஸ்ரீமத் ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் நற்றுணை என்ற விஷயத்தையும், விஸ்தரித்து இனிமையாக உபந்நியாசம் செய்தார்கள். பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் ஒவ்வொரு உபந்நியாசத்திற்கும் சாதுர்யமாக அபிப்பிராயங்கூறியதுடன் இந்த மீடிங்ஙுமின் அங்கத்தினர்கள் பொதுநலங்களில் சிரத்தையுள்ளவர்களாகவும், ஒற்றுமையுள்ளவர்களாகவும், பெரியகாரியங்களையும் செவ்வையாக நடத்தத்திறமையுள்ளவர்களாகவும், இருப்பது மெச்சத்தக்கதென்றும், இத்தகைய மீடிங்கும் இன்னும் அதிக முன்னேற்றத்தை அடையக்கூடிய தோற்றத்துடன் விளங்குகிறதென்றும், அவ்விதம் நடைபெறவேண்டித் திருவருளைப் பிரார்த்திக்கிறேன் என்றும் சொன்னார்கள். பின்னர் ஸ்ரீமாந் தெ. அரு. சித. இராமநாதன் செட்டியார், அக்கிராசனாதிபதி வித்துவான்கள் சபையோர்கள் மீடிங்ஙுமின் அக்கிராசனாதிபதி அங்கத்தினர்கள் முதலானோர்களுக்குத் தனித்தனி வந்த

னோபசாரங்கூறியதுடன் இவ்விழாவிற்கு வரமுடியாததைப்பாராட்டியும் ரீடிங் ரூம் எல்லாகலன்களை யடையவேண்டியும் அயலூர்களிலிருந்து பலரால் அனுப்பின தந்திகள் காகிதங்களைப் படித்தார்கள். பின்னர்த் தற்காலம் நடைபெறும் ஐரோப்பா யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கும் நேசக்கக்ஷியாருக்கும் ஜெயங்கிடைக்க வேண்டுமென்று தலைவரவர்கள்செய்த பிரேரேபணையைச்சபையோர் அங்கிகரித்தார்கள். பின்னர் அக்கிராசனாதிபதி வித்துவான்கள், முதலானோர்களுக்கு ஹாரசந்தனாதி உபசாரங்கள் செய்யப் பெற்றுக் கடவுள் வாழ்த்துடன் மங்களகரமாக விழாவானது நன்கு நிறைவேறியது. விழாவின் இரண்டுநாட்களில் இவ்வூர் பிரும்மஸ்ரீ மீனாக்ஷிசுந்தரஐயரவர்களும், தேவகோட்டை ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகரவர்களும் இராமச்சந்திரபுரம் ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்போதகாசிரியரான பிரும்மஸ்ரீ திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்களும், தேவாரம் முதலான அருட்பாக்களை இனிமையாக ஓதினார்கள்.

இவ்விழாவானது அக்கிராசனாதிபதி முதலான வித்துவான்களின் திறமையாலும், சபையில் அறிவுளார் பலர் கூடியிருந்தமையாலும், வந்திருந்தவர்களுக்குச் செய்த உணவு முதலான உபசாராதிகளாலும் வெகுசிறப்பாக விளங்கியது இதன் பயனாக முன்னுள்ள 80 அங்கத்தினர்களுடன் 12 கனவான்கள் அங்கத்தினராக முன்வந்திருப்பதும், “ வித்தியாசாலை ” ஸ்தாபிக்கவேண்டி எல்லா அங்கத்தினர்களும் மிகுந்த சிரத்தை கொண்டிருப்பதும் விஷேமாகப்பாராட்டத் தகுந்ததாகும்.

எல்லாவகையாலும் விழா நன்கு நிகழச்செய்த எல்லாம்வல்ல இறைவனாகிய ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரரைப் பிரார்த்திக்கிறேன்,

சுபம்!

காரியதரிசி.